291

(உ.) உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடங்களிலிருந்து பேசுதல்.

* **திரு. இராம. அரங்கண்ணல்** : பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம் சபை மரபுப்படி எந்த ஒழுங்குப் பிரச்னையை அல்லது பிரச்னைகளை எழுப்பவேண்டுமென்று சொன்னாலும் உங்களால் ஒதுக்கப் பட்டுள்ள இடத்திலிருந்து, அந்த இடத்திலிருந்துதான் அந்தப் பிரச்னையை எழுப்பவேண்டும். ஆனால் எந்த இடத்திலிருந்து கனம் உறுப்பினர் அப்பிரச்னையை எழுப்பினார்கள்? எந்த விதிக் கூட்டுப்பாட்டு எழுப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திலிருந்து பேசவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. (ஆரவாரம்.) மதிப்பிற்குரிய உறுப்பினர் 'சொந்த விளக்கம் கூற விரும்புகிறேன்' என்றார்கள். சொந்த விளக்கம் எப்போது கூறலாம் என்றால் அவர்களைப்பற்றி யாராவது பேசியிருந்தால் கூறலாம். அவர்களைப்பற்றி நான் பேசிய காரணத்தினால் அவர்கள் சொந்த விளக்கத்தைச் சொல்ல நான் அனுமதிக்கிறேன்.

### 4. சொந்த விளக்கம்—வினா நேரம் இல்லாமமை குறித்து.

THIRU K. VINAYAKAM : I was glad to know from the Chair that at least ninteen days would have to elapse before the answer could be got ready so as to enable the Minister to reply. This Assembly came into being on the 1st March and I have given notice of questions on that very day. To-day is 21 I believe, twenty days have elapsed and a reasonable time has been given to the Government. I would like to know why they are not in a position to got the answers.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : கேள்விகள் அனுப்ப ஒரு உறுப்பினருக்கு உரிமை எப்போது இருக்கிறது என்றால், அவர் பிரமாணம் எடுத்து சபையின் உறுப்பினராக ஆன பிறகுதான் அவருக்கு உரிமையென்று விதியிருக்கிற காரணத்தினால், அதற்குப் பிறகு 19 நாட்கள் ஆகியிருந்தால் அவர் தனியாக என்னிடம் தெரிவித்தால், அவசரப்படுத்தி கேள்விகளுக்குப் பதில் கிடைக்க ஏற்பாடு செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

இப்போது அடுத்த அலுவல். 1966–67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை அவையின் முன் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

### 5. 1966–67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள்—பேரவையின் முன் வைத்தல்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : சட்டமன்றத் தலைவர் அவர்களே,

1966-67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை மன்றத்தின்முன் வைக்கின்றேன். மானியக் கோரிக்கைகளை ... விரிவான விவர அறிக்கை ஒன்றும் ...று கூறி, இத் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை ...வேண்டுமாறு கேட்டுக்கொள்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

மொத்தம் ஏறக்குறைய 63 கோடி ரூபாய் ஒதுக்கும்படி வேண்டப்படுகிறது. ஆனால், இதில் சுமார் 16 கோடி ரூபாய் மட்டுமே வருவாய், மூலதனக் கணக்குகளில் அடங்குகிறது.

2. இப்போது வேண்டப்படும் இந்த உயரிய நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி நேற்று சபைமுன் வைக்கப்பட்ட திருத்த மதிப்பீடுகளில் எதிரொலித்துள்ளதைக் காணலாம். நிதி ஆண்டின் முதல் நான்கு திங்கள்கள் அல்லது சில சமயங்களில் முதல் ஆறு திங்கள்களைப் பற்றிய கணக்குகளின் அடிப்படையில், அக்டோபர், டிசம்பர் திங்கள்களுக்கிடையே இத் திருத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு அரசாங்கத் துறைகள், ஜனவரி, பிப்ரவரி திங்கள்களில் தங்கள் தேவைகளை மறு ஆய்வு செய்து மதிப்பீடுகளை மீண்டும் அரசாங்கத்துக்கு அனுப்புகின்றன. இந்த நடைமுறையில் கூடுதல் நிதி வழங்குமாறு கேட்கப்படுவதில் சிலவற்றை ஒப்புக்கொண்டு வகை செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது சபை முன்புள்ள இறுதித் துணை மதிப்பீடுகள் பற்பல துறைகளில் அண்மையில் ஏற்பட்ட செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். இவை இதற்கு முந்திய ஆண்டுகளில் இருந்தது போலவே, திருத்த மதிப்பீடுகளுக்கு மேல் ஓரளவு உயர்வினைக் குறிக்கின்றன. இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் புயல் துயர் தணிப்பு வேலைகள், பொதுத் தேர்தல்கள் நடத்துவது ஆகியவற்றிற்கு ஆன செலவுகள் சம்பந்தமாக ஏற்பட்ட உயர்வினையும் குறிக்கின்றன.

3. இப்போது வேண்டப்படும் நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி, பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதைப்பற்றியது என்பதை இம் மன்றம் கவனித்திருக்கும். இதற்கென்று 47.05 கோடி ரூபாய் வகை செய்யக் கருதப்பட்டுள்ளது. இதில் உண்மையாக 3.96 கோடி ரூபாய் அளவிற்குத்தான் செலவின் உயர்வு ஏற்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, நடப்பு ஆண்டிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய கணக்கு முறையின் காரணமாக இந்த நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப் புதிய நடைமுறையினால் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து மாநில அரசாங்கம் அதிகப்பற்றாக (Over draft) வாங்கும் தொகையில் குறைப்பு ஏற்படும் ஒவ்வொரு தடவையும், அந்தக் குறைப்பு தமிழ்நாடு தொகு நிதியிலிருந்து (Consolidated Fund of Madras) இந்திய ரிசர்வ் பாங்கிற்குச் செலுத்தப்படவேண்டிய தொகையாகக் கருதப்படுகிறது. இதற்குமுன் அவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தொகையை இடையில் ஏற்படும் மாறுதல்கள் ஒவ்வொன்றினையும் கணக்கிடாமல், திங்கள் முடிவிலிருக்கும் நிலைமையை ஒட்டியே கணக்கிடுவது வழக்கமாய் இருந்தது. தணிக்கைத் துறையின் கருத்துரைகளுக்கிணங்க ஏற்பட்டுள்ள இந்தப் புதிய நடைமுறையின் காரணமாக, அதிகப்பற்றாக வாங்கும் பணத்தையும் [illegible]ன் பணங்களையும் திருப்பிச் செலுத்துவதற்கான [illegible]ட்டப்படுகிறது. இதன்படி, இந்தத் [illegible]படி வேண்டப்படுகிற தொகைக்கு

M.L.A. Debates Vol I No. 5



1967

1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

நிகராக, வரவுகள் தலைப்பில் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து பெறுகிற தற்காலிகக் கடன்கள் என்ற தலைப்பின்கீழ் வரவு வைக்கப்படும். அதனால் இந்த நிதி ஒதுக்கலினால் மாநில அரசாங்கத்தின் நிதி ஆதாரங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாவென்று கூற விரும்புகிறேன். நடப்பு நிலவரப்படி நிதி ஆண்டின் இறுதியில் இந்திய ரிசர்வ் பாங்கியிடமிருந்து அதிகப் பற்று வாங்க வேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

4. வருவாய்க் கணக்கில் வகை செய்துள்ள தொகையில் பெரும்பகுதி, 1966 டிசம்பரிலிருந்து அரசாங்கப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப் படி விதங்களில் ஏற்பட்டுள்ள உயர்வினைக் குறிக்கிறது. 1966 ஜூன் திங்களில் ஒப்பளிப்பு வழங்கிய அகவிலைப் படி வீதங்களின் உயர்வுக்கென "71-பல்வகை" என்கிற தலைப்பின்கீழ் முதல் துணை மதிப்பீடுகளில் செய்திருந்த மொத்த நிதி ஒதுக்கமானது, இப்பொழுது அந்தந்த வரவினத் தலைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நான்காவது பொதுத் தேர்தலை நடத்தியதற்கான செலவுகளும் இந்த உயர்வுகளின் ஒரு பகுதியைக் குறிக்கின்றன. போலீஸ், பொது நிர்வாகம், வேளாண்மை, பொதுப் பணிகள் போன்ற தலைப்புகளின்கீழ் வருவாய்க் கணக்கில் முக்கியமாக உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. போலீஸ், பொது நிர்வாகம் இவற்றின்கீழ் ஏற்பட்டுள்ள உயர்வுகள் அகவிலைப் படி உயர்வையும், பொதுத் தேர்தல்கள் குறித்து ஏற்பட்ட பயணப்படிச் செலவுகள், எதிர்பாராச் சில்லறைச் செலவுகள் இவற்றிற்கான உயரிய செலவுகளையும் முக்கியமாகக் குறிக்கின்றன. தரமான வித்துக்கள் திட்டம், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு வகைசெய்தல் போன்ற முக்கியமான சில திட்ட வேலைகளுக்கு அதிகச் செலவு ஆனதால், வேளாண்மையின்கீழ் செலவினம் உயர்ந்துள்ளது. இது ஓரளவுக்கு அந்தந்த வருவாய்த் தலைப்பில் கிடைத்துள்ள அதிக வருவாயின் மூலம் சரிக்கட்டப்பட்டுள்ளது. புயலால் சேதமடைந்த கட்டிடங்களைச் செப்பனிடுவதற்கான செலவு காரணமாக பெரும்பாலும் பொதுப்பணிகளின்கீழ் செலவின உயர்வு ஏற்பட்டுள்ளது.

5. மூலதனக் கணக்கில் ஏற்பட்டுள்ள உயர்வில் பெரும்பகுதி, உணவு தானியங்களில் அரசாங்க வாணிபத்தைக் குறிக்கிறது. மாநில அரசாங்கம் கோதுமையிலும் கோதுமைப் பண்டங்களிலும் அதிக அளவில் வாணிபம் நடத்துவதால், இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. விற்பனைமூலம் அதிக வரவுகள் கிடைத்துள்ளதால் இந்த உயர்வு சரிக்கட்டப்பட்டுள்ளது. 64/67

6. துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய செயற்குறிப்புகளைப்பற்றி விவர அறிக்கையில் கொடுத்துள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் தவிர, சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லுவதற்கு வேறு முக்கிய கருத்து எதுவுமில்லை என்று கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்கவேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1967 மார்ச் 21

## (6) 1967–68-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம்—பொது விவாதம்

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** 1967–68-ம் ஆண்டுக்குறிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் இப்பொழுது நடைபெறும். நேரம் மிகக் குறைவாகவே இருக்கிறது. 12-30 மணி அளவில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியாக வேண்டும். அதன் பின் மாண்புமிகு முதலமைச்சர் உரையாற்றியாக வேண்டும். ஆகவே, இதற்கு இடையில் இருக்கும் படியான நேரத்தில், ஒரு உறுப்பினர் 10 நிமிடங்கள் பேசுவதாக இருந்தாலும் மொத்தம் 12 பேர்களுக்கு மட்டுமே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் நிலைமை இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். பன்னிரண்டு உறுப்பினர்களைத் தவிர மேற்கொண்டு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லையே என்று வருந்த வேண்டாம். எல்லோரும் கவர்னர் அவர்களின் உரைமீது பேசிக்கொள்ளலாம். இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, 1967–68-ம் ஆண்டுக்குரிய இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் முன்னதாக, முதன் முதலிலே இந்த பட்ஜெட் உரையிலே ஆக்கமான பல புதிய கருத்துக்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நான்காவது பொதுத் தேர்தலுக்கு முன்னதாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் முறையிலே புரட்சிகரமான திட்டங்களை இந்த பட்ஜெட்டிலே எதிர்பார்த்தோம். ஆனால், இந்த பட்ஜெட்டிலே புதிதாக எதுவும் காணவில்லை, புரட்சிகரமான மாற்றமும் வரவில்லை என்று முதன்முதலிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "Old wine coming in new bottles" என்று அந்த முறையிலே தான் இந்த பட்ஜெட்டானது இருந்துகொண்டே இருக்கிறது.

இந்த பட்ஜெட்டின் மீதான விவாதத்திலே கலந்துகொள்ளுகிற நான் முதன்முதலிலே நிலவரிக் கொள்கையைப் பற்றி எடுத்துக் கூறுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இந்த நிலவரிக் கொள்கையைப் பற்றிய கருத்தை இந்த மன்றத்தின் முன் வைத்தது. இந்த நிலவரிக் கொள்கையைப் பற்றி ஆய்வதற்கு நியமிக்கப்பட்ட ரெவின்யூ போர்டு அங்கத்தினர் இதைப் பற்றி ஒரு அறிக்கையையும் அரசாங்கத்தின் கவனத்திற்குச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை இந்த அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக இந்த பட்ஜெட் அறிக்கையிலே நான் பார்த்தேன். அதைப் பற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தி இறுதியான முடிவை இன்னும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அந்த முடிவை மேற்கொண்ட பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தொகுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்த நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று எல்லா அரசியல் கட்சியினரும் இந்த மன்றத்திலும் வெளியிலும் எடுத்துக் கூறினார்கள். குறிப்பாக காங்கிரஸானது தொன்றுதொட்டே இந்த நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று பன்முறை எடுத்துக் கூறி வந்திருப்பதை இந்த மன்றத்தில் உள்ள எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த நிலவரியைப் பொறுத்த அளவிலே இது ஏழை விவசாயிகளை அதிகமாக பாதிக்கக்கூடிய ஒரு வரி என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாங்கும் தலையிலேதான் வரியை சுமத்தவேண்டும் என்ற சாதாரண நியதி இருந்த போதிலும், இன்று நில சீர்திருத்தம் வந்த காரணத்தினால் பெரிய நிலச்சுவான்தார்கள் ஒழிக்கப்பெற்றுவிட்டார்கள். ஆனாலும், நில சீர்திருத்தத்தினால் பரிபூரணமான வெற்றி அடைந்துவிட்டோம் என்று யாரும் நினைப்பதற்கு இல்லை. சுமார் 5,000 ஏகருக்கு மேலாக உபரியான நிலத்தைத்தான் நாம் நில சீர்திருத்த காண்கிறபொழுது, நிலச் சீர்திருத்த சட்டத்தினால் நாம் எவ்வளவு முற்பகல். 9-30
காண்கிறபொழுது, நிலச் சீர்திருத்த சட்டத்தினால் நாம் எவ்வளவு
வெற்றி காண்போம் என்று நினைத்தோமோ அந்த அளவுக்கு வெற்றி காணவில்லை. சோஷலிஸ சமதர்மத்தை நம்பியிருக்கிற ஆளும் கட்சியினராகிய நீங்களும், சமதர்மத்திற்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கிற ஒரு கட்சியாக நாங்களும் இருக்கிற காரணத்தினாலும், இந்த நிலவரியை இந்தப் பசலியிலிருந்து கண்டிப்பாக நிறுத்தும் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தாங்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலவரியைப் பொறுத்தவரையிலே சாதாரண ரிகார்டு மெயின்டென்ஸ்-க்கு வேண்டிய அளவாவது அதை நீடித்து வைக்க வேண்டுமா வேண்டாமா என்ற ஒரு கருத்து பல பகுதிகளிலிருந்தும் கூறப்படுகிறது. லாண்டு ரிகார்டு மெயின்டெனன்ஸ் சம்பந்தமாக பல சிக்கல்கள் ஏற்படும். பட்டாவானது ஒரு சாதாரண விவசாயிக்கு ஒரு புனிதமான டாகுமெண்டு அல்லது தஸ்தாவேஜு என்று சொன்னால் அது மிகையாகாது. அதை சரியான முறையில் பராமரிப்பதற்காக என்னென்ன வழிவகைகள் செய்யவேண்டும் என்பதை அரசாங்கம் உற்று கவனிக்கவேண்டும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று புதியதாக அதிகாரத்திற்கு வந்த அமைச்சரவை 'ஆஸ்டெரிடி' என்ற பெயரால் பல சீர்திருத்தங்களைச் செய்தார்கள். சிறு கார்களில்தான் தாங்கள் யாத்திரை செய்யவேண்டும், மற்றும் சம்பளங்களைக் குறைக்கவேண்டும் என்றெல்லாம் அவர்கள் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சீர்திருத்தங்கள் பொறுத்த வரையிலே எல்லா இலாகாக்களும் இவை அமுல் நடத்தப்பட்டால்தான் நல்லது என்று கருதுகிறேன். அரசாங்கத்தின் கையில் பலவிதமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். பல இலாகாக்களில் இன்று அதிகமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். சிக்கனம் என்ற முறையிலே,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 21

என்னென்ன வழிமுறைகளைக் கையாளவேண்டும் என்பதை சிந்திப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். பிளாக் டெவலப்மெண்டில் இருக்கிற பல பிரச்னைகள் பற்றியும் இன்று அதிகாரத்தில் இருக்கிற கட்சி அன்று பல ஆட்சேபனைகளையும் தெரிவித்தார்கள். இந்த பிளாக் டெவலப்மெண்டைப் பொறுத்த அளவில் என்னென்ன சீர்திருத்தங்கள் அவர்கள் செய்யப்போகிறார்கள் என்பதையும் இந்த பட்ஜெட் உரையிலே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், இது இடைக்கால பட்ஜெட் ஆகையால் ஜூலை மாதத்தில் இதைப்பற்றி பல நல்ல அம்சங்கள் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறோம். ஏதோ அவகாசக் குறைவினால் அதைப்பற்றியெல்லாம் விரிவாக அவர்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் இப்பொழுது சமர்ப்பிக்கவில்லை என்று தான் நான் கருதுகிறேன். ஆகவே, இந்த இலாகாவிலே இருக்கிற பல துன்பங்களையும், சிக்கல்களையும் அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் கூறுவதற்கு முற்படுவது உணவு பிரச்னை, உணவுப் பிரச்னையைப் பொறுத்த அளவிலே இந்த மன்றத்திலும், மன்றத்திற்கு வெளியேயும் தேர்தல் காலத்தில் இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கிற நீங்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். அதை நீங்கள் என்ன முறையிலே நிறைவேற்றப் போகிறீர்கள் என்பதை நீங்களே சற்று நிதானமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று உணவுக் கொள்முதல் செய்கின்ற முறையிலே பல மாற்றங்களை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். "டிகண்டிரோல்" செய்வார்கள் என்று வியாபாரிகள் அத்தனை பேர்களும் முனைந்திருந்தார்கள். அவர்கள் இன்று பெருத்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள் என்பதையும் பத்திரிகை வாயிலாக நாம் கண்டு கொண்டோம். முதல் அமைச்சர் அவர்களை அவர்கள் அணுகி கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டபொழுது, முதல் அமைச்சர் அவர்கள் மூன்று வருட காலம் வரையிலாவது வியாபாரிகள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற விலைக்கு அரிசி விற்பதற்கு முன்வந்தால், இதைப்பற்றி ஆலோசிக்கப்படும் என்று எடுத்துக்கூறினார்கள் என்று நாம் அறிகிறோம். அன்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் சுவரொட்டிகள் மூலம் பல காரியங்களைச் செய்வதாக பிரசாரம் செய்தார்கள். குறிப்பாக எங்கள் பகுதியில் ஒட்டியிருந்த சுவரொட்டியைப்பற்றி சொல்வது சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 'தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கூறி இன்னும் காங்கிரஸ் ஆட்சியா என்று சுவரொட்டிகளை பல இடங்களில் சித்தரித்து வைத்திருந்தார்கள். அந்த மாதிரியான சுவரொட்டிகள் இருந்தன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எல்லா மனிதர்களுக்கும் உணவு கொடுக்க



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதை நாங்களும் உணர்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால், இன்று இருக்கிற உணவு பங்கீட்டு முறை மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏதோ பாமிலி கார்டு சிஸ்டம் என்ற முறை இன்று அமுல் நடந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கிற உணவுப் பொருள்கள் சாதாரண மக்களுக்கு போதிய அளவிலே கிடைப்பதற்கில்லை, அதிலும் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ பிச்சை கொடுப்பது மாதிரி கொஞ்சம் உணவு கிடைக்கிறது என்று பொது மக்கள் தேர்தல் காலத்தில் என்னிடம் பல தடவையும் எடுத்துக்கூறினார்கள். அந்த மாதிரியான பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு அரசாங்கம் உருப்படியான திட்டங்களை செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், அதைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். அப்படியானால்தான் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த உணவுப் பங்கீட்டு முறையிலே சட்டபூர்வமான பல கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக நான் கேரள ராஜ்யத்தின் எல்லைப் பகுதியிலிருக்கிற ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த ஒரு நபர். அந்தப் பகுதியிலே உணவு தானியங்களை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கொண்டு போகக்கூடாது என்று இன்று சட்டபூர்வமாக வரையறுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் நிலத்திலிருந்து அறுவடை செய்து களத்திற்குக்கொண்டு போகவேண்டுமானாலும், இன்று இருக்கிற சட்டப்படி வேண்டுமானால் பிராஸிக்யூஷன் நடத்தலாம். அதே மாதிரி வீட்டிலே இருக்கிற உணவு தானியங்களை வெளியே களத்திற்கு கொண்டு போட்டால், அதற்காகவும் சட்டபூர்வமாக வேண்டுமானால் பிராஸிக்யூஷன் நடத்தலாம். இத்தகைய பல கஷ்டங்கள் இன்று இருக்கின்றன. இந்த கஷ்டங்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய திருத்தங்களைச் செய்யவேண்டும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நிலத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டு போவதற்கும், வீட்டிலிருந்து வெளியே தன்னுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு போவதற்கும் இந்தச் சட்டம் சரியான முறையில் திருத்தி அமைக்கப்பட்டால்தான் இன்று இருக்கிற கஷ்டமான நிலையைப் போக்க முடியும். பல செக் போஸ்டுகள் அமைந்திருக்கின்றன ராஜ்ய எல்லையில். கேரள ராஜ்யமும், தமிழ் நாடும் இடை இடையே கிடக்கிற காரணத்தினால், இந்த செக் போஸ்டுகளினால் பொது மக்களுக்கு பெருந் தொல்லைகளும், துன்பங்களும் விளைகின்றன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் கேரள ராஜ்யத்திற்கு தானியங்களைக் கடத்திச் செல்வதற்கு தடங்கல் ஏற்படுவதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பத்திரிகை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 21

வாயிலாக அறிகிறோம். அதற்கு முன்னாலும் அங்கு பலவிதமான செக்போஸ்டுகள் மூலமாகவும், அரசாங்க சிப்பந்திகள் மூலமாகவும் நல்ல முறையிலே பல காரியங்கள் செய்து வந்திருக்கிறார்கள். இந்த உணவு தானியங்களை அண்டைய கேரள ராஜ்யத்திற்கு கடத்திச் செல்வதன் காரணமாக எங்கள் பகுதியிலே உணவு தானியங்கள் பொறுத்த வரையில் பல கஷ்டங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. கள்ள வியாபாரிகள், கடத்தல் வியாபாரிகள் பல பேர்கள் கேரள ராஜ்யத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு பேர்களும் இந்தப் பகுதியிலே வந்து தலைச் சுமையாகவும், சைக்கிள்களிலும் தானியங்களை கடத்திச் செல்லும் சாதாரண நிகழ்ச்சி அந்தப் பகுதியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்களும், கேரள முதல் அமைச்சர் அவர்களும் இந்த உணவுக் கொள்கை சம்பந்தமாக ஏதோ பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் மூலம் 18,000 டன் உணவு கேரள ராஜ்யத்திற்குக் கொடுப்பதற்கு வாக்குறுதி கொடுத்தார்கள் நமது முதல் அமைச்சர் அவர்கள் என்று பத்திரிகைகளில் செய்தியை நாம் காண்கிறோம். கேரள இராச்சியத்திற்கு உணவு கொடுப்பதைக் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், தானியங்களைக் கடத்திச் செல்லுவதற்கு கேரள அரசாங்கத்தின் சிப்பந்திகள் உடந்தையாக இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், நமது சர்க்கார் முதலிலே தமிழகத்திலே இருக்கும் பிரஜைகளுக்கு உணவு கொடுக்க வேண்டியதுதான் இந்த அரசாங்கத்தின் தலையாய கடமை என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். ஆகவே, இந்த மாதிரிக் கஷ்டமான நிலையிலும், நல்லபடியான முறையில் தானியங்களை விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் உணவு தானியக் கொள்கையில் ஏதோ மாற்றம் வருவதாகவும், தென் மண்டலங்களை புனர் அமைப்புச் செய்யப் போவதாகவும் பத்திரிகையில் படித்தோம். அப்படி தென் உணவு மண்டலத்தை புனர் அமைப்புச் செய்வது தமிழகத்திற்கு நன்மையைப் பயக்குமா என்பதைப் பற்றி தாங்கள் நிதானமாக சிந்திக்க வேண்டும். அது தங்களுடைய ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். உணவு மண்டலங்கள் முன்பும் இருந்தன. ஆனால், அப்போது இருந்த அரசாங்கம் அது சரியானது அல்ல என்று தீர்மானித்து அதைக் கைவிட்டு விட்டது. தமிழகத்திலே உணவு ஒரு வேளை சற்று மிகுதியாக இருந்தபோதிலும், அண்டை மாநிலமான கேரளாவில் பற்றாக் குறை இருக்கிறது. அப்படிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு இந்தப் பகுதியிலிருந்து கடத்திக்கொண்டு போவதில் முனைகிறார்கள். அதுவல்லாமல் இந்தப்



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பற்றாக்குறை மாநிலத்தோடு நாமும், மிகுதியாக இருக்கின்றவர்களும், உணவு மண்டலத்தில் ஒன்று சேர்ந்தால், அது தமிழகத்திற்குத் தீமையைத்தான் விளைவிக்கும் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதைச் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். இன்றைக்குப் பார்க்கப் போனால், கேரள மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் காட்டவிரும்புகிறேன். அதுவல்லாமல், இந்த உணவு மண்டலத்தை மறுமுறையும் ஆரம்பிப்பது பொருத்தமானதுதானா என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே யோசிக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன். ஆந்திராவிலிருந்து நமக்கு எவ்வளவு உணவுப் பண்டங்களை வரவழைக்க முடியுமோ அவ்வளவு பண்டங்களையும் வரவழைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நம் பகுதி மக்களுக்கு உணவு சரியான வகையில் கொடுக்க முடியும். தேர்தல் காலத்தில் மக்களுக்கு பற்பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். அப்படி தேர்தல் சமயத்தில் கொடுப்பதும் சகஜம் தான். ஆனால் இப்பொழுது தேர்தல் முடிந்து விட்டது. அதிகாரத்திலும் இருக்கின்ற இந்த அமைச்சரவை அவைகளைப் பற்றி நல்ல முறையில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்; அப்படி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. கண்ட்ரோல்கள் வேண்டுமா வேண்டாமா, என்பதைப் பற்றி கொள்கை அளவில் அரசாங்கம் முடிவு செய்வதும் அவர்களுடைய கடமை என்பதையும் நாங்கள் உணருகிறோம். அவர்கள் மத்திய சர்க்காரோடு கலந்து ஆலோசித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதுதான் சிறந்ததாக இருக்கும். மத்திய சர்க்கார் 1971-லிருந்து வெளிநாடுகளிலிருந்து உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விடுவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு உணவுப் பற்றாக் குறைகள் இருக்கிறது. எல்லா மாநிலங்களோடும் சேர்ந்து மத்திய சர்க்கார் தன் காரியத்தைச் செய்தாக வேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசிகள் விஷம் போல ஏறிக்கொண்டு இருக்கின்றன. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். 1952-53-ல் இருந்த விலைவாசியை விட இன்றைக்கு பன்மடங்கு அதிகமாகியிருந்துக் கொண்டு இருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் மிக்க அதிகமாகி இருக்கிறது. அப்படி விலைவாசிகள் உயர்ந்திருக்கின்ற காரணத்தினால், எவ்வளவுதான் நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தாலும், வெற்றி பெறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் என்னென்ன காரியங்களை மேற்கொள்ளப்போகிறது என்பதை நாங்கள் இந்த உரையில் எதிர்பார்த்தோம். ஆனால், உருப்படியாக எதையும் காணவில்லை. அதனால் பொது மக்களும், நாங்களும் மிக்க ஏமாற்றம் அடைந்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 21

திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்றால், நம் ஐந்தாண்டுத் திட்டங்களோடு விலைவாசியும் சேர்ந்திருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். நம்முடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் என்னென்ன அளவில் இருக்க வேண்டும் அதற்காக அரசாங்கம் என்னென்ன வகைகளில் செலவு செய்யப் போகிறார்கள், அதனால் எவ்வளவு எப்படி பண வீக்கம் ஏற்படும் என்பதையெல்லாம் இப்பொழுது விவாதிக்க நான் விரும்பவில்லை. ஆனால் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்ட விஷயம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை, முயற்சிகளை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விலை வாசிகளைக் கட்டுப்படுத்த ஒரு வழியை அரசாங்கம் கடைப்பிடிக்கலாம். பொது மக்களிடமிருந்து கடன் வாங்குவது என்பது ஒரு முக்கிய அம்சமாகக் கொள்ளலாம் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 'ஆஸ்டெரிடி' என்கிற முறையிலே, அரசாங்க இலாகாக்களிலே செலவினங்களைக் குறைக்க வழி காணலாம் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அப்படிச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சுமார் ஒன்பது கோடியளவில் அரசாங்க சிப்பந்திகளுக்கு விலைவாசி ஏற்றத்தை முன்னிட்டு கிராக்கிப் படி கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனால் திருப்தியடைந்தார்கள் இல்லை. ஏனென்றால், விலைவாசிகள் கூடுதலாகிக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக பட்டணங்களில் வாழும் என்.ஜி.ஓக்கள் வாழும் அவல நிலையை அரசாங்கம் நல்ல முறையிலே கவனிக்க வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் 'பிக்ஸட் இன்கம் க்ரூப்' இல் இருக்கிறவர்கள். அப்படி இருக்கிற அவர்களுடைய வருவாய் காரணமாக அவர்களுக்கு தேவையான அத்யாவசியப் பண்டங்களை வாங்குவதற்கு அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. அவர்களுக்குக் குறைந்த விலையில் அத்யாவசியப் பண்டங்களை கொடுப்பது சிறந்ததாக இருக்கும் என்று தோன்றுகிறது. அதைப் பரிசீலனை செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். அக விலைப்படியை அவர்களுக்குக் கூட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக, பண்டங்களை 'சப்ஸிடைஸ்ட் ரேட்'களில் கொடுப்பது நல்ல வழியாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிலோன் கவர்மெண்டில் உணவு தானியங்களுக்கு ஸப்ஸிடி கொடுத்து வந்தார்கள். அதிகமாகப் பணத்தைக் கொடுத்து வாங்கி, தன்னுடைய சிப்பந்திகளுக்கு குறைந்த விலையில் கொடுத்து வந்தது. அதே முறையை இந்த அரசாங்கமும் கையாள முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யலாம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது பற்றி நிபுணர்களை வைத்துப் பரிசீலித்துப் பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.



1967 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இன்னும் பார்க்கும்போது, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினால் தான், வளருகின்ற திட்டமிட்ட பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் காணமுடியும். அப்பொழுதுதான் திட்டமிட்ட முன்னேற்றத்தில் நல்ல ரிடர்ன் கிடைக்கும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, புதிதாக எந்த வரியும் இல்லை. ஆனால், புதிதாக வரிகள் இல்லை என்றாலும், ஒரு வேளை வருகின்ற பட்ஜெட்டில் புதிதாக வரி ஏதாகிலும் வருகின்றதோ என்னவோ என்று பொது மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டே இருப்பார்கள். நிலவரியை ரத்து செய்வதால் இந்த அரசாங்கத்திற்கு எட்டுக் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். அதே மாதிரி, உணவுப் பண்டங்கள் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்வதால் ஒரு கோடி சில்லரை ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. இன்னும் பற்பல காரியங்களையும் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு வழி வகைகள் இருக்கின்றன. அந்த மாதிரித் துண்டு விழும் பணத்தை என்னென்ன முறைகளில் ஈடு செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். அடுத்த பட்ஜெட்டிலே தங்களுடைய கருத்துக்களை இந்த அரசாங்கம் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் இந்த பட்ஜெட்டைப் பார்க்கும் போது, அவர்களுக்கு போதிய அவகாசம் இல்லை என்கின்ற காரணத்தினால், அதிகாரிகள் தயாரித்துத் தந்த பட்ஜெட்டை குறுகிய காலத்திற்கென்று, இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டிய சட்ட நிர்ப்பந்தம் காரணமாக சமர்ப்பித்திருக்கிறார்கள். பின்னாலும், புதிதாக இன்னும் எந்த வரியையும் போடாமல் மக்களை சுபிட்சமான பாதையில் நடத்திச் செல்ல வேண்டும், அதற்கு இந்த அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது.

இன்னொரு காரியத்தையும் இந்த பட்ஜட்டிலே எதிர் பார்த்தோம். தேர்தலுக்கு முன்பாக பல தொழில் ஸ்தாபனங்களை, போக்குவரத்துப் போன்ற இனங்களை தேசீயமாக்கப் போவதாக, இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கும் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். பல இடங்களில் அப்படிச் சொன்னார்கள். பஸ் போக்குவரத்தை தேசீயம் ஆக்கவேண்டும், பெரும் தொழில் ஸ்தாபனங்களை தேசீயம் ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிக் குறிப்பிட்டிருந்த போதிலும், பல திட்டங்களைத் தீட்டியிருந்த போதிலும், வெற்றிபெற்று அரசாங்கத்தில் இருக்கும் இப்பொழுது, இந்த பட்ஜட் உரையிலோ, அல்லது அவர்களுடைய கொள்கை விளக்கத்திலோ எதையும் காணவில்லை. இவையெல்லாம் தேசீயம் ஆக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த சில நபர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருக்கும் என்று கருதுகிறேன். தேசீயம் ஆக்க வேண்டுமா அல்லது தேசீயம் ஆக்க வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுவது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீங்கள் தோழமை கொண்டுள்ள கூட்டணியில் உள்ள ஒரு கட்சி தேசியமாக்குவதை வன்மையாக, முழு மூச்சுடன் எதிர்க்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். ஆனால், நான் சொல்ல விரும்புவது; தேசியமாக்குவதற்கு இன்னும் காலம் ஆகவில்லை என்பதுதான். தேசியமயமாக்குவதற்கு இன்னும் காலம் இருக்கிறது. நமக்கு இன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதல் பிரச்சினை உணவுப் பிரச்சினையாகும். முதலாவதாக உணவுப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் கண்டால்தான் மற்ற பிரச்சினைகளுக்குச் செல்வது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, தேசிய மயமாக்கும் பிரச்சினையிலே காலத்தை விரயம் செய்யாமல், முதன் முதலில் அத்தியாவசியப் பண்டங்களை மக்களுக்குக் காலா காலங் களில் கிடைக்க வழி செய்தாக வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் முனைந்து ஆவன செய்யவேண்டும் என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டி வலியுறுத்த விரும்புகிறேன்.

நீண்ட பிரசங்கத்தை நிகழ்த்த வேண்டும் என்று நான் நினைக்க வில்லை. ஒரு விஷயத்தை நமது தொழில் அமைச்சர் அவர்க ளுடைய சிந்தனைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றே கருது கிறேன். பல தொழில் ஸ்தாபனங்கள், குறிப்பாகப் பஞ்சாலைகள் சரியான நிலைமையில் இயங்காமல் இருந்துகொண்டே இருக்கின்றன. கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையானது இருக்கிறது. அதிலே இரண்டு ஷிப்ட் தான் இயங்கிக்கொண்டிருக் கிறது. மூன்றாவது ஷிப்டை இயக்க வேண்டும் என்று அரசாங் கத்திடம் கேட்டோம். அதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளைச் செய்துதர வேண்டும் என்பதையும் தொழில் அமைச்சர் அவர் களிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

கல்வியைப் பொறுத்து ஒரு வார்த்தை பேசிக்கொண்டு உரையை முடித்துவிடலாம் என்று நான் நினைக்கிறேன். கல்விக்கு அதிக முக்கியத்துவம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. புதுமுக வகுப் பிலே கல்வி இலவசமாக இருக்குமா, இருக்காதா என்பதைப்பற்றி அரசாங்கத்தின் விரிவான கொள்கை விளக்கத்தை நாங்கள் எதிர் பார்த்தோம். ஆனால், அதைப்பற்றி அறிகுறி காணவில்லை.

எங்கள் மாவட்டத்திலே கட்டாயக் கல்வி என்று இருந்தாலும், பல பள்ளிக்கூடங்கள் இன்று அவல நிலையில் இருந்து கொண்டிருக் கிறது. பள்ளிக்கூடங்களுக்குக் கட்டட வசதி இல்லாமல் இன்று பல ஷெட்களை அமைத்துப் பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் காலா காலங் களில் ஓலை கட்டாததன் காரணமாகப் பள்ளிக்கூடங்கள் என்றே சொல்ல முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சித் தரப்பில் எங்களோடு போட்டியிட்டவர்களெல்லாம், "காங் கிரஸ் அரசாங்கம் இதைக் காலா காலத்தில் செய்யவில்லை, செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிவிட்டது" என்று எங்கள்மீது





குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தார்கள். ஆனால், அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு இந்த அரசாங்கம் ஆளாகாமல் இருக்கவேண்டும். ஆதலால், இம்மாதிரி ஷெட்களிலே அமைந்திருக்கிற பள்ளிக் கூடங்களை நல்ல கட்டடங்களில் உடனடியாக நிறுவுவதற்குக் கல்வி யிலே ஆர்வம் படைத்த கல்வி அமைச்சரவர்கள் வேண்டிய நட வடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று நான் இந்த சந்தர்ப் பத்தில் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த பட்ஜெட்டிலே புதுக் கொள்கை ஒன்றும் இல்லை என்று நான் முதன் முதலில் கூறினேன். புதுக் கொள்கை களைப் பொது மக்களும் இந்த மன்றமும் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. அவர்களுடைய விரிவான பட்ஜெட் வருகின்றபோது அந்த விவாதத்திலே மறுபடியும் கலந்துகொள்ளலாம் என்று கருதி என்னுடைய உரையை இத்துடன் முடிக்கின்றேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர் களே, ஒரு சிறு விளக்கத்தை மட்டும், இதிலே கலந்து கொள்ள இருக்கிற மற்ற உறுப்பினர்களுடைய வசதிக்காகத் தெரிவித்துவிடு வது நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இப்பொழுது பேசிய மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்களே இந்த விஷயத்தில் கொஞ்சம் குழப்பம் அடைகிறார்கள் என்றால், அது தொடர்ந்து இருக்குமோ என்ற அச்சத்தினால் அந்த விளக்கத்தைத் தருகிறேன்.

நாங்கள் அளித்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்திலோ அல்லது கவர்னர் உரையிலோ தென் உணவு மண்டலத்தைக் குறித்து எந்த விதமான கருத்தும் அறிவிக்கப்படவில்லை. அதிலே, தென் இராச்சியங்களுக்கிடையே தோழமை உணர்வு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது, ஏற்கனவே இருக்கின்ற 'ஸோனல் கவுன்ஸிலை'ப்பற்றி. அதை நம்முடைய உறுப்பினர்கள், தென் உணவு மண்டலத்தை நாங்கள் கொண்டுவர இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, அது வேண்டுமா, வேண்டாமா என்றெல் லாம் பேசினார்கள். நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் குழப்பத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்று நான் கருதினேன். அவரே அந்தக் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிற போது, விளக்கத்தைத் தரவேண்டும் என்பதற்காக இந்த விளக் கத்தைத் தந்திருக்கிறேன். தென் உணவு மண்டலத்தைக் கொண்டு வருவதா, இல்லையா என்பதைப்பற்றி நாங்கள் எந்தக் கருத்தினையும் சொல்லவில்லை. பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். அந்தத் தென் உணவு மண்டலம் வரவேண்டும் என்று கேரள முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாத் அவர்கள் கூட விரும்பவில்லை.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் உரையாற்றுவார்கள்.

*** திரு. இராம. அரங்கண்ணல்:** மன்றத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக, நண்பர் திரு. நல்லசாமியைப் போன்றவர்களும், நண்பர் திரு. பொன்னப்ப நாடாரைப் போன்றவர்களும் எதாவது

பேசிக் கேட்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருந்தது. அந்த ஆவலைப் பூர்த்தி செய்கின்ற விதத்திலே, கவர்னர் உரையின் மீது விவாதத்தைத் தொடங்கிய பொறுமையான நண்பர் திரு. நல்லசாமி அவர்களும், இன்றையதினம் நம்முடைய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதத்தைத் தொடங்கிய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களால் தெரிவிக்கப்பட்ட—காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களெல்லாம் ஒரே விதமான கருத்துக்களாகத்தான் இருக்கின்றன. "ஆட்சிப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள், ஏற்றுக்கொண்டுவிட்ட உங்களிடமிருந்து புதுமையான பல திட்டங்களை நாங்கள் எதிர்பார்த்தோம், அந்த விஷயங்கள் எல்லாம் இல்லையே, இல்லையே" என்ற கருத்தினைத்தான் அவர்கள் அத்தனை பேரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கை எப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதனை நாமெல்லாரும் நன்றாக உணர்வோம். காரியங்கள் தொடர்ச்சியாகவும், குந்தகமில்லாமலும் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, அடுத்த நான்கு மாதங்களுக்கான நிதி நிலை அறிக்கை தான் இது. ஆனால், மரபுப்படி, நான்கு மாதங்களுக்கென்று நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்க முடியாது என்ற காரணத்தினால், ஓராண்டு காலத்திற்கு என்று இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கைகளிலே புரட்சிகரமான கருத்துக்கள் எங்கே? ஆக்கமான யோசனைகள் எங்கே? என்றெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் என்ன என்ன உறுதிமொழிகளை மக்களுக்கு அளித்தோமோ, எந்த எந்தக் காரியங்களை ஏற்று நடத்துவோம் என்று இத்தனை ஆண்டுக்காலம் சொல்லி வந்தோமோ, அவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்தித் 'தேர்தல் பிரகடனம்' என்று எங்களுடைய பெருமைக்குரிய மாநாட்டிலே நாங்கள் வைத்து மக்களுடைய ஒப்புதலைப் பெற்று, அதற்குப் பிறகு தான் இன்றையதினம் ஆட்சி மன்றத்திலே வந்து அமர்ந்திருக்கிறோம். அப்படி நாங்கள் தந்திருக்கிற தேர்தல் பிரகடனத்திலுள்ள விஷயங்களை நாங்கள் மறந்துவிட மாட்டோம். அப்படி யாராவது மறந்துவிடுவோம் என்று கருதினால், அந்தச் சமயத்தில், அன்புள்ள எதிர்க்கட்சியினர் கொஞ்சங்கூடத் தயங்காமல் அல்லது அச்சம் காட்டாமல் அவைகளை எங்களுக்கு இடித்துரைப்பதை நான் மிக மிக வரவேற்கிறேன். நம்முடைய அமைச்சர்களும் வரவேற்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், விவசாய வரி நீக்கத்தைப்பற்றி நாங்கள் எதிர்பார்த்தோமே, ஏனோ அதுபற்றி எந்தக் கொள்கையையும் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்





களும் அதே கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குக் கவனமூட்ட விரும்புகிறேன். 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி, இதே மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு தீர்மானம் நாங்கள் கொண்டுவந்தோம். என்ன தீர்மானம் என்றால், ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு நில வரி நீக்கம் வேண்டும், எல்லா சர்ச்சார்ஜ்களும் போகவேண்டும் என்று தனி நபர் தீர்மானத்தைக் கொண்டுவந்து நாங்கள் இங்கே வாதாடினோம். வாதாடிய நேரத்தில், அந்தத் தீர்மானத்தின் மீது வாக்குகள் கூட இங்கே எடுக்கப்பட்டன. வாக்குகள் எடுக்கப்பட்ட நேரத்தில், விவசாய வரியை நீக்கவேண்டும் என்று இப்பொழுது இவ்வளவு வேகமாகப் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அன்றையதினம் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டுப்போட்டார்களா? நண்பர் நல்லசாமி போன்றவர்கள் அந்தத் தீர்மானத்தை அன்றையதினம் ஏன் ஆதரிக்காமல் விட்டார்கள்? அன்றையதினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 63 உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேறவொட்டாமல் தடுத்திருக்கிறார்கள் என்பதை நான் கவனமூட்ட ஆசைப்படுகிறேன்.

இன்னும் ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில், நாங்கள் இன்றைய தினம் அமைத்துச் செயல்பட்டு வருவது புதிய அமைச்சரவை தான்; அதை நாங்கள் வெட்கமில்லாமல் ஒத்துக் கொள்ளுகிறோம்; நிர்வாகத்திற்குப் புதியவர்கள் தான் நாங்கள். அதை வெளிப்படையாக எடுத்துச் சொல்லுவதிலே எந்த விதமான தயக்கமும் எங்களுக்கு இல்லை. புதியவர்களே தவிர, பொறுப்புக்களை உணராதவர்கள் அல்லர் நாங்கள். என்ன என்ன பொறுப்புக்களை நிறைவேற்றுவோம் என்று எங்களுடைய தேர்தல் அறிக்கையில் நாங்கள் எடுத்துச் சொன்னோமோ அவற்றை அடக்கத்தோடு, நம்முடைய காரியங்களைச் செம்மைப்படுத்தி, நல்ல பண்பாட்டை உருவாக்குகின்ற வகையிலே, அரசியல் நாகரிகத்தை வளர்க்கின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டுக்கொண்டு வந்திருக்கிறது. அந்தக் காரியங்களிலே அதே வகையில் தொடர்ந்து ஈடுபடும் என்று நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதன் முதல் எடுத்துக்காட்டாகத்தான் முதல் நடவடிக்கையாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு 'ஊழியம் செய்யவேண்டும்' என்கிற உயர்ந்த குறிக்கோளோடு, மலர்ந்துள்ளது என்பதை எங்களுடைய பெருந்தலைவர், நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

இத்தனை ஆண்டுக் காலமும், அதாவது கடந்த இருபதாண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் மந்திரி பதவி என்றால் ஏதோ, அது ஆடம்பரப் பதவி என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் பதவி என்பது அழகாக ஆடம்பரமாக நாட்டிலே விழாக்கோலத்திலே உலா வருகின்ற பதவி, தாங்களே அமைச்சர் பதவி என்ற மாளிகைக்குச் சொந்தக்காரர்கள் என்று கருதி வந்தார்கள்.

ஆனால், இன்று தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாங்கள் நாட்டு மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதில் முன்னணியில் இருப்போம். ஆட்சிக்குப் புதியவர்கள் என்றாலும், நாங்கள் பொறுப்பையுணராதவர்கள் அல்ல. பொது வாழ்வில் அமைச்சர்கள் என்பவர்கள் மக்களின் முதல்தர தொண்டர்களாகப் பணியாற்ற வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் கூறினார்கள். அந்த முறையிலேதான் நாங்கள் நாட்டு மக்களின் தொண்டர்களாக, பதவிப் பொறுப்பை ஏற்றிருக்கிறோம். நாங்கள் ஆடம்பரத்தைக் கட்டிக் காப்பதற்கோ, ஆணவத்தை வளர்ப்பதற்கோ, வேண்டியவர்களுக்குச் சலுகை செய்வதற்காகவோ, நாட்டுக் கஜானாவை எப்படி எப்படியெல்லாம் கரைக்கலாம் என்று திட்டம் போடவோ வந்திருப்பவர்கள் அல்ல. "அப்படிப்பட்ட எண்ணம் வளரக்கூடாது. அதை மாற்ற வேண்டும். அமைச்சர்கள் என்போர், தாங்கள் சமுதாயத் தொண்டர்களாகக் கருதி பொறுப்புக்களைத் திறம்பட வகித்துப் பணியாற்ற வேண்டுமென்று" எங்கள் பெருந்தலைவர் அவர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதன் முதல் நடவடிக்கையாகத்தான் எங்களுடைய அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தை 500 ரூபாய் என்று குறைத்துக்கொண்டார்கள். தலைவர் அவர்களே, தாங்களும் இந்த முடிவினை ஏற்று தங்களுடைய சம்பளத்தை 500 ரூபாய் என்று குறைத்துக்கொள்ள முன்வந்திருப்பதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். இது சம்பந்தமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து யாராவது ஒரு நண்பர் ஒரு பாராட்டுச் சொல்லையாவது உதிர்ப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர்கள்தான், காந்தி அடிகளுடைய நல்லெண்ணத்தை மறந்து வெகுநாளாயிற்றே! ஆகவே பாராட்டுகின்ற நினைவு எப்படி வரும்? அவர்கள் யாருமே ஒரு குறிப்புக்கூட சொல்லவில்லை.

அமைச்சர்கள் பெரிய கார்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் முடிவு எடுத்திருக்கிறோம். இதன் அடிப்படையான முக்கிய காரணம், சாதாரண ஜனங்கள் அமைச்சர்களை முதல்தர தொண்டர்கள் என்ற முறையிலேயே எண்ணி அவர்களிடத்தில் பழக வேண்டும், அமைச்சர்களும் மக்களோடு மக்களாகப் பழகினால்தான் அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த முடியும். இப்படி மக்களை நல்ல முறையிலே அணுக வேண்டுமென்ற அடிப்படையில்தான் எங்கள் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வழி சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள், என்றும் மக்களை விட்டு தூர விலகிச் சென்று விடக்கூடாது என்பதே எங்களுடைய முதல்தரமான எண்ணமாகும். ஆகவேதான் ஆடம்பரமான பெரிய கார்களையுங்கூட எங்கள் அமைச்சர்கள் விலக்கிவிட்டார்கள்.

இன்றையதினம், கனம் உறுப்பினர்கள், சபையில் பல பிரச்சினைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நாடு எப்படி இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. கடந்த இருபதாண்டு காலத்தில் மக்கள் எண்ணிறந்த இடர்பாடு



களைத் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. வெள்ளையன் வெளியேறிய நேரத்தில் மாநில அரசு மத்திய அரசுக்கு 4 கோடி ரூபாய்க்குத்தான் கடன்பட்டிருந்தது. ஆனால் இன்றையதினமோ, நாம் மத்திய சர்க்காருக்கு 235 கோடி ரூபாய் அளவில் கடன் கொடுக்க வேண்டிய கட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். கடன் 235 கோடி என்பது மட்டும் அல்ல. அந்தக் கடன் தொகைக்கு நாம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 8 கோடி ரூபாய் அளவில் வட்டி கட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இந்த அரசு ஆட்சியை ஏற்று இருக்கிறார்கள்.

மாநிலத்தில் ஏற்படும் வீணான செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும், அவசியமற்ற பல செலவுகளைத் தவிர்க்க வேண்டுமென்றும் சொல்லி, காங்கிரஸ் சர்க்கார் நமது ராஜ்யத்தில் சிக்கனச் சீரமைப்புக் குழு (ஹை பவர் கமிட்டி) என்ற ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். சிக்கனச் சீரமைப்புக் குழு என்ன செய்தது என்று பார்த்தால், சென்னைமாநகரில் ஏற்படுத்தப்பட்டிருந்த சர்க்கார் நியாயவிலை விறகுக் கடைகளை மூடிவிடலாம் என்று ஒரு தீர்மானம்; அடுத்து, வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் சம்பந்தமாக ஒரு இலாகா இருந்தது. அதையும் மூடிவிடலாம் என்று ஒரு தீர்மானம். ஆக, இந்த இரண்டு தீர்மானத்தைப் போட்டதைத் தவிர அந்தச் சிக்கனச் சீரமைப்புக் குழு என்ன செய்தது என்றே தெரியவில்லை. இப்போது அந்தக் குழு இருக்கிறதா, இல்லையா என்கிற விவரம் தெரியாது. இன்றையதினம் உண்மையிலேயே நாங்கள் நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்வதோடு, பல நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டார்கள். ஆனால் மாதத்திற்கு இரண்டு ஆயிரம், இரண்டாயிரத்து ஐநூறு, மூவாயிரம் என்று சம்பளம் வாங்குகிற அதிகாரிகள் இருக்கிறார்கள். கடந்த இருபதாண்டுக் காலத்தில் காங்கிரஸ் கட்சி ஏராளமான பல இலாக்காக்களைச் சிருஷ்டித்து, ஏராளமான அதிகாரிகளை உலாவ விட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் சீர்திருத்த வேண்டுமென்று சொன்னால் திடீரென்று ஆட்சிக்கு வந்த முதல் நாளே, மாறுநாளே செய்துவிட முடியாது. அதிகாரிகளை வீட்டுக்கு போ என்று அனுப்பிவிட முடியாது. பல பிரச்சினைகள் இருக்கின்றன. மத்திய சர்க்காரில் இன்றையதினம் நிதிமந்திரியாக இருக்கக்கூடிய திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் தலைமையில் நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் போட்டார்கள். அந்தக் கமிஷனின் முடிவு என்னவென்று தெரியவில்லை. திரிசங்கு சொர்க்கத்தில்தான் இருந்து வருகிறது. இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், சிக்கன முறைகள், நிர்வாகச் சீர்திருத்தம் ஆகியவை பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்தாக வேண்டும். நாட்டு மக்கள் அதிகமாக நம்மிடம் எதிர்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பாடுபடுவதற்காகவே நமது கழகத்தைத் துவக்கி வளர்த்து வருகிறோம். இந்த அரசின் ஆட்சிக்கு, சர்க்கார் ஊழியர்கள் தங்களுடைய பூரண ஒத்துழைப்பைத் தருவதற்கும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தித் தரவும் நல்லெண்ணம் கொண்டிருப்பதை நான் பெருவாகப் பாராட்டுகிறேன். இந்த நல்ல பாரம்பரியத்தை வளர்க்க வேண்டுமென்றும் கருதுகின்றேன். கடந்த ஒரு வார காலத்தில் பதுக்கல்காரர்களிடமிருந்து 12 ஆயிரம் மூட்டைகள் அதிகாரிகள் கைப்பற்றி இருக்கிறார்கள். இப்படி போலீஸ் அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் உற்சாகத்தோடு பணியாற்றுவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே சமயத்தில் ஒவ்வொரு இலாகாவிலும் பல துறைகளில், பல விஷயங்களில் செலவுகள் அதிகமாகி இருக்கின்றன. அந்தந்த இலாக்காத் தலைவர்கள், என்னென்ன முறைகளில், எப்படி எப்படி வீண் செலவுகளைக் குறைக்கலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து, வீண் செலவைக் குறைத்துக் கொள்ள முன்வர வேண்டும். அதிகாரிகள் என்றால், அமெரிக்காவில் இருந்தோ, ஆப்பிரிக்காவில் இருந்தோ வந்தவர்கள் அல்ல. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான். அவர்கள் உத்தியோகத்தில் இருக்கின்ற காரணத்தால், தாங்கள் நாட்டு மக்களுடைய முதல்தர ஊழியர்கள் என்ற உணர்வு பெற்று பணியாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவரியை எடுப்பதைப்பற்றி இடைக்கால நிதி நிலை அறிக்கையில் ஒன்றுமே சொல்லவில்லையே என்று சிலர் குறிப்பிட்டார்கள். "நிலவரியின் எதிர்காலத்தைக் குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின் முன் வைக்கவிருக்கும் முறையான வரவு செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும்" என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இடைக்கால பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். இதுபற்றி தக்க நேரத்தில், தகுதியான பதில் எல்லோருக்கும் நல்ல பதில் அமைச்சரிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் ஒன்றை நாம் இன்றையதினம் மறந்துவிடக் கூடாது. விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க அரசாங்கத்தின் கடைநிலை ஊழியர்கள், என்.ஜி.ஓ.-க்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கோருகிறார்கள். 1962-ம் ஆண்டு சமர்ப்பித்த நிதிக் கமிஷன் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருந்தார்கள். மத்திய அரசு ஊழியர்களுடைய சம்பள உயர்வு, பஞ்சப்படிக்கு ஏற்ப, நமது மாநில அரசு ஊழியர்களுடைய சம்பளம், பஞ்சப்படி அளிக்கப்பட வேண்டும் என்பதாக தங்களுக்குச் சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் நமது ஊழியர்கள் கேட்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுடைய குறைகளை யெல்லாம் நிச்சயமாக இந்த அரசாங்கம் கவனிக்கும். இன்னும் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கெனவே, அரசாங்க ஊழியர்களுக்கு அளித்துள்ள பஞ்சப்படி உயர்வினால்



1967 மார்ச் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

நமது மாநில அரசுக்கு 5 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் நிலவரி நீக்கம் ஏற்படுவதால் கூடுதலாக 8 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட இருக்கிறது. இந்த 8 கோடி ரூபாய் நஷ்டம் மட்டும் அல்ல. நமது ரெவின்யூ டிபார்ட்மெண்டில், 11,753 கிராம முனிசிப்புகள் இருக்கிறார்கள். 11,374 கர்ணங்கள் இருக்கிறார்கள். 15,380 தலையாரிகள் இருக்கிறார்கள்; 15,581 வெட்டிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களினால் நமக்கு ஆண்டுதோறும் 1 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவு ஆகிவருகிறது. இவர்களுடைய பணியை பஞ்சாயத்துக்களோடு இணைக்க வேண்டுமென்ற பிரச்சினை இருக்கிறது. அவைகளை எல்லாம் கவனித்து அதுபற்றிய நல்ல முடிவை அரசாங்கம் எடுக்கும் என்று சொல்கிறேன்.

நம்முடைய சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பக்கிங்காம் கால்வாய், கூவம் கால்வாய் சம்பந்தமான திட்டம் இருக்கிறது. அதற்கு ஏறக்குறைய சுமார் 4 கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. இது சம்பந்தமாக நமது மதிப்புமிக்க மராமத்து மந்திரி அவர்கள் தன்னுடைய ஜூன் மாதவாக்கில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், நமது மாநிலத்தில் கிட்டத்தட்ட 20 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கூட்டுறவுத் துறையில் சுமார் 2 லட்சம் பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு நல்ல வழிவகை காண வேண்டும். அதே நேரத்தில் நிதிப் பற்றாக்குறையும் இருந்து கொண்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்க நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

முன்பு இருந்த சர்க்காரில், அடுத்து வருகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதுபற்றி ஆலோசித்தபோது, டெல்லியிலுள்ள 'நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிடம்' யோசனை கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். 'நம் தமிழ் நாட்டை மூன்று பக்கமும் கடல் சூழ்ந்திருக்கிறது. ஆகவே, நாம் கடல் வாணிபத்தைப் பெருக்கிக் கொண்டால் தமிழ்நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மூலமாக அதிக வருவாயைப் பெற முடியும். நம்முடைய சர்க்கார் வரிகளை மட்டும் நம்பிக்கொண்டு காலத்தைத் தள்ள முடியாது. தமிழ்நாட்டிலிருந்து கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய்க்குப் பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். 1966-67-க்குள் இந்த 80 கோடி ரூபாய் 100 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட வேண்டும். அதற்கு அடுத்த ஆண்டில் 125 கோடி ரூபாயாக இது வளர வேண்டுமென்று' முன்னாள் தொழில் மந்திரியாக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எடுத்துச் சொன்னது மட்டுமல்ல; இரண்டாண்டு



64967

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

காலத்திற்கு முன்பே 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' என்றும் அப்பாதைய முதலமைச்சர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டது.

சென்னையிலே 1967 டிசம்பரில் ஒரு இண்டஸ்ட்ரியல் ஃபேர் (தொழில் சந்தை) நடைபெறும் என்றும், அந்தச் சந்தையில் சுமார் 50 வெளிநாடுகள் பங்குகொள்ளும் என்றும் சொன்னார்கள். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்தோம். நான் அதை எடுத்துச்சொல்வதற்குக் காரணம் அந்த இண்டஸ்ட்ரியல் ஃபேரை நாம் நல்ல முறையில் நடத்த வேண்டும். நம்முடைய நாட்டுப் பொருள்கள் தோலிலிருந்து, இன்னும் பலப்பல பொருள்களைப் பிற நாட்டவர் காணச் செய்து, நமது ஏற்றுமதி பெருக தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். கைத்தறி சம்பந்தமாக முன்பு 'ப்ளீடிங் மெட்ராஸ்' அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. இன்றைய தினம் அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் நமது கைத்தறித் துணிகளுக்கு மார்க்கெட் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் பிரெஞ்சு நாட்டில் இருப்பவர்கள் நம்முடைய கைத்தறியை விரும்புவதாகவும், அதேமாதிரி ருஷ்யா நாட்டில் இருக்கிறவர்கள் நம் நாட்டின் கைத்தறித் துணியை விரும்புவதாகவும், மேலும் நம் நாட்டில் உள்ள பலபொருள்களை விரும்புவதாகவும் அறிகிறேன். ஆகவே, நாம் இந்த விஷயத்தில் ஒரு சிறப்பான தனிக் கவனம் செலுத்த வேண்டும். அடுத்து, தொழில் வளர்ச்சியின் மூலம், மாநில அரசுக்கு வருமான வழி காண வேண்டும். ஐந்தாண்டுத் திட்டப்படி போடப்பட்டிருக்கிற திட்டங்களை யெடுத்துப் பார்த்தால், மூன்றுவிதமாக இருக்கிறது. ஒன்று சென்டிரல் செக்டாரில் இருப்பது, மற்றொன்று ஸ்டேட் செக்டாரில் இருப்பது. மூன்றாவது பிரைவேட் செக்டார். இந்த மூன்று இனங்களிலும் என்ன என்ன தொழில்கள் இருக்கலாம் என்பதை வரையறுத்தி ருக்கிறார்கள். அதை எடுத்துப் பார்த்தால் எந்த எந்தத் துறை களின் மூலம் வருவாய் கிடைக்கிறதோ அவற்றை எல்லாம் சென்டிரல் செக்டாரிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நெய்வேலி, ஐ. ஸி. எப்-கோச் பாக்டரி, எண்ணூர் நிலையம் இப்படியாக இருக்கிறது. இவற்றின் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு வருவாய் வரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் ஸ்டேட் செக்டாருக்கு ஒதுக்கியிருக்கிறவைகளைப் பார்த்தால் சமுதாயத்திற்கு நலம் செய்கின்ற வருவாய் இல்லாத செலவினம் மட்டும் அதிகமாக இருக்கின்ற இனங்கள்தான் இருக்கின்றன. கல்வி, சுகாதாரம் இப்படியாக இருக்கிறது. நம்மிடம் இருப்பது எல்லாம் ஒன்றிரண்டு நூற்பாலைகள், பஸ் டிரான்ஸ்போர்ட் போன்றவைதான், கடந்த இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பிரைவேட் செக்டார் எத்தனை வளர்ச்சி அடைந்திருந்தாலும் அவற்றின் மூலம் நமக்கு வருமானம் வரக்கூடியது இல்லை. இருப்பினும் பிரைவேட் செக்டாருக்கு ஏராளமான பொருள் வசதி கிடைக்கும் வகையில் அவற்றுக்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியில் பலவகையான நிதி ஆதாரங்கள் தான் தேடித்



1967 மார்ச் 21] [திரு. இராம. அரங்கண்ணல்]

தரப்பட்டிருக்கின்றன. பிரைவேட் செக்டாருக்கு உதவி செய்வதற்காக இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டது. அது மட்டும் போதாது என்று இண்டஸ்ட்ரியல் பாங்கை திரு. டி. டி. கே. அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். எல். ஐ. ஸி. வேறு ஏராளமான பணத்தைத் தருகிறது. இருந்தும் பிரைவேட் செக்டாரில் இருந்து அரசாங்கத்திற்கு கணிசமான வருமானம் கிடைக்கிறதா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது. இவற்றை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து நான்காவது திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பதாக இந்த நோக்கில் நான் தெரிவித்துக்கொள் கிறேன். மேலும் இந்த அரசு உரியவகையில் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி நம்முடைய நியாயமான பங்கினை எல்லாத் துறையிலும் பெறவேண்டும். இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால் நான்காவது நிதிக் கமிஷனுக்கு, சென்ற சர்க்கார் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்தது. அந்த ரிப்போர்ட்டினை எல்லோரும் எடுத்துப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக இப்போதுள்ள எதிர்க்கட்சி யினர் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் இருக்கிற கருத்துக்களை நானோ, எங்கள் கட்சியில் இருக் கிறவர்களோ எடுத்துச் சொன்னால் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள் என்று சொல்லக் கூடும். டெல்லி, தமிழ்நாடு என்ற பேச்சு ஆரம்பமாகிவிட்டது என்று சொல்லக் கூடும். ஆனால் முன்பு இருந்த பக்தவத்சலம் மினிஸ்ட்ரியே மிகமிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். மத்திய சர்க்காரின் வருமான ஆதாரங்களாக இருக்கிற எக்ஸைஸ் ட்யூடியை எடுத்துக் கொண்டாலும், இன்கம் டாக்ஸை எடுத்துக் கொண்டாலும், ரயில்வே வருமானத்தை எடுத்துக் கொண்டாலும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உரிய பங்கினைத் தந்தாக வேண்டும் என்பதை வற்புறுத்தியிருக்கிறது. இன்றைக்கு ரயில்வே துறை மூலமாகக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கு நமது மாநிலத்தில் மட்டும் பிரயாணிகள் மூலமாக 80 கோடி ரூபாய் பணம் கிடைக்கிறது. ஆனால் நம் அரசுக்கு ரயில்வே துறையிலிருந்து கிடைப்பது எல்லாம் 80 லட்சம் ரூபாய்க்குக்கூட வருவதில்லை. இப்படிப்பட்ட நிலையை மாற்ற இதுபோன்ற எல்லாத் துறை களையும் எடுத்துப் பார்த்து ஆராய்ந்து நமது மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கினைப் பெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இன்றையதினம் இந்த மாநிலத்திலே பதவி ஏற்றிருக்கிற புதிய அரசுக்கு பல பொறுப்புகள் இருக்கின்றன. கடந்த இருபது ஆண்டுக் காலமாக வளர்க்கப்பட்ட விஷ விருட்சத்தை வேரோடு அழித்துவிட்டு சமதர்ம சமுதாய அரசை ஏற்படுத்தியாகவேண்டும். இந்த அரசு நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் இங்கே நல்லவர்கள் வாழ்த்துகிறார்கள். நாட்டவர்கள் ஆதரவு அளிக்கி றார்கள். மக்களாட்சி மலர்ந்திருக்கிறது. இது எதாவது ஒன்றன் குறைகள் இருந்தால் எதிர்க் கட்சியில் உள்ள நீங்கள் இடித்துக்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 மார்ச் 21

காட்டலாம். அவற்றை மனப்பூர்வமாக வரவேற்க காத்து இருக்கிறோம். அதேநேரம் நாட்டு மக்களின் நன்மைக்காக இந்த அரசு எடுத்துக் கொள்கிற நல்ல நடவடிக்கைகளை அனைத்துக்கும் இந்த மன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு தன் பெயரை நேர்மையாகவும் இயக்கத்தில் கொண்டுள்ள அடக்க உணர்வு, தன்னடக்கமான உணர்வு, மக்களின் நன்மையையே கொண்ட தன்னலமற்ற உணர்வு வாழ்க, வளர்க என்று வாழ்த்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I wish to congratulate our Chief Minister on the first budget that he has presented to the House. In fact, for a number of years people were dreaming that the old Leader of the Opposition, 'Anna' as he is popularly known, would one day come forward and present his budget to the House. We were then thinking that it would be only a dream and would not become a reality. Because of the will of the people, that dream has been converted into a hard, stark reality. I congratulate the Chief Minister on presenting an excellent budget without taxing the people any further than what they have already been taxed. In this connection I wish to offer a few remarks which, I am sure, the Chief Minister and the Members on the Treasury Bench will bear in mind before they frame the regular budget to be presented in June or July and before they have discussion with the Chief Ministers of other States. It is a well known fact that the most important question to which a budget must address itself is : how to reduce the spiralling prices. The goal of every budget, whether it be of the State Government or the Central Government must be to reduce prices and increase production. Unless production is increased, prices will not be reduced. In other words, price reduction and increased production are twin problems interconnected with each other.

Another thing I would like to point out in connection with the reduction of prices is this. The most important factors that contribute to increase in prices are deficit financing, reckless overdrafts and borrowings from the Central Government and the public. These are the three pillars on which price spiralling is built.

As regards deficit financing, the Government, Central or State, must so frame the budget as to avoid deficit financing as far as possible. So far, the history has been that the State and the Centre have been competing with each other in framing a deficit budget. The idea behind deficit financing is this. Even if the State Governments produced budgets with a maximum amount of deficit finance, they thought they could get away with it by resorting to Reserve Bank borrowings and the Central Government condoned it. In fact there is a complaint from the Central Government that a number of States have resorted to a large amount of borrowings. Unless these borrowings, especially the Reserve Bank borrowings are cut down, there is no escape from spiralling prices.



1967 மார்ச் 21] [Dr. H. V. Handi]

In fact I brought this to the notice of the previous Ministry and there was serious altercation and exchange of words between me and the then Minister for Industries. When I charged the then Ministry about this extraordinary deficit financing, the former Leader of the Upper House and the Minister for Industries got angry with me and said, 'This hon. Member is talking without any relevancy to the facts'. Now we find that the facts are coming out in this Budget speech. I am happy that the present Hon. Chief Minister has come out boldly. In fact such a discrepancy has crept even in the last year's Budget when there was shown a surplus of Rs. 31 lakhs. Now suddenly in this year's Budget we find that there is a deficit of about Rs. 7½ crores. I am quite sure that the credit for bringing out these facts goes to the present Ministry because they have given orders to the Secretariat to furnish these figures frankly and fearlessly. This method of approach has brought out the unfortunate facts into limelight. But for this, we would have been under the impression that everything is going on well and that we have a surplus budget. Now in this year's Budget we find a deficit of about Rs. 7½ crores which is not a small amount. It is a very big amount.

Now, coming to the most important point, the State should never rely too much on the Centre. Immediately there must be an understanding on that point. I want to strike a note of warning that hereafter the State Ministries and the Central Ministry will be run by different parties and the State-Central relationship will definitely suffer and undergo damage. I am quite sure that the Hon. the Chief Minister will very seriously consider this point. Just imagine for one moment that there is some confusion in the Central Government owing to the crossing of the floor by a few Congress Members of the Parliament. That has happened in Pondicherry and Haryana. Also, when we frame our Budget, we must always rely on ourselves, without depending too much on the Central Government. After all, the Central Government are looking to the foreign countries for aid and this has been the routine process. States are putting the blame on the Centre and the Centre is looking helplessly to the foreign countries. Even some responsible person in New Delhi has gone to the extent of making a disparaging statement that the Food Ministry of the Central Government consists of two wings the foreign department and the internal department. One wing is in charge of free supply of food from the foreign countries and the other wing addresses itself to muster some food from the States internally. This is a pathetic state of affairs in which the Centre is placed and which the States should not forget. That is why I request the Hon. Chief Minister to impress upon the other Chief Ministers and also the Finance Minister of the Government of India that they should not compete with each other. Let the States not compete with each other in this business of overdraft. Let not the States compete in deficit financing. Now the Centre is very weak and this point the Hon. Members of the House must remember. The Centre of to-day is not the Centre of old. Therefore, whatever

[Dr. H. V. Hande] *[1967 மார்ச் 21*

Budgetary proposals we frame, must have a bearing with reality and must be based in such a manner that we do not rely too much on the Centre. For instance, even with regard the Fourth Plan, we have an outlay of Rs. 564 crores, but what is the amount that is earmarked for from the Centre? It is only Rs. 250 crores. If we divide Rs. 250 crores by five, we have to get Rs. 50 crores every year. But I find that they are going to give only Rs. 35 crores which is less than Rs. 15 crores which they had originally promised. In other words, they have promised Rs. 250 crores for the whole Plan period but they may not be able to give that amount and they may say that they could not do so due to some extraordinary factors. So, I request the Hon. Chief Minister to take proper care of this factor when he frames the regular Budget and do not rely too much on the Centre. We cannot take the Centre for granted because I am very, very nervous about the way the Central Government are going to do about their business. Also, when the States are not prepared to resort to deficit financing, they cannot expect the Central Government to resort to deficit financing to give the share of the States and that is a dangerous thing to do, whether it is the Central Government or the State Government. The immediate result will be that there will be very serious consequences, viz., spiralling of prices.

Finally, due to paucity of time, I will refer only to the way in which we can help the employees of the Secretariat. I have been stressing for the past several years that the employees of the Secretariat must be very well looked after because they are the hub of the entire State activities. When I was a Member of the Upper House, I also requested the then Chief Minister to see that the Secretariat employees were properly looked after. There is a feeling among the employees of the Secretariat and there is a serious grievance that they have not been looked after well all these years and that they have not been given compensatory allowance. After all, Madras has been declared A Class City, and the State Government employees expect that they must be given allowances on a par with the Central Government employees. I request the Hon. Chief Minister to apply his mind to this particular proposition and see that there is no disparity in the allowances. If this is done, there will be excellent co-operation from the Secretariat staff and the staff in other State Government offices in the City. This co-operation has already begun to show itself within the short period since the Hon. Chief Minister has assumed office. After all, the compensatory allowance would not involve more than one crore of rupees and that is my rough estimate. In fact, when I asked the then Chief Minister, Mr. Bhaktavatsalam, how much it would cost to the exchequer, he replied that they were not even prepared to furnish the figures, by calculating the actual expenditure to the exchequer. That was the reply given by him. But I am confident that the present Ministry and the Hon. Chief Minister will sympathetically consider this matter and straightaway grant the compensatory allowance. The moment it is granted, the whole administration of the State will be completely toned up and the whole



*1967 மார்ச் 21]* [Dr. H. V. Hande]

Government staff will be thankful for this small act of the Government and will be grateful to them. This will have wonderful effect which will ultimately bring about excellent co-operation between the employees of the Government and the Treasury Benches. With these words, I commend the Budget speech made by the Hon. Chief Minister.

**திரு. கொ. கோதண்டம்:** பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்காக இருக்கிறேன். குறிப்பாக இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த வரவு செலவுத் திட்டம் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அடித்தளத்திலேயிருந்து வந்திருக்கிற நாங்கள் மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அமையும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே அண்மையிலே ஏற்பட்ட புயல் பயங்கரங்களைப்பற்றி நான் இந்தச் சபையின் முன் வைக்க விரும்புகிறேன். 3—11—1966 தேதியன்று ஏற்பட்ட புயலின் காரணமாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடங்களிலேயும், இடைக்கநாடு பகுதிகளிலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டு அங்கே ஏறக்குறைய 30 சதுர மைல் விஸ்தீரணத்திற்கு 10 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; 3,200 வீடுகள் படு நாசமடைந்திருக்கின்றன.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கு இதுவரையில் இருந்த சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் 40 ரூபாய் கொடுத்ததோடு நிறுத்தியிருக்கிறார்கள். இன்னும் நான் விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால் அங்கே வாழுகின்ற மக்கள் இன்னும் 15 ஆண்டு காலத்திற்கு எந்தவிதமான நலனும் வாய்ப்பும் வசதியும் பெறமுடியாத அளவிற்கு மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறார்கள். அதையும் நம்முடைய சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அதேபோல், புயல் ஏற்பட்ட நேரத்திலே 72 ஏரிகள் உடைபட்டிருக்கின்றன. அந்த ஏரிகள் உடைபட்டதன் காரணமாக மதுராந்தகம் பகுதி நல்ல செழுமையான பகுதியாக இருந்தாலும் கூட, தற்போது அறுவடை திருப்திகரமான நிலையில் இல்லை என்பதை விவசாயிகள் எடுத்துக் கூறுகிறார்கள். அந்த ஏரிகள் தற்போது தாற்காலிகமாகப் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. அதை நல்ல முறையில் பழுது பார்க்கப்படுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நீண்ட நெடுங்காலமாக மதுராந்தகம் ஏரி சரித்திர காலப் புகழ் பெற்று இருந்தாலும் கூட, இதுவரை அந்த ஏரி தூர் வாரப்படவில்லை. இதைப் பற்றி இந்த மன்றத்தில் பல முறை எழுப்பப்பட்டும் இதுவரை கவனிக்கப்படவில்லை. குறிப்பாக, மதுராந்தகம்

ஏரியைத் தூர் வாருவதன் காரணமாக 22 கிராமங்களுக்கு மேற்பட்ட பகுதிகள் பாசன வசதி பெற வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொருத்துக் கொடுக்கப்படுகிற எந்தக் கடன்களும், வசதிகளும் அவர்களுக்குக் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஐ.ஏ.டி.பி. பர்மிட் என்று சொல்லப்படும் உரத்திற்காக கொடுக்கக்கூடிய பர்மிட் மூன்று மாத காலம் ஆகியும் இன்னும் கிடைக்கவில்லை என்று விவசாயிகளிடமிருந்து அறிகிறேன். இனிமேலாவது கொடுக்கப்படுகிற கடன்கள் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப் பொருத்தவரை தனிப்பட்டவர்களிடத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் காரணத்தால் சாதாரண ஏழை எளிய மக்கள் எந்தவிதமான நன்மையும் பெற முடியாத நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறை எல்லா மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் பயன்படும் வகையில் சட்டத்தின் மூலமாகத் திருத்தி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல கோயில்கள், தர்ம ஸ்தாபனங்கள் வசம் இருக்கின்ற நிலத்திலுள்ள விவசாயிகளின் நிலைமையைப்பற்றிச் சொல்லவே முடியவில்லை. கோயில் நிலங்கள் தர்ம ஸ்தாபன நிலங்களில் விவசாயிகளிடத்தில் இருந்து வாங்குகின்ற வாரங்கள் ஒருவிதமாகவும், எழுதுகின்ற கணக்குகள் வேறு மாதிரியாகவும் இருப்பதாக அறிகிறேன். அப்பேர்ப்பட்ட தர்ம ஸ்தாபனங்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று எங்கள் பகுதிகளில் இருக்கும் மக்களின் முக்கியமான பிரச்சினை குடிதண்ணீர்ப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஜி.எஸ்.டி. ரோடு அருகாமையில் இருக்கின்ற கிராமங்களில் உள்ள தாய்மார்கள் இரண்டு, மூன்று மைல் சென்று குடிதண்ணீரை எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்பேர்பட்ட கிராமங்களில் ஊற்றுக் குழாய்கள் (போரிங் வெல்ஸ்) அமைத்து அங்குள்ள பெருங்குடி மக்களுக்கும், ஆதித் திராவிட மக்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்களுக்கு, பதனீர் இறக்கக்கூடிய காலத்தில், குறித்த காலத்திற்குள்ளாக இதுவரை லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை. குறித்த காலத்தில் லைசென்ஸ் கிடைக்காத காரணத்தால், ஆறு மாதங்களில் மூன்று மாதங்கள்தான் அவர்களால் வேலை செய்ய முடிகின்றது. ஆகவே, அந்த லைசென்சைக் குறித்த நேரத்தில் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொருத்தவரை, கொடுக்கப்படுகின்ற கடன்கள் காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று உரங்கள் காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டும். கடந்த



ஆண்டு என்னுடைய தொகுதியில் பூச்சி மருந்துகள் கூட காலத்தில் கிடைக்காமல் அதிகமான அளவுக்குப் பயிர்கள் பூச்சியடித்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பெருமழை, புயல் காரணமாக வளமான பகுதி என்று சொல்லப்படுகிற மதுராந்தகம் தன்னிறைவைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமை அடைந்திருக்கிறது, அந்தப் பகுதியில், குறிப்பாக இடகனுடு பகுதியைப் பொருத்தவரை, இருந்த தென்னை மரங்களும், மாமரங்களும் தரையோடு தரையாயிருக்கின்றன என்று சர்க்காருடைய அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள் "It will take some decades to have the original look of Malabar" என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் 20 ஆண்டுகளுக்கு 15,000-க்கு மேற்பட்ட மக்களுக்கு எந்த விதமான வழியும் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் இன்று வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்குப் பதினைந்து ஆண்டு காலத் தவணையில் கடன் கொடுத்து அந்தக் கடனை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தென்னை பலன் கொடுக்கும் நேரத்தில் வசூல் செய்து கொள்ள ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடைப்பட்டுப் போன 72 ஏரிகள் தாற்காலிகமாகத்தான் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. அவை நிரந்தரமாகப் பழுது பார்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுராந்தகம் ஏரியை உடனடியாக தூர் வாருவதற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்த வாய்ப்பை அளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைமை உதவித் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை ஆண்டு அறிக்கையைப் பார்க்கின்றபோது வருகின்ற வருஷத்திலே எவ்வளவு கஷ்டமான நிலையைப் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அமைச்சரவை சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது மிகவும் கஷ்டமான ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும். பதவியில் இருப்பது வெளியில் இருப்பவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சிகரமாகப் பட்டாலும், இன்றைக்கு இருக்கிற நிலையிலே மிகவும் கஷ்டமான ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றுநான் கருத வேண்டும்.

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 7½ கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இந்தத் துண்டை எப்படிச் சரிக்கட்டப் போகிறார்கள், எப்படிச் சரிக்கட்ட முடியும் என்பதைப் பார்க்கிறபோது, புதிய வரியினால் சரிக்கட்ட வேண்டும், அல்லது மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறும் தொகையை மானியமாகப் பெறுவதன் மூலமாகச் சரிக்கட்ட வேண்டும். இன்றைய நிலையில் புதிய வரிகளைப் போட மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதே சந்தர்ப்பத்தில் மேலும் மேலும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டுமென்ற எண்ணமும்

வலிவடைந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் மக்களுடைய எண்ணங்களைச் செயலாற்றும் வகையில் புதிய காரியங்களைச் செய்ய வேண்டும். மறு பக்கத்தில் புதிய சுமையை மக்களிடத்தில் சுமத்தாமல் இருக்க வேண்டும். இந்த நிலையில் இந்த நிதிநிலை அறிக்கையைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

1965-66-லே 786 லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. அந்தத் துண்டை எப்படிச் சரிக்கட்டியிருக்கிறார்கள் என்றால், 1965-66-ல் இருந்த கடைசி இருப்பை, ரொக்க வசதி இருப்பைக் கொண்டு துண்டு விழுந்ததைச்சரிக்கட்டியிருக்கிறார்கள். மேலும் 1966–67-ல் ரொக்க இருப்பு 40 லட்சமாகக் குறைந்திருக்கிறது. அதற்கு முன் ஆண்டிலே ரொக்க இருப்பு 745 லட்சமாக இருந்தது. ஒரு பக்கத்தில் ரெவின்யூவில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டும்போது நிதிநிலை ரொக்க வசதியை எப்படிப் பெருக்க முடியும் என்று பார்க்கும்போது அதுவும் சிரமமான காரியத்தில் தான் இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் மக்களிடத்தில் இருந்து கடன் வாங்க முடியுமோ அந்த அளவுக்கு வாங்கியாகிவிட்டது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுப் பெற வேண்டிய நிலைமையில் மத்திய அரசாங்க நிதிநிலை எந்த அளவுக்குச் சாத்தியமாக இருக்குமென்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். இன்றைக்கு அவர்களுடைய ரொக்க வசதி கணக்கைப் பார்க்கின்றபோது குறைவு 880 லட்சம் ரூபாய். பல ஆண்டுகளுடைய பட்ஜெட்டை எடுத்துப் பார்த்தால் ரொக்க வசதி இருப்பு 40 லட்சத்திற்கும் குறைவாக இருந்தது கிடையாது. ரிசர்வ் பாங்கு ஒப்பந்தப்படி 40 லட்சமாவது கையிருப்பு இருக்க வேண்டும்.

ஆகவே, கையிருப்புக் குறைவு 880 லட்சம் ரூபாய் இருப்பதை, அப்படி வசதிக் குறைவு ஏற்பட்டிருப்பதைச் சரிக்கட்ட ரிசர்வ் பாங்க் நமக்கு அனுமதி அளிக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த ஆண்டு பொது மக்களிடமிருந்து 18 கோடி ரூபாய் கடன் பெறவேண்டுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 13-24 கோடி ரூபாய் கடன் பெற்றிருக்கிறோம். ஆகவே எந்த அளவிற்கு ரிசர்வ் பாங்க் இதற்கு அனுமதியளிக்கும் என்று தெரியவில்லை. இந்தச் சங்கடமான நிலையில் கடன் வாங்கி ரெவின்யூவைச் சரிக்கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரிடமிருந்து நாம் அதிகம் வரிப் பங்கைப் பெற வேண்டும். பக்கத்து மாநிலங்களில் சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப்படியை மத்திய சர்க்காரின் கிராக்கிப் படியின் அளவிற்கு, அதற்குச் சமமாக உயர்த்த முடிவு செய்திருக்கிறார்கள். அதன் எதிரொலி நம் ராஜ்யத்திலும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இப்படி பல இனங்களில் அதிகப்படியான செலவை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நிலவரிக் குறைப்பு என்ற பிரச்னை முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று நிலவரிக் குறைப்பு மிக மிக அவசியமான ஒரு திட்டம். நம் நாட்டில் ஏற்பட்டுள்ள விவசாய உற்பத்திக் குறைவுதான் இன்றைக்கு இம்மாதிரி நாட்டில்





ஏற்பட்டுள்ள பொருளாதார சிர்குலைவிற்குக் காரணமாக இருக்க முடியும் என்பதுதான் எல்லோருடைய அபிப்பிராயமுமாகும். ஆகவே, விவசாய வரியை நிலத்தின் பேரிலுள்ள வரியைக் குறைப்பது அல்லது எடுத்துவிடுவது என்பது மிக அத்தியாவசியமான செயலாகும். அப்படி அதை எடுத்துக் கொள்கிறபோது நமக்கு விழும் துண்டு அதிகமாகிறது. இப்படிப்பட்ட துண்டுகளை எல்லாம் சரிக்கட்ட வேறு ஏதாவது வழிவகையை இந்தச் சர்க்கார் கண்டுபிடித்தாக வேண்டும். விவசாய மக்களின் மேல் மறைமுகமான வரிகள்—இன்டயரக்ட் டாக்ஸஸ்—எந்த அளவிற்குப் போட முடியுமோ அவற்றைப் போட்டாகிவிட்டது. டயரக்ட் டாக்ஸஸ் சரியான முறையில் வசூலாகவில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கிற மரண வரியை எடுத்துக் கொண்டால் நம் ராஜ்யத்திற்குக் கிடைத்துள்ள தொகை மிக மிகக் குறைவு. பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டது மரண வரி. இந்த ஆண்டு நமக்கு கிடைக்கக் கூடிய தொகை 56 லட்சம்தான் என்று எதிர்பார்க்கிறோம். அதைப் பார்க்கும் போது எந்த அளவிற்கு பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த இந்த மரண வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஆகவே இந்தமாதிரி வரிகளிலிருந்து தப்புகிறவர்களிடம் இருந்து ஒழுங்கான முறையில் வரிகளை வசூலிப்பதில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் சாதாரண மக்களின் தலையில் போடக் கூடிய வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்று மதுவிலக்கு பற்றி நம் முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், தீவிரமாக அமலாக்குவேன் என்று. நாட்டில் ஒழுங்கும், சாதாரண மக்களின் நிலை உயர வேண்டும் என்றும் அந்தக் கருத்தில்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன், அதை வரவேற்கிறேன். இந்த நாட்டில் யாரும் குடிக்காமல் இருக்கவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். என் அனுபவத்தில், நான் தெரிந்து கொண்ட அளவில் குடிக்கிறவர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்களே தவிர குடிக்காமல் இருக்கவில்லை. ஆகவே, இந்த மதுவிலக்குச் சட்டத்தை நாம் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில் கோடிக் கணக்கான ரூபாய்களை மக்களின் நன்மைக்காக என்று விட்டு வைக்கிறோம். ஆகவே, ஒரு கமிட்டி போட்டு மதுவிலக்கு எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது. இல்லை வெற்றி பெறவில்லையா என்பதைப் பரிசீலனை செய்து அதன் பேரில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ரெவின்யூக் கணக்கில் துண்டு விழுவதை ஈடுகட்ட மத்திய சர்க்காரிலிருந்து 6½ கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நமக்குக் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த 684 லட்சம் ரூபாய் இந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை. அப்படி அதை கணக்கில் எடுத்துக் கொண்டும் அதற்கு மேல் இந்தத் துண்டு விழுந்திருக்கிறது என்றால் அந்தத் துண்டை சரிக்கட்ட மத்திய சர்க்காரி

டம் அனுமதித்தான் ஆகவேண்டும். இந்தத் தொகையைச் சேர்க்காமல் துண்டு விழுந்திருக்குமானால் அந்த 684 லட்சம் ரூபாயைக் குறைத்து பாக்கித் தொகையை ஈடுகட்ட வேண்டும். ஆகவே இதைச் சர்க்கார் புனர்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளை அறிக்கையில் 1967-ல் குடியானவர்களுக்கு முன்பணம் கொடுப்பதில் ரூபாய் 358.92 லட்சம் என்றும், 1967-68-க்கு ரூபாய் 353.12 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றிருக்கிறபோது அதிலெல்லாம் போய்க் குறைக்கக் கூடாது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 75 கோடி தான் செலவு செய்ய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய்க்கு ப்ளானிங் கமிஷன் அனுமதி கொடுத்தாலும் 79 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்திருக்கிறார்கள். நடப்பாண்டிலும் இன்னும் அதிகப்படியாக செலவழிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி விவசாயத்திற்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்திற்கும் தொகையைக் குறைக்கவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு புது வரிகள் விதிக்காமல் பழைய வரிமுறைகளில் இருந்து வருவாயைப் பெருக்கியும், மத்திய சர்க்காரிடமிருந்து மான்யங்களைப் பெற்றும் துண்டைச் சரிகட்ட வேண்டும்.

பஸ்களை தேச உடைமையாக்குவோம் என்று சர்க்காரிலிருந்து சட்டபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் அமைச்சரவை பதவியேற்றுக்கொள்ளும்போது இந்தக் காரியத்தைச் செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி பஸ்களை தேசியமயமாக்குவதற்கு மத்திய சர்க்கார் அல்லது ப்ளானிங் கமிஷன் அனுமதி அளிப்பார்களா என்பது சந்தேகம். இருந்தாலும், நம் வாக்குறுதியை நிறைவேற்ற மத்திய சர்க்காரிடம் அல்லது ப்ளானிங் கமிஷனிடம் எடுத்துச் சொல்லி நாங்கள் இதை எங்கள் சொந்தப் பொறுப்பில் செய்கிறோம் என்று கூறி வாதாடி அதற்கான நடவடிக்கைகளை உடனடி எடுத்துக் கொள்ள வேண்டும். அஸெட்ஸ் அண்ட் லயபிலிட்டீஸைப் பார்க்கும்போது ஆஸ்தியை விட பொறுப்பு அதிகம் இல்லை என்றாலும் சதவிகிதம் அதிகமாயிருக்கிறது. இருந்தாலும், இம்மாதிரி தேசியமாக்குவதற்கு மக்களிடம் கடன் பெறுவதில் தவறில்லை. ஆக, பொது மக்களிடமிருந்து கடன் நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும் என்ற அளவில் பஸ்களை தேசியமாக்க அதற்காகும் செலவை பொதுமக்களிடமிருந்து கடனைப் பெற்று திருப்பிக் கொடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் மத்திய சர்க்காரிடமும், ப்ளானிங் கமிஷனிடமும் வாதாடி உடனடியாக பஸ்களை தேசியமயமாக்குவதற்குள்ள திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச அவகாசம் அளித்த உதவித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



**திரு. என். கிட்டப்பா:** பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள் நம் அவை முன் அளித்துள்ள வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் தர்மபுரம், திருவாவடுதுறை போன்ற ஆதீனங்களுக்குள்ள கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை சில தனிப்பட்ட வசதி படைத்தவர்கள் மொத்த குத்தகைக்கு எடுத்து தங்கள் சுய லாப அடிப்படையில் சாகுபடிக்கு வெவ்வேறாகப் பிரித்துக் கொடுத்து பல விவசாயிகளிடம் வேலை வாங்கி வருகிறார்கள். ஆனால் பாடுபடுகிற உண்மையான விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய லாபம் கிடைப்பதில்லை என்பது மட்டும் அல்ல, அவர்களை எந்த நேரத்திலும் நிலத்தை விட்டு வெளியேற்ற நியாயவாரச் சட்டத்தில் அநியாயமாக இடம் வைக்கப்பட்டிருக்கிறது. நியாயவாரச் சட்டப்படி உள்குத்தகைதாரர்களுக்குச் சாகுபடி உரிமை செல்லாது என்ற வாசகங்கள் மூலம் உண்மையில் சாகுபடி செய்கிறவர்களின் தலையின் மேல் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே உள் குத்தகைதாரர்கள் என்ற பெயரில் உள்ள உண்மையான விவசாயிகளைக் காப்பாற்ற அவர்களுக்குச் சாகுபடி உரிமைகளை நிலைநாட்டித் தரவேண்டும். நியாயவாரச் சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை நீக்க வேண்டும். மாயவரம் மணல்மேடு பகுதியில் உள்குத்தகை வைத்திருந்த விவசாயிகள் பலர், நூற்றுக்கணக்கில் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். சாகுபடி செய்தவர்கள் அவர்கள் தான் என்ற உண்மை கிராம கர்ணிகர் அடங்கலில் பதிவு செய்யப்பட்டிருப்பதிலிருந்து தெரியவரும். இருந்தும், அவர்கள் இன்று வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். நம் அரசாங்கம் இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து வெளியேற்றப்பட்ட சாகுபடிதாரர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்க வேண்டும். இப்போது பாசனத்திற்கு உள்ள துணை வாய்க்கால்கள் பழைய காலத்தில் வெட்டப்பட்டவை. பழைய நாட்களில் புன்செய்யாக இருந்தது தற்போது நன்செய்யாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒருபோக நன்செய் நிலங்கள் இரண்டு போகமாகவும், இருபோக நிலங்கள் முப்போகமாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே முன்பு பாசனத்திற்குக் கிடைத்த தண்ணீர் இப்போது நிச்சயம் போதாது. மேலும் பல வாய்க்கால்கள், ஆறுகள் தூர் எடுக்காமல் நீண்டகாலமாகவிடப்பட்டிருக்கிறது. சாகுபடிக்கு வேண்டிய அளவு தண்ணீர் இப்போது கிடைப்பதில்லை. எனவே, புதிய வாய்க்கால்களை வெட்டுதல், பழைய வாய்க்கால்களை ஆழப் படுத்துதல், கண்மாய்களை விரிவு படுத்துதல், தலைப்புகளை அமைத்தல், தூர் எடுத்தல் போன்ற மராமத்து வேலைகளை, கோடைக்காலமாகிய தற்போது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம் தொகுதியில், மணல்மேடு பகுதியில் மண்ணியாறு பாசனம் சரியாக இல்லாத காரணத்தினால் 2,000 ஏக்கர் நிலங்கள் இரண்டு ஆண்டுகள் காலமாக மகசூல் கிடைக்காமல் தரிசாகக் கிடக்கின்றன. அவைகளுக்கு நல்ல நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை அரசாங்கத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் நிலங்களைச் சொந்தமாகவோ, குத்தகைக்கு வைத்து இருப்பவர்கள் அரசாங்கக் கடன் உதவியால் வடிமுனை குழாய்க் கிணறுகளை வைத்து இன்ஜின்கள் வைத்து ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக்கி, இரு போக நிலங்களை முப்போக நிலங்களாக்கி நல்ல லாபத்தை அடைகிறார்கள். அதனால் நல்ல விளைச்சல் ஏற்படுகிறது என்றால் அது குறித்து அத்தனை பேர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதைப் போல உதவிகள் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக் கொண்டுள்ள சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கிடைப்பதில்லை. அத்தகைய வடிமுனைக் குழாய்க் கிணறுகளை வைத்துத் தண்ணீர் இறைக்க வசதி செய்து பாசன வசதியை உருவாக்கித் தந்து அதற்கான முதலீட்டை அரசாங்கமே செய்து, அத்தகைய தொகையை ஆண்டு இறுதியில் வாடகையாக அவர்களிடமிருந்து ஈட்டிக் கொள்ளலாம் என்று இந்த மன்றத்தின் மூலமாக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பெரு தவியைச் செய்தால், சிறு நிலச் சொந்தக்காரர்களும் விவசாயிகளும் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க ஏதுவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வட்டார வளர்ச்சி என்ற பெயரால் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தால் பொது மக்களுடைய வரிப் பணம் ஏராளமாக விரயமாக்கப்படுகிறது என்ற எண்ணம் பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும் மராமத்து வேலைகளை நமது அரசாங்கம் மறு பரிசீலனை செய்யும் என்று நம்புகிறேன்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற உரங்கள், கடன்கள் முதலியவற்றை முறைப்படுத்தி சேதாரம் அன்னியில் காலாகாலத்தில் அவர்களுக்குக் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நடுத்தர மக்களும், ஏழை விவசாயிகளும் தங்களுடைய உடனடித் தேவைகளைச் சரி செய்துகொள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும் மற்றவைகளையும் நகரப் புரத்தில் உள்ள வட்டிக் கடைகளில் வைத்து பணம் வாங்கும்போது அவர்கள் வட்டியை வரம்பு மீறி, அதிகமான அளவுக்குப் பெறுகிறார்கள். இந்த நிலைமையைச் சர்க்காருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாயூரம், நாகை, சிதம்பரம் போன்ற கடலோரப் பகுதிகளில் சில பேர்கள் கள்ள வாணிபம் நடத்தி 10-12 ஆண்டுகளாக அத்தகைய வாணிபத்தில் ஈடுபட்டு வருகிறவர்கள், குறுகிய காலத்தில் பெரும் பணக்காரர்களாக, கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள் என்று நாட்டு மக்கள் பரவலாகப் பேசிக்கொள்வது மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், தோப்புகள் என்ற பெயரால் இருக்கக்கூடியவைகள் எடுத்துக் காட்டாக இருக்கிற





காரணத்தினால், அத்தகைய நபர்கள்மீது அனுப்பப்படுகிற புகார்களை ஒழுங்காக விசாரணை செய்து, அவர்களுடைய கணக்கு வழக்குகளைக் கவனிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக பட்ஜெட் பிரசங்கம் என்று சொன்னால் பண வரவு-செலவை மாத்திரம் பேசுவது அல்ல. அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, மற்றும் சில விஷயங்களையும் சொல்லிவிட வேண்டுமென்பது சம்பிரதாயம். அந்த அடிப்படையில் நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக, இதற்கு முன் இருந்த காங்கிரஸ்காரர்கள் ஒரு பெரிய அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் சர்க்காரை ஒரு சிரமமான நிலையில் வைத்துவிட்டு அவர்கள் எலெக்ஷனில் ஜெயித்து பதவிக்கு வந்திருந்தால், ஜனங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ரொம்பவும் கஷ்டமான நிலையில் இருந்திருப்பார்கள். இப்பொழுது அவர்களுக்குக் கொஞ்சம், நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் ப்ரீத்திங் டைம் என்று சொல்லுவார்களே அந்த மாதிரி அவர்களுக்கு மூச்சுவிட அவகாசம் கிடைத்த மாதிரி இருக்கிறது. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், இப்போது உள்ள மந்திரி சபைக்கு அவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுவதற்காகத்தான். ஆகவே, இந்தக் கஷ்டங்களுக்கு மத்தியிலே ராஜ்ய சர்க்காரானாலும் சரி, மத்திய சர்க்காரானாலும் சரி, அவர்கள் என்ன பட்ஜெட்டை விசேஷமாகப் போட்டு நன்மை செய்துவிடப் போகிறார்கள் என்பது ஜனங்களுக்குத் தெரியும். அதாவது நரி மேலே விழுந்து பிடுங்காமல் போனால் சரி என்ற நிலைமையில்தான் இந்தியாவில் உள்ள 50 கோடி ஜனங்களும் இருக்கிறார்கள். புது வரிகள் வந்து விழுந்து விடக் கூடாது. அதாவது ஜூன் மாதம் பட்ஜெட் என்று சொல்லப்படுகிறதே, மத்திய சர்க்கார் ஆனாலும் சரி, ராஜ்ய சர்க்கார் ஆனாலும் சரி, அப்போது ஆட்டம் பாம்கள் வந்து விழுந்து விடாமல் இருக்க வேண்டும்—அது தான் ஜனங்களுடைய பிரார்த்தனை. மத்திய சர்க்காரிலே 20 வருஷங்களுக்கு முன்னால் 100 கோடி ரூபாய் அளவுக்குப் பட்ஜெட் இருந்தது. இன்று பத்திரிக்கைகளில் பார்த்தால் பட்ஜெட்டின் அளவு 3,000 கோடி ரூபாய்க்கு இருக்கிறது. அதிலும், 3,000 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இன்னும் புது வரிகள்கூடப் போட வேண்டி வரலாம். இன்க்ரீஸ்ட் எக்ஸ்பென்டிச்சர் 350 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது. என்று இந்திய சர்க்காரின் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமையில், இந்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு உட்பட்டு போலி அதிகாரங்களை வைத்திருக்கிற ராஜ்ய சர்க்கார் என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது. ஆகவே, இந்த அமைச்சரவை பிரமாதமாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும்

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 மார்ச் 21

நிதி நிலைமை இடம் கொடுக்காது. ஆகவே, சர்க்காரைக் கையில் வைத்துக் கொண்டு ஜனங்களுக்கு வேறு என்னென்ன சேவைகள் செய்யலாமோ, செய்ய முடியுமோ அவைகளை யெல்லாம் செய்ய வேண்டுமென்று பொதுப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் இன்றைக்குச் சட்டங்கள் சில இருக்கும். திறமையான சர்க்கார் என்று சொன்னால், ஜனங்களுக்குக் காலத்திற்கு ஏற்ப நல்ல சில சட்டங்களைச் செய்ய வேண்டும். அந்த முறையில் முக்கியமாக இப்பொழுது இருக்கக் கூடிய சட்டங்களில் டிபெக்டிவ் சட்டங்களாக இருக்கக்கூடியவைகளை யெல்லாம் நீக்கிவிட்டு, நல்ல சில சட்டங்களை ஜனங்களுடைய நன்மைக்காகச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். அதிலே முக்கியமானது, பீடித் தொழிலைப் பற்றி அண்ணா சொன்னேனே அப்படி ஒரு சட்டம். இப்படி பலப்பல இருக்கும். அதை நாளாவட்டத்தில் இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப் பார்க்கிறோம்.

அதே மாதிரி கைத்தறி நெசவாளர் பிரச்னை. இப்படிப்பட்டவைகளை யெல்லாம் நாம் சாமார்த்தியமாகக் கையாண்டு, ஜனங்களுக்கு ஒரு நிவாரணம் தேடித் தருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பல தீர்மானங்களை இந்தச் சட்ட சபையில் நிறைவேற்றி இந்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்தாக வேண்டும். அவைகளில் முக்கியமாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமானது உணவு விஷயம். இந்த அரசு போக்குவரத்துகளை இப்போது ஏகப்பட்ட கெடுபிடியாகச் செய்து, எங்கு பார்த்தாலும் புது மந்திரி சபையினுடைய நிலைமைகள் சீர்திருத்தும் என்று ஜனங்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக ஏற்பட்டு, அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனக்கு என்னுடைய தொகுதியிலிருந்து அநேக லெட்டர்கள் வருகின்றன. விலைவாசி நாளுக்கு நாள் ஏறுகிறது. எங்கு பார்த்தாலும் செக்போஸ்ட்டுகள் என்று வைத்து, முன்பு இருந்த காங்கிரஸ் சர்க்காரைவிட கெடுபிடி அதிகமாக ஆகியிருக்கிறது, ஜனங்களுக்குத் தொந்தரவு அதிகமாக ஆகியிருக்கிறது என்றெல்லாம் லெட்டர்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த உணவு விஷயத்தில் நீங்கள் ரொம்பவும் கவனிப்பாக இருக்க வேண்டும். ஜில்லாவுக்குள்ளே போக்குவரத்தைக் கெடுபிடி செய்யாமல் தாராளமாகப் போகலாம், வரலாம் என்ற ஒரு நிலைமைக்கு ஒரு உத்தரவை அதி சீக்கிரமாகப் போட வேண்டும். இல்லாவிட்டால், மாறுதலை விரும்பிய ஜனங்களுக்கு அவர்களுக்குத் தகுந்த பரிகாரம் கிடைக்காமல், அதிருப்தியும், கோபமும் ஜாஸ்தியாகும் என்று நான் தாழ்ந்த மனப்பான்மையுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக, மூன்று ஏகராவுக்குக் கீழுள்ள விவசாயிகளுக்கு விதி விலக்கு அளித்துவிடுங்கள். அந்த நெல்லைக் கொண்டு போய், அந்த உணவு தானியத்தைக் கொண்டு போய் அவர்கள் இந்து மகாசமுத்திரத்திலோ அல்லது வங்காள விரிகுடாக் கடலிலோ கொட்டிவிடப் போவதில்லை, நாட்டிற்குள் தான் பரிமாறப் போகிறார்கள். முக்கியமாக நான் ஒன்று சொல்லிக்



1967 மார்ச் 21] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

கொள்வேன். மெட்ராஸ், கோயம்புத்தூர் இப்படிப்பட்ட இடங்களில் சட்டபூர்வமான ரேஷன் அமுலில் இருக்கிறது. மற்றும் கிராமாந்திரப் பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் 'இன்பார்மல் ரேஷனிங்' இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் இப்படிச் சிறு நிலச்சுவான்தார்களிடமிருக்கும் உணவு தானியங்களை வெகுவாக உபயோகிப்பார்கள். கள்ள மார்க்கெட்டில் ரூ. 2-க்கு மேல் விலை என்று சொன்னால், இப்படிப் போக்குவரத்து கொஞ்சம் சிரமம் இல்லாமல் இருந்தால், சுலபமாக ரூ. 1-60, 1-70 என்ற முறையில் ஒரு படிக்கு 30, 40 பைசா கணிசமாகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும். அரசாங்கத்திற்கு அவர்கள் பாதி அளவாவது வாழ்த்துக் கூறுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தவிர, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்பது நம்முடைய கையில் இல்லை. இந்திய சர்க்காருடைய கொள்கையில்தான் மாறுதல் ஏற்பட வேண்டும். அதற்கு நாளாவட்டத்தில் நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் முதல் மந்திரிகள் கூடும்பொழுதுதான் அதைப்பற்றி யோசித்து, அந்தத் தீமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டும். அப்படியில்லாமல் இங்கே வந்து சட்ட சபையில் பேசுவதில் யாதொரு அர்த்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கொண்டு சோஷலிசம் என்று அடிக்கடி இங்கே பேச சில பேர்கள் எத்தனித்தார்கள். சோஷலிசம் என்பது நல்ல வார்த்தைதான். அதாவது ஏழைகளுக்கு வாழ்வு அளிப்பது என்பது. ஆனால் அப்படி பேசிக்கொண்டே மறைமுகமாக மக்களை ஏமாற்றத்தில் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். ஏதோ இருப்பதற்குள்ளே நல்ல காரியங்களை ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். இம்மாதிரி வார்த்தைகளில், சுலோகங்களில் ஒன்றும் மயங்கிவிடாதீர்கள். இப்பொழுது இருக்கப்பட்ட முறையிலே அதைச் செய்துவிடவும் முடியாது. ஆகவே, அம்மாதிரி ஒரு பிரச்னையில் ரொம்பவும் கவனம் செலுத்தினால், மக்கள் மத்தியில் அதிருப்திதான் ஏற்படும். பஸ் டிரான்ஸ்போர்ட்டை நாஷனலைஸ் செய்து விடுவோம் என்ற புது வார்த்தைகளினால் மயக்கம் கொண்டு, அதை நாங்கள் செய்து விடுவோம், இதை நாங்கள் செய்துவிடுவோம் என்று சொல்லி விடாதீர்கள். இவற்றை யெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு ஒத்திவைத்து, முக்கியமாக இருக்கும் உணவுப் பிரச்னை விஷயத்தை முதலில் கவனியுங்கள். நல்ல பல சில்லரைச் சட்டங்களை மக்களுடைய நன்மைக்காகச் செய்வதையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கிற நிலைமையில் மந்திரியில் இருக்கிற நிதி அமைச்சர் அவர்கள் ரொம்பக் கடுமையாக இருப்பார். ஆகவே, வருங்காலத்தில் 'ஆஸ்டெரிடி டிரைவ்' என்று சொல்லுவார்களே சிக்கனம் என்பதில் ஜாக்கிரதையாக இருந்து இந்திய சர்க்காரிடமிருந்தும், ரிசர்வ் பாங்கியிலிருந்தும், ஜாஸ்தி கடனை எதிர்பார்க்காமல் திறமையாகச் சர்க்கார் நடத்த வேண்டும். மந்திரி

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1967 மார்ச் 21

களுடைய சம்பளத்தையும், மற்றும் ஸ்பீகருடைய சம்பளத்தையும் குறைத்துக் கொண்டதை நான் பாராட்டினாலும், இதெல்லாம் கடலில் காயம் கரைத்த மாதிரி தான். ரூ. 200 கோடி பட்ஜெட்டில் இது ஒரு பெரிய சிக்கனமாகாது. ஆகவே, ரூ. 30 கோடி, 40 கோடி சிக்கனத்தைக் கண்டுபிடிப்பதற்கு முக்கியமாக யோசனை செய்யுங்கள். இப்பொழுது இருக்கப்பட்ட நிலைமையில் சிக்கனம் இல்லாவிட்டால், ஒன்றும் செய்ய முடியாது. ரூ. 190 கோடி போன வருஷம் பட்ஜெட்; இந்த வருஷம் ரூ. 200 கோடிக்கு மேலாக போயும், பழையபடி ரூ. 7 கோடி பற்றாக்குறை வருகிறது என்று சொன்னால், இதற்கு விலைவாசியினால் ஏற்பட்ட துன்பம் தான் காரணம். வருங்காலத்தில் நீங்கள் ஜூன் மாதத்தில் பட்ஜெட் கொடுக்கும்பொழுது, விலைவாசியைக் குறைப்பது பற்றி கவனம் செலுத்த முடியாவிட்டாலும் வருவாய் இல்லை என்று புது வரிகளைத் தயவுசெய்து போட வேண்டாம். மேலும் ஜனங்களுக்கு வசதியான வாழ்வை அளிப்பதற்கு இந்தப் புது பட்ஜெட்டிற்குள் முக்கியமாக உணவு போக்குவரத்து கண்ட்ரோல்களை எடுத்துவிடு வதற்கு வேண்டிய ஆயத்தத்துடன் இப்பொழுதே வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. என். சங்கரய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநில அரசாங்கத்தினுடைய உயர்திரு. முதல் அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தினுடைய இடைக் கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசிய உரையின் மீது சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட் உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், சமீப காலத்தில் மாநில அரசாங்க அலுவலர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் இரண்டு தடவைகளில் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டியிருந்த காரணத்தினால், ஒரு முழு ஆண்டுக்கு இந்த இரண்டு தடவைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்சப்படி மட்டும் சேர்த்து ரூ. 9 கோடி 50 லட்சம் கொடுக்கப்படவேண்டி யிருக்கிறது என்பதை நம்முடைய மாநில சட்ட மன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே போல மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மத்திய அரசாங்கத்தினுடைய விற்பனை வரி விகிதத்திலிருந்தும், மத்திய அரசாங்கம் விதித்திருக்கக்கூடிய யூனியன் எக்சைஸ் வரியிலிருந்தும் மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகையாக நடப்பு ஆண்டிலே ரூ. 3½ கோடி எதிர்பார்த்தோம். ஆனால் உண்மையிலே கிடைக்கப் போவது ரூ. 1 கோடி 70 லட்சம்தான். ஆகவே, இந்த இனத்திலே துண்டு விழுகிறது என்பதும் இந்த நடப்பு ஆண்டிலே வரவு செலவுத் திட்டத்தில் நாம் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு கனம் சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் மாநில அரசாங்கத்தினுடைய வரவு இனங்களானாலும் சரி, மத்திய அரசாங்கத்தினுடைய வரவு இனங்களானாலும் சரி, மத்திய அரசாங்கத்தினிட



1967 மார்ச் 21] [திரு. என் சங்கரய்யா]

மிருந்து மாநில அரசாங்கத்திற்குப் பங்காகப் பெறவேண்டிய வரவு இனமானாலும் சரி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் நடப்பு ஆண்டில் இந்த வருமான இனங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதுதான் இன்றைக்கு நம்முடைய சட்ட மன்றத்தில் உள்ளவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் என்று நான் கருதுகிறேன். ஆகவே நாடு பூராவிலும், நம்முடைய மாநிலத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நடப்பு ஆண்டிலே, 1966-67 ஆண்டிலே வருவாய் இனங்கள் குறைந்திருக்கின்றன என்று சொன்னால், நாட்டு மக்கள் கையிலே அவர்களுடைய வருமானம் குறைந்து இருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. அதைப்போல கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு சேமிப்பு மூலம் எதிர்பார்த்த அளவுக்கு சேமிப்பு கிடைக்கவில்லை என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய பொருளாதார வளர்ச்சி மந்தப்பட்டதன் காரணமாக மாநில மத்திய அரசாங்கத்தினுடைய வரிகளின் மூலமாக வரக்கூடிய வரவு இனங்கள் குறைந்ததோடு, சிறு சேமிப்பு கிடைக்க வேண்டிய அளவு, எதிர்பார்க்கப்பட்ட அளவு கிடைக்கவில்லை. இது எதை எடுத்துக் காட்டுகிறது என்றால், விலைவாசி உயர்வின் காரணமாக வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக உள்ள பண்டங்களை வாங்கமுடியாத நிலைமையிலுள்ள மக்கள் சிறு சேமிப்பில் ஈடுபடுவதற்கு அவர்கள் கையில் பணம் மிஞ்சவில்லை என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, நம்முடைய மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் திட்டக் கமிஷன் மூலமும் தேசீய வளர்ச்சிக் கவுன்சிலில் நம்முடைய மாநில அரசாங்கம் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய நேரத்திலும் இந்த அம்சங்களை யெல்லாம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்தினால் தான் மக்களுடைய உணவுப் பிரச்னை தீர்க்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட விலைக்கு உணவு கிடைக்கும்படிச் செய்தால் தான், அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்துவது என்ற பிரச்னை திரும்பத் திரும்ப ஏற்படாமல் இருக்கும். விலை உயர்ந்து போகக்கூடிய நேரத்தில் அதற்கேற்றபடி பஞ்சப்படியை உயர்த்திக் கொண்டே போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், நாட்டினுடைய பொருளாதாரம் சீர்குலைக்கப்படும் என்பதை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், இன்றைக்கு யோசனை செய்து பார்த்தால், நடப்பு ஆண்டில் வெளிச்சந்தை கடனை 14 கோடி ரூபாய் பெறுவதாக இருந்து, ரிசர்வ் பாங்கியின் ஆலோசனையின் பேரில், 13 கோடியாக வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நம்முடைய அரசாங்கம் நடப்பு ஆண்டில் எந்த விதமான அதிகப் பற்றும் இல்லாமல் நடந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். கனம் முதல் அமைச்சருடைய பட்ஜெட் உரையின் எட்டாவது பாராவில் மத்திய சர்க்காருக்கும், மாநில அரசாங்கத்

[திரு. என் சங்கரய்யா] [1967 மார்ச் 21

திற்கும் இருக்கக் கூடிய இந்த நிதி நிறுவனங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்கும் இந்தப் பிரச்னையை ஒரு சாதாரணமான கணக்கு வழக்குப் பிரச்னையாகவோ அல்லது கொடுக்கல் வாங்கல் பிரச்னையாகவோ பார்க்காமல், அதை ஒரு அரசியல் பிரச்சினையாகப் பார்த்து, நல்ல முறையில் அவர்கள் மாநில சர்க்காருக்கு உதவ முன் வரவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ரிசர்வ் பாங்கு அதிகப்படியான பற்று அளிக்கும் என்பதை நான் வரவேற்கிறேன். அதேபோல, இன்றைக்குப் பார்த்தால், முதல் அமைச்சருடைய உரையிலே விற்பனை வரியிலிருந்தும், மேலும், மின்சார நுகர்ச்சி வரியிலிருந்தும் வரும் தொகைகள் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், மாநிலத்தில் இருக்கக் கூடிய சாதாரண வியாபாரிகள், இன்றைக்கு இருக்கக் கூடிய விற்பனைவரிச் சட்டப்படி, வருஷம் ஒன்றுக்கு 10,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்தால், அவர் வரி கட்ட வேண்டும். அதிகப்படியாக சின்னஞ்சிறு வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த விற்பனை வரியை நல்ல முறையில் பரிசீலனை செய்து, சாதாரண சின்ன வியாபாரிகளுக்கு இந்த வரியிலிருந்து நீக்கம் ஏற்படும் வகையில் காரியம் செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்யும் போது, பெரிய வியாபாரிகளுக்கு வரியை அதிகப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தால் வரவேற்கத் தக்கதாக இருக்கும். சின்ன வியாபாரிகள் அதை வரவேற்பார்கள். அவர்களுக்கும் நிவாரணம் கொடுத்ததாக இருக்கும். உதாரணமாக வருஷத்திற்கு 30,000 ரூபாய் வியாபாரம் செய்யக் கூடிய சிறிய வியாபாரிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க மாநில சர்க்கார் பரிசிலனை செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படிச் செய்வதை சிறு சிறு வியாபாரிகள் வரவேற்பார்கள் என்பதை இந்தச் சமயத்தில் முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சி உறுப்பினர், நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், நரி சும்மா இருந்தால் போதும், மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும் என்பது போல இந்த அரசாங்கம் சும்மா இருந்தால் போதும் என்றார்கள். மாநிலத்திலே இருக்கும் பெரும் தனம் வைத்திருப்பவர்கள் அவ்வாறு நினைக்கலாம். அரசாங்கம் மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும், அவர்களுக்கு தங்கள் வாழ்க்கையை நடத்த வகையில் இருப்பு இருப்பதால் அப்படி நினைப்பார்கள். ஆனால் மாநிலத்திலே மிகப் பெரும்பாலான மக்கள் அவர் சொல்வது போல நரி விழுந்து பிறாண்டாமல் இருந்தால் போதும் என்று இருக்கமாட்டார்கள். அவர்கள் விஷயத்தில் நரி மேலே விழுந்து பிறாண்டாமல் இருந்தால் மட்டும் போதாது. இல்லாதவர்களுக்குத் தேடியும் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதை நண்பர் ஆதிமூலத்தின் பிரியமான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



N67·1·5

1967 மார்ச் 21] [திரு. என் சங்கரய்யா]

அதே போல பஸ் போக்குவரத்தை தேசியமாக்குவது பற்றியது. அதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறோம். ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சொற்பொழிவுகளிலும் அந்த அம்சம் காணப்பட்டது. இன்றைக்கு நமக்குச் செலவினங்கள் மிக அதிகமாக இருக்கிறது. வருமானத்தை பெருக்குவதற்கு பஸ் போக்குவரத்தைத் தேசியமாக்குவது நியாயமானதே. அதில் ஒன்றும் புரட்சிகரமானது என்று சொல்லக் கூடியது இல்லை. கடந்த காலத்தில் ஸர். சி. பி. ராமசுவாமி அய்யர், பொருளாதாரத் துறையில் பழங்காலக் கருத்துக்களை கொண்டிருந்தவர். திருவாங்கூரிலே திவானாக இருந்த போது பஸ்களை அரசாங்கத்தில் எடுத்துக் கொண்டு நடத்தியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, அது ஒரு சாதாரணமான, சாமான்ய நடவடிக்கைதான். முதலாளித்துவ ராஜ்யங்களின் வருமானத்தைப் பெருக்க எடுக்கும் சகஜமான நடவடிக்கைதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு சமுதாயப் பணிகளைச் செய்ய அரசாங்கம் இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை படிப்படியாகப் பெருக்கிக் கொள்வது அத்தியாவசியமானது.

64967

அதேபோல, கனம் முதல் அமைச்சர் உரையில் வரக்கூடிய மதிப்பீடுகளை நிதி இலாகா கணக்குப் போட்டு இவ்வளவு நிதி கிடைக்கும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதனுடன் சேர்த்திருக்கிறார்கள். அடுத்த மாநில பட்ஜெட்டை சட்டசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும் போது, நிலவரியை நீக்குவது பற்றி அரசாங்கத்தின் முடிவைத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தத் துறை பற்றிக் குறிப்பிடும் போது, நில வரியிலிருந்து விலக்கு அளிக்கும் போது, பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. சமுதாயத்தில், கிராமப் புறங்களில் சொந்த உழைப்பினாலும், குடும்பத்தாரோடும் விவசாயம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும், அவர்கள் போன்ற சிறுநில உற்பத்தியாளர்களுக்கும், நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லும் போது, மற்றபடி பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்கு அப்படி விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயத் துறையில் இருக்கும் பெரும் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து இந்த வரியை வசூல் செய்வது நியாயமானது என்பதை நிபுணர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பெரு நிலச் சொந்தக்காரர்கள் சம்மந்தப்பட்ட வரையில் இந்த நில வரியோடு விவசாய வருமான வரியையும் இணைத்து, அப்படிப் பட்ட வரியை முறைப்படுத்தி வசூல் செய்யக் கூடிய ஒரு புதிய முடிவு எடுத்தால், அரசாங்கத்தினுடைய வருமானத்தை நல்ல முறையில் அமைக்கலாம் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல, கனம் சபாநாயகர் அவர்களே, ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் முதல் அமைச்சருடைய உரையில், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இவர்களுடைய நிதிநிலை பற்றி ஆலோசனைகளை மாநில அரசாங்கம் தேசிய வளர்ச்சி கவுன்சிலிலும், திட்ட கமிஷனிலும் வற்புறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். கனம் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையில் பாங்கு ஊழியர்கள் கூட்டத்தில், பாங்குகளை தேசியமாக்குவதில் தங்களுடைய கட்சி ஆதரிக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படிச் செய்தால் மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ தங்கள் செலவினங்களுக்கு வகை காண முடியும். நாட்டு மக்களுடைய பணம் பாங்குகளில் டிபாசிட் செய்யப் பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை நாட்டின் நலனுக்காக பயன் படுத்த முடியும். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் அந்தத் தொகைகளை மக்களுடைய நலனுக்காக உபயோகிக்க முடியும். அப்படி எடுத்துக் கொண்டால், இன்றைக்கு வெளி நாட்டு வியாபாரத்தை, இந்திய சர்க்கார் மேற்கொண்டால், அதிகமான லாபம் கிடைக்கும். மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் நிதிநிலையில் முன்னேற்றம் காணமுடியும்.

இறுதியாக 1967-68 பட்ஜெட்டை வருகின்ற ஜூன் மாதத்தில் கனம் முதல் அமைச்சர் இந்தச் சபையில் சமர்ப்பிக்கும் போது இவற்றையெல்லாம் தக்க முறையில் பரிசீலித்து, வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய இரண்டொரு பிரச்சினைகளைக் குறித்து அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய நிலை மிகவும் மோசம் அடைந்திருப்பதைக் கண்டு, அவர்களைத் தட்டிப் பாராத நிலையைக் கண்டு, இப்பொழுது அவர்களைத் தட்டிக்கொடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய உரம், கடன் ஆகியவைகளை மிக எளிதான முறையில், மிகவும் விரிவான முறையில் அருள்கூர்ந்து செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விவசாயத்திற்கு மின்சார பம்ப் செட் பொருத்தியிருக்கும் நிலையில், அவர்களுக்குத் தேவையான மின்சாரத்திற்கான கட்டண விகிதத்தைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும். விவசாய பம்ப் செட்களுக்கு வழங்கும் மின்சாரத்திற்காகக் கட்டண விகிதத்தைக் குறைப்பதனால் ஏற்படும் இழப்பை, ஆலை முதலாளிகளிடத்தில் அதிகக் கட்டணம் பெற்றுச் சரிக்கட்டிக்கொள்ளவேண்டும் என்ற ஆலோசனையையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உணவு உற்பத்தித் திட்டம் என்ற தலைப்பில், சிறிய பாசனத் திட்டங்கள் விவேகமாகவும் விரைவாகவும் செயல்படத் தூண்டவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இரசாயன உரங்களைக் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கச் செய்திருக்கும் நிலையில், மேல் மட்டத்தில் உள்ள பெரியவர்கள் வருகிற உரங்களையெல்லாம் பல பேர்களின் பேரில்





பில் போட்டுவிட்டு, அந்த உரம் அத்தனையையும் தாங்களே வைத்துக் கொண்டு; பிறகு அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைக் கண்காணிக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்துவதோடு விரிவுபடுத்தவேண்டும். அத்துடன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வைத்திய வசதியும் கிட்டுவது இல்லை. கிராமப் புறங்களில் மூன்று நான்கு படுக்கைகள் உள்ள பிரசவ விடுதிகளையாவது ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அரிசனங்களுக்கு எந்தப் பிரசவ வசதியும் கிடைப்பதில்லை. கொடுக்கப்படும் மருந்துகளின் அளவையும், தரத்தையும் உயர்த்தி வழங்கவேண்டும். அரிசனங்களுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒன்றிரண்டு கல்யாண மண்டபங்களையாவது கட்டிக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் விழைகிறேன். குடியிருப்புக்கான மனை வழங்குவதிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். கூட்டுறவு சங்கங்களின் தேர்தலை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நடத்த வேண்டும். எவர்சில்வர், பித்தளை போன்றவைகளைக் கொண்டு செய்யப்படும் சாமான்களின் போட்டியினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் குலாலர்கள், உடையார்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஈடேற்றும் வகையில் வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்கப்படவேண்டும். அத்துடன், தேர்தல் நேரங்களில் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கெல்லாம் தக்க வழிவகை செய்ய வேண்டும். ஆசிரியர் சமுதாயத்தை வேண்டுமென்றே பழி வாங்கும் நிலை இன்று உருவாகியிருக்கிறது. அது மட்டுமல்ல, பல கிராமங்களுக்குக் காங்கிரஸ்காரர்களுடைய முதலைத்தில் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் வேண்டுமென்றே, ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, 'கழகத்திற்கு ஓட்டுப் போட்டவர்கள், ஆகவே அவர்களை பஸ் விடச் சொல்லுங்கள்' என்று அகம்பாவமான பேச்சைப் பேசும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையையும் அரசாங்கம் கவனித்து, ஆவன செய்யவேண்டும். இந்த வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆர். கருப்பையா அவர்கள் இப்பொழுது பேசலாம்.

* திரு. ஆர். கருப்பையா : அன்புக்கும் பண்புக்கும் உரிய துணைத் தலைவர் அவர்களே . . .

மதிப்பிற்குரிய துணைப்பேரவைத் தலைவர் : சபாநாயகரை விளிக்கும் போது, "அன்புக்கும் பண்புக்கும் உரிய" என்ற சொற்களைச் சேர்த்து விளிக்கக் கூடாது. "சபாநாயகர் அவர்களே" என்று மட்டும் விளிக்க வேண்டும்.

* திரு. ஆர். கருப்பையா : அவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் சிக்கலான நாட்களிலே ஆட்சியை ஏற்றுள்ளது, அந்தக் கட்சிக்கு தொந்தரவும், சில சிக்கல்களும் உள்ளன என்று பலர் பேசுகிறார்கள். உண்மையிலேயே இந்த நாடு இப்பொழுது மிக நல்ல நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்திருக்கிற நாள் நல்ல நாள் என்றே சொல்லவேண்டும். சென்ற இருபது ஆண்டுக் காலமாக நாட்டை நல்ல முறையில் காங்கிரஸ் ஆட்சி செய்துவந்ததன் விளைவாக, நாட்டிலே நல்ல நிலைமைகள் ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற இன்றைய ஆட்சியாளர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள் என்று தான் சொல்லவேண்டும். அதே போன்று இந்த நாட்டு மக்களும் உண்மையிலேயே மிகவும் நல்லவர்கள் என்று சிறப்புக்குரியவர்கள் என்றுதான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இத்தகைய நல்ல சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் இந்த ஆட்சியாளருக்கு, நாட்டு மக்கள் மேலும் மேலும் நல்ல நிலையில் வருவதற்காக என்ன என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து ஒரு சில செய்திகளை (விஷயங்களை) இங்கே குறிப்பிட்டு விடை பெற நான் விரும்புகிறேன்.

இந்த நாட்டின் வருமானம் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது பல மடங்கு அதிகரித்திருக்கிறது. அதை விடச் செலவும் அதிகரித்திருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. நாட்டின் வருவாயை விடச் செலவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், நாம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அணைகட்டுகளை கட்டி ரோடுகள் போன்றவற்றை அமைத்திருப்பது தான். அதன் காரணமாக இப்பொழுது கட்டியுள்ள அணைக் கட்டுகளும், தீட்டியுள்ள திட்டங்களும் பயன் தரும் காலம் இதுவே ஆகும். இந்த நாட்டிலே நல்ல நிலை நிலவி வருகிறது. இதே போன்று எப்பொழுதும் இருந்துவர, இப்போதைய ஆட்சியாளர்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல தொல்லைகள் என்றுமே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இங்கே ஒரு சிலர்தான் விவசாய மக்களுடைய தொல்லைகளை வெளிப்படுத்துகிறார்கள். பலர் விவசாயப் பெருங்குடி மக்களைப்பற்றிக் குறிப்பிடுவது கூட இல்லை. விவசாயப் பெருங்குடியிலே பிறந்த என்னைப் போன்றவர்கள், விவசாயிகள் அன்றாடம் அனுபவித்து வருகிற தொல்லைகளைக் கண்கூடாகப் பார்த்து வருவதால் அவைகளைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயி அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு, சென்னைக்கு வந்து, நல்ல வேலை அல்ல என்று நினைக்கிற ஓட்டல் தொழிலாளியாக வேலை பார்க்கிறான் என்றால், அவனுடைய நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். உண்மையிலேயே விவசாயத்தில் வருமானம் இருக்குமானால், அவன் அந்த நிலைக்கு வந்திருக்க மாட்டான். அப்படிப்பட்ட நிலை மாறவேண்டுமானால், விவசாயிகளுக்கு நல்ல





ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும். விவசாய நாடு என்று நாம் பெருமையுடன் பேசிக்கொள்ளுகிற இந்த நாடு உண்மையிலேயே முன்னேறவேண்டுமானால், விவசாய உற்பத்திப் பொருள்கள் உண்மையிலேயே பெருக வேண்டுமானால், விவசாயிகளுக்கு நல்ல உற்சாகம் அளிக்கவேண்டும்; விவசாயம் வருமானமுள்ள ஒரு தொழிலாக மாற்றியமைக்கப்படவேண்டும். இந்த நிலை ஏற்பட்டால்தான் நாட்டு மக்கள் நன்றாக வாழமுடியும்; விவசாயப் பெருங்குடி மக்கள் நிலை உயர முடியும். ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அதன் காரணமாகப் பல லட்சக் கணக்கான ரூபாய் நாட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாது, அந்த நஷ்டத்தை வேறு வகையில் சரிப்படுத்தி விவசாயிகளுக்கு நல்ல ஆதரவு தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நேற்று ஒரு நண்பர் பேசும்போது, பல லட்சக்கணக்கான ஏக்கர் கரும்பு சாகுபடியின்கீழ் வந்ததன் காரணமாக, உணவு உற்பத்தி பெருகவில்லை என்று சொன்னார்கள். உண்மைதான். கரும்பு பயிரிட்டால் லாபம் அதிகமாகக் கிடைக்கிறது. நெற் பயிர் வைத்தால் அவ்வளவாக இல்லை. நெற் பயிர் வைத்தால் ஏக்கருக்கு ரூ. 400 வரும். கரும்பு பயிர் வைத்தால் ஏக்கருக்கு ரூ. 1,200 வரும். விவசாயி என்ன செய்வான்? எந்த விவசாயியும் கரும்புக்குப் பதிலாக நெல் பயிரிட்டு, தனக்கு வர இருக்கிற லாபத்தை குறைத்துக் கொள்ள விரும்பமாட்டான். எனவே விவசாயிகளினுடைய நிலை உயர வேண்டுமானால், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வதில்லை என்ற முறையை வகுக்கவேண்டும். அப்படிக் கொள்முதல் செய்தாலும், ஏக்கருக்குக் குறைந்தது இரண்டு மூட்டைக்கு மேல் கொள்முதல் செய்யக் கூடாது. மீதமுள்ள நெல்லை விவசாயி மார்க்கெட்டுக்குக் கொண்டு போய் மார்க்கெட் விலைக்கு விற்க அனுமதி தரவேண்டும். அப்படிச் செய்தால்தான் நெல் பயிரிட்டு வரும் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்பட முடியும். நாடு முன்னேற வேண்டுமானால், விவசாயிகள் முன்னேறவேண்டும். விவசாய மக்கள் முன்னேறவில்லையானால், விவசாய மக்களுக்கு ஆட்சியின்மீது வெறுப்போ, அதிருப்தியோ ஏற்பட்டால், அந்த ஆட்சி கவிழ்ந்தான் செய்யும். மேன்மை தங்கிய அமைச்சர்களும் மற்றவர்களும் இதைக் குறிப்பாகப் புரிந்து கொண்டு, விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டி, ஏழை விவசாயிகளின் நிலை உயர வசதிகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என் தொகுதியாகிய அரியலூர் பகுதியில் 'காமரசவல்லி' என்கிற ஒரு பிர்க்கா இருக்கிறது. அது மூன்று யூனியனில் சம்பந்தப்பட்டுள்ளது. மூன்று யூனியன்களில் தொடர்புள்ள பிர்க்காவாக இருப்பதால் அது எந்த வகையிலும் முன்னேற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. நடைபாதைக்குக் கூட வசதி இல்லாமலிருக்கிறது. ஒருவர் நடந்து செல்லலாமே தவிர, சைக்கிளில் போக முடியாது.

[திரு. ஆர். கருப்பையா] [1967 மார்ச் 21

சிறு தூற்றல் போட்டால் கூட, சைக்கிளைத் தூக்கிக் கொண்டுதான் போகவேண்டும். சைக்கிளை விட்டுக்கொண்டு செல்ல முடியாது. எனவே ஆளுங் கட்சியினர் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல, பின் தங்கிய பகுதிகளைத் தனியாக எடுத்துக்கொண்டு அத்தகைய பகுதிகள் முன்னேற, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அருகிலுள்ள நகரத்துடன் தொடர்பு கொள்ள, அவர்களுடைய விவசாயப் பொருள்களை விரைவில் கொண்டு சென்று விற்பனை செய்ய வழி வகுத்துக் கொடுத்து, ரோடு வசதியும்; மின்சார வசதியும் செய்து கொடுக்கவேண்டும். காமரசவல்லி பிர்க்காவானது எல்லா வகையிலும்பின்தங்கியிருப்பதால், அதைப் பல வகையிலும் முன்னுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்கள் வழிவகை செய்யவேண்டும் என்ற என்னுடைய பணிவான எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, சென்ற மாதம் 15-ம் தேதியன்று சென்னையிலும், மற்றும் வெளியூர் பத்திரிகைகளிலும் தேர்தல் சமயத்தில் ஒரு அறிக்கை வெளி வந்துள்ளது. தினத்தந்தியிலே என்று நான் நினைக்கிறேன். அதில் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருக்கிறது. 'ஓட்டுப் போடும் முன் ஒரு கணம் சிந்திப்பீர்' என்று தலைப்பிட்டு. 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி உடனே கிடைக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விலைவாசிகள் குறைகிற வரையில் அமைச்சர்கள் சம்பளம் வாங்க மாட்டார்கள் என்பன போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தன. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனினும் விலைவாசி குறைகிற வரையில் சம்பளமே வாங்காது இருந்திருந்தால் நாங்கள் அதைப் பாராட்டியிருப்போம். விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டும். எங்கள் அரியலூர் தொகுதியில் பல ஏரிகள், மராமத்து செய்யப்படாமல் தூர்ந்துபோய் இருக்கின்றன. அவைகள் 50 ஆண்டுகளுக்கு முன்னரே மராமத்து செய்யப்பட்டன. இப்போது கடந்த 15, 20 ஆண்டுகளுக்கு மேல் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக திருமழபாடி பிர்க்காவிலுள்ள 'கண்டிராதித்தம் ஏரி' அவசியம் வண்டல் எடுக்கப்படவேண்டும். வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வரும்போதே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இந்த ஏரியில் வண்டலை எடுத்து நல்ல முறையில் கண்காணித்து வந்தால், குறைந்தது 25 நாட்களுக்கு அதிகமாக பயன்படும் தண்ணீரை தேக்கி தட்டுப்பாடு ஏற்படும்பொழுது விவசாயிகள் ஒரு மாதம் வரையில் அந்த ஏரியில் தேங்கி உள்ள தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே கனம் அமைச்சர் அவர்கள் அந்த பகுதியினரை விசாரித்து ஆவன செய்யும்படி வேண்டுகிறேன். நேற்று பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள், 'இன்னும் 25 ஆண்டுகளுக்கு எங்களை அசைக்க முடியாது' என்றார். நான் சொல்கிறேன். 'என்றுமே நீங்களே இருங்கள்' என்று. நீங்கள் ஆட்சியை நன்றாகச் செலுத்தவில்லையானால், இரண்டு ஆண்டிற்குள்ளேயே மக்கள் கூறுவார்கள். நீங்கள்



1967 மார்ச் 21] [திரு. ஆர். கருப்பையா]

தேவையா இல்லையா என்பதை மக்களே தங்களுக்கு வேண்டிய மாறுதலைச் செய்துகொள்வார்கள். இன்றையதினம் மக்கள் மிகத் தெளிந்த நிலையில் உள்ளார்கள். கனம் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் இந்த விவசாயிகள் நிலை உயரவும், நாட்டு மக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளை மதித்து நடக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதற்கு முன் பேசிய உறுப்பினர் தங்களைப் பார்த்து, 'அன்புக்கும் பண்புக்கும் உரிய உதவி சபாநாயகர் அவர்களே' என்று ஆரம்பித்தார். அவர் அவ்வாறு அழைக்கக்கூடாது என்று தாங்கள் ரூலிங் கொடுத்தது, அப்படிச் சொன்னது பார்லிமென்டரி முறைக்கு முரணானது என்றா? சட்ட சபை விதிகளுக்கு மாறானது என்றா? அல்லது தங்கள் அடக்கமான பண்பின் காரணமாகவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** இந்த மன்ற உறுப்பினர்கள் யாரும் சபாநாயகரின் தனிப்பட்ட சலுகையைப் பெறும் வகையில், அவரது அன்பை ஈர்த்துவிடும் வகையில் அழைக்கக் கூடாது. ஆகவே, எவ்வித அடைமொழியும் இன்றி சபாநாயகரை விளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. ஆ. கு. சுப்பையா:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 760 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. நம்முடைய நாட்டிற்கு பெரும் பகுதியான வருமானங்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளிடமிருந்துதான் வந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது, வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதை ஈடுகட்ட வழிவகை காணும் இதே நேரத்தில், அரசாங்கம் நிலவரியை எடுத்துவிட உத்தேசித்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அவர்கள், 'பூரா நிலங்களுக்கும் நிலவரியை ரத்து செய்யப் போகிறோம், அவ்வாறு செய்கின்ற பொழுது சுமார் 7½ கோடியிலிருந்து 8 கோடி ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படும்' என்று கூறினார்கள். ஒருவேளை அவர்கள் அப்படிக் கூறியது தேர்தலுக்கோ, வேறு என்ன காரியத்திற்கோ எனக்குத் தெரியாது.

அன்றையதினம் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னால் எதிர்க்கட்சியினர் சார்பிலிருந்து, நிலவரியை குறைக்க கோரி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டதை அன்று ஆளும் கட்சியினர் தோற்கடித்தார்கள். அன்றையதினம் நாங்கள் சொல்லியிருப்பது என்னவென்றால், சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்பதுதான், அது பொருத்தமாக

வும் இருக்கும். இப்படியாக இன்றையதினம் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய அமைச்சரவை அந்த ஆலோசனையை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவ்வாறு அந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்கின்றபொழுது, வருமானம் குறைகிறது என்று சொன்னால், அதை ஈடு கட்டுவதற்கு வேறு ஏற்பாடுகளைச் செய்யலாம். ஆக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் எடுத்துவிட்டார்கள். தற்போது அதிகமாக தானியங்கள் விளைந்துகொண்டிருந்த நிலங்களில் எல்லாம் கரும்பு பயிரிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு அதிகமான வருவாய் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி கரும்பு போன்ற பணப்பயிர் வைக்கும் விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட வரியை வருமான வரியாக வசூல் பண்ண முடியுமா என்று ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாயம், உணவு உற்பத்தி சம்பந்தமாக தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசும் இம்மாதிரியான யோசனைகளை நிறைய வெளியிட்டது. உரங்களை வழங்குவது, பூச்சி மருந்துகள் வழங்குவது முதலியவைகளின் மூலமாக உணவு நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று அவர்களும் பல ஆலோசனைகளைக் கூறி வந்தார்கள். அவர்கள் கூறியதோடு இருந்து விட்டார்கள். அதை அமல் நடத்தும்போது தவறுகள் செய்து வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக, விவசாய வளர்ச்சிக்காகச் செலவழிக்கக் கூடிய அந்தத் தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படாமல் பெரியதொரு நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று உதாரணமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 லட்சம் ஏக்கரில் தானியம் விளைகிறது. அந்த மாவட்டத்தில் இன்று எடுத்துக்கொண்டால் மூன்று, நான்கு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு சரியான வடிகால் வசதி இல்லாமல், தண்ணீரில் மூழ்கி பயிர்கள் பாழாகிறது. விவசாயம் செய்தவர்கள் பெரிய அளவில் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த நஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கடந்த பத்தாண்டு காலமாக தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியதன் பலனாக தஞ்சை மாவட்ட வடிகால் திட்டத்திற்கு 12 கோடி ரூபாயைச் செலவழிக்கப் போவதாகப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தினார்கள். அதை ஆட்சியினர் செய்தார்களா, இல்லையா என்பதுபற்றி இன்றையதினம் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய அமைச்சரவை செய்வார்களானால், அது மக்களுக்கு கட்டாயம் திருப்திகரமாய் இருக்கும். உணவுக் கஷ்டத்தை ஓரளவுக்கு நாம் போக்க முடியும். ஏனென்றால் 3½ லட்சம் ஏக்கர் நிலத்தில் விளையும் தானியங்கள் எல்லாம் பாழாகி விடுகிறது. இந்த 'வடிகால் வசதித் திட்டத்தை இந்த அரசு செய்ய முனைந்தால்' தஞ்சை மாவட்டத்திலிருந்தே அந்த பற்றாக்குறை உணவைப் பெறலாம் என்று எதிர்பார்க்கலாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.



அடுத்து, மன்னார்குடி வடவார் பாசனம் என்று ஒரு பாசன ஆறு இருக்கிறது. இதனால் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் அடையும். இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி அரசாங்கத்திற்கு நாங்கள் சொல்லாத நாளே கிடையாது; அவர்களுக்குத் தூது போகாத வருஷம் இல்லை. அதன் பின்னர், இதற்கு அடையாள நிதி ஒதுக்கமாக கொஞ்சம் தொகையை ஒதுக்கியிருந்தார்கள். அந்தத் தொகையையும் செலவழிக்கப்படாமலேயே வைத்துவிட்டார்கள். இன்றைய நிலையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சுமார் பத்து கிராமங்களில் மேலும் பதினைந்தாயிரம், இருபதாயிரம் ஏக்கர் நிலங்களில் பாசன வசதி செய்ய முடியும். இந்த வடவாற்றில் மழைக் காலங்களில் அதிகமாக வரக்கூடிய தண்ணீர் சேதமாகிவிடுகிறது. இதைத் தடை செய்து, சுந்தரக்கோட்டை, எடையர் நத்தம், வள்ளூர், திருமக்கோட்டை, மரவகாடு கிராமங்களுக்குப் பாசனம் கொடுக்கமுடியும்.

இரண்டாவதாகத் தஞ்சை மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு மூலமாக பாசனக் கிணறுகள் தோண்ட ஐந்தாயிரம் ரூபாயில் இருந்து எழாயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கின்ற கடனை வாங்கி, விவசாயிகள் கிணறைத் தோண்டினாலும் மின்சார விஸ்தரிப்புச் செய்து கொடுப்பது கிடையாது. மின்சார விஸ்தரிப்புத் தடையாக இருப்பது இன்றையதினம் அந்த மாவட்டத்தில் தனியார் துறையிடம் மின்சார விஸ்தரிப்புக் கம்பெனிகள் இருப்பதுதான். இன்னமும் அவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு உரித்தான கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுப்பதில்தான் ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் தீவிரமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால், தனியார்களிடம் இருக்கும் மின்சாரக் கம்பெனிகளை உடனடியாக மேற்கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும். இதற்கு முன்னால் இருந்த அரசாங்கமும் அப்படிச் செய்வதாக ஒரு வாக்குறுதியை சட்டமன்றத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதை நிறைவேற்றவில்லை. இந்தப் புதிய அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, தஞ்சை மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொண்டு நல்லமுறையில் மின்சார விஸ்தரிப்புப் பணியைச் செய்துகொடுக்கவேண்டும்.

அடுத்து, விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்தச் சட்டம் நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம். அந்தச் சட்டம் எல்லாம் முடமாக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. மேலும் சென்ற இரண்டாண்டுகளாக ராஜ்யத்தில் ஏற்பட்டிருந்த வறட்சியின் காரணமாக, வெள்ளம், புயல் காரணமாக விவசாயிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அப்போது இருந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, குத்தகைப் பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படாதிருக்க ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். அந்தச் சமயத்தில் கூட நான் ஆலோசனை சொன்னேன். அந்த

[திரு. ஆ. கு. சுப்பையா] [1967 மார்ச் 21

ஆலோசனையை அரசாங்கம் ஏற்கவில்லை. இன்று நிலைமை என்னவென்று சொன்னால் விவசாயிகள் குத்தகையை அளக்கத் தயாராய் இருந்தாலும், நிலச்சுவான்தார்கள் அளந்துகொள்வது கிடையாது, அளந்து வாங்கிக்கொள்ள முடியாது என்கிறார்கள். இரண்டாண்டு இப்படி வாங்கிக்கொள்ளாது இருந்துவிட்டு, அப்புறம் குத்தகைப் பாக்கிக்காக முனிசிப் கோர்ட்டில் வழக்குப் போட்டு நிலத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள். பாக்கிக்காக மற்ற நிலங்களில் சாகுபடி செய்த தானியத்தை ஜப்தி செய்துவிடுகிறார்கள். இத்தகைய அபாயகரமான நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இதே நிலைமைதான் இருக்கும் என்று நினைக்கிறேன். நெல்லை வாங்கிக்கொள்ள மறுத்தால் ரெவின்யூ கோர்ட் என்று இருந்தது. அங்கே போய் நியாயம் சொல்லலாம். இப்போது அதையும் கலைத்துவிட்டார்கள். ஏதாவது விவகாரம் ஏற்பட்டால் ஆர்.டி.ஓ.-விடம் சொல்லலாம் என்றார்கள். அதற்கும் தக்க விதிமுறைகளை ஏற்படுத்தவில்லை. ஆர்.டி.ஓ.-வுக்கும் அதிகாரம் வழங்கவில்லை. இதுபற்றியும் முதல் அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்த்து இப்பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் தேடவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். குத்தகை பாக்கி என்றால், மடங்கள், தேவஸ்தான நிலங்கள், நிலக்காரர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் நிறைய பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் இன்றையதினம் கடன்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதுகூட உதவியாக இருக்கும். குத்தகைப் பாக்கியைத் தள்ளுபடி செய்து கொடுக்கமுடியுமா என்பதையும் யோசனை செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் தீவிர விவசாய திட்டத்தின்கீழ் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன் வசூலை ஒத்திவைப்பது நியாயமாக இருக்கும். அதுபற்றியும் ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பு மனை சம்பந்தமாகவும்—குடியிருப்பு பாதுகாப்பு மசோதா இருக்கிறதே தவிர, அந்தச்சட்டப் பிரகாரம் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குடியிருப்பு மனைகளில் இருந்து பலவிடங்களில் வெளியேற்றம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தச் சட்டம்கூட இவ்வாண்டோடு காலாவதியாகிறது. அதை நீட்டிக்கத்தான் வேண்டும். மேலும் ஏழை விவசாய ஹரிஜன மக்கள் இன்றையதினம் குடியிருந்து வருகிற நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கச் சட்டம் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்வது பெரிய உதவியாக இருக்கும். அத்தகைய ஏழை எளிய பாட்டாளி மக்கள் எல்லோரும் சேர்ந்துதான் உங்களை இன்றையதினம் பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். அந்த மக்கள் இன்றையதினம் குடியிருந்து வருகிற மனைக்கட்டுகளை அவர்களுக்கே நீங்கள் சொந்தமானதாகச் செய்வது மிகவும் நன்மையாக இருக்கும்.



1967 மார்ச் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

அடுத்து நெல்லை மாவட்டத்தில் சென்ற வருஷம் கோவில்பட்டித் தாலுக்காவில் இரண்டு பசலி நெல் தானியம் விளையாமல் போய் விட்டது. அதன் காரணமாக 1374-ஆம் பசலி நிலவரியை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோரினார்கள். ஒத்திவைக்கப்பட்டது. 1375-ஆம் பசலியிலும் கட்ட முடியாது போய்விட்டது. 1376-ல் இரண்டு பசலிகளுக்கும் சேர்த்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் அந்த தாலுக்கா விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த அரசாங்கம் அந்த வசூலை தயவு செய்து ஒத்தி வைக்கவேண்டும் அல்லது தள்ளுபடியாவது செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உச்ச வரம்புச் சட்டம். இதைப்பற்றி நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களே, 'இது உச்ச வரம்புச் சட்டம் இல்லை. மிச்ச வரம்புச் சட்டம்' என்றார்கள். இன்று இந்த சட்டத்தை மாற்றி, ஓட்டைகளை அடைத்து உபரியாக எடுக்கும் நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும்.

அடுத்து, பூச்சி மருந்து—தேவையானபோது பூச்சி மருந்து கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவரை பூச்சி மருந்து தேவைப்படுகிறபோது விவசாயிகள் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்குச் சென்றால் பூச்சி மருந்து இருக்காது. அது போலவே உரம் கேட்டால் இருக்காது. தேவையில்லாத சமயத்தில் கொடுப்பார்கள். உரவிலையும் அதிகமாக விற்றுக்கொண்டிருக்கிறது. இவற்றில் எல்லாம் கவனம் செலுத்தி—எப்படி முதல் அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கும், விவசாய உற்பத்திக்கும் முதலிடம் கொடுத்திருக்கிறார்களோ—அதுபோல அவை சம்பந்தப்பட்ட காரியங்களிலும் அதிகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவை சம்பந்தப்பட்ட இலாக்கா நல்ல முறையில் செயல்பட வகை செய்யவேண்டும். இந்த ஆட்சியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான பாதுகாப்பும், உத்தரவாதமும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பெ. பெரியசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே உணவுக்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. தமிழகத்தின் நடுப்பகுதியில் உள்ள எனது மாவட்டமாகிய சேலம் மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் உள்ள உழவர்கள் மரவள்ளிக் கிழங்கையும், குச்சிவள்ளிக் கிழங்கையும் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். இந்தக் கிழங்கு உணவு வகையில் ஒன்றாகும். சேலம் மாவட்டத்தில் 500-க்கு மேற்பட்ட ஜவ்வரிசி மில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மில்லிலும் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே,

இந்தத் தொழிலுக்கும், மானாவாரிக் கிழங்கு பயிருக்கும் பாதுகாப்பு அளித்து உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஸ்டார்ச் மாவு நம் நாட்டில் நெசவாளிகளுக்குப் பயன்படுகிறது. இந்த மாவுக்குப் பதிலாக வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் மக்காச் சோளம் போன்ற உணவுதானியத்தை ஆலைகளில் ஆலையாளர்கள் வடமாநிலத்திலே பயன்படுத்துகிருர்கள். அதைத் தடுத்து அதை உணவிற்குப் பயன்படுத்தவும், இந்த ஸ்டார்ச் மாவை நெசவாளிகளுக்குப் பயன்படுத்தவும் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளவேண்டும். ராசிபுரம் குடி தண்ணீர் திட்டம் நிறைவேறி ஆறு மாதகாலம் ஆகிறது. அதற்காக 21 லட்சம் ரூபாய் வரை செலவுசெய்து இரண்டு வருஷங்கள் ஆகியும், இன்னும் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை. ஆகவே அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது மாவட்டமாகிய சேலம் மாவட்டத்திலும், எனது தொகுதியாகிய ராசிபுரம் தொகுதியிலும் கைத்தறித் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழ்கிருர்கள். தற்போது அந்தத் தொழில் மிகவும் மோசமான நிலையிலே உள்ளது. காரணம் என்னவென்ருல் மில்காரர்களின் போட்டியும் நூலின் விலை உயர்ந்து விட்டதும்தான். உதாரணமாக கடந்த நவம்பர் மாதத்திற்கும் இப்போதைக்கும் பார்த்தால் 10 ராத்தல் கட்டு ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை ஏறியிருக்கிறது. அதற்கு 25 சதவிகிதம் உயர்ந்திருப்பதாலே அது மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நூல் விலையைக் குறைக்கவும், வேஷ்டி, சேலை போன்ற ரகங்களைக் கைத்தறிக்கே ஒதுக்குமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன். ராசிபுரம் நகரசபை உயர்நிலைப் பள்ளியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று கோருகிறேன். கொல்லி மலை அடிவாரத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நீண்ட நெடுங்காலமாக ஆலோசனையிலேயே இருந்து வருகின்றன. அதை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* **திரு. ஆர். நாகசுந்தரம்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னுலே பேசிய திரு. அரங்கண்ணல் அவர்கள், எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் நம்மை இதுவரை பாராட்டவில்லையே என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆளுங்கட்சியாகிய நாம் மருமகள். எதிர்க்கட்சி மாமியார் போன்றவர்கள். இருபது ஆண்டுகளாகக் குடும்பத்தை நடத்திவிட்டு இப்பொழுது சாவியை எங்களிடம் கொடுத்திருக்கிருர்கள். அவர்களாகச் சாவியை மனமுவந்து கொடுக்கவில்லை. கிறுடு தட்டி, கண்தெரியாமல், சாமான்களைக் கண்டபடி போட்டுவிட்டதைப் பார்த்துத்தான் பொதுமக்கள் அந்தச் சாவியைப் பிடுங்கி மருமகளிடம் கொடுத்து உள்ளார்கள். என்னதான் நல்ல முறையில் நடந்துகொண்டாலும், மாமியார் வாயிலிருந்து நல்ல மருமகள் என்று ஒரு வார்த்தைகூட வராது. அதே சமயம் வெளியேபோய் என்னுடைய மருமகளைப் போன்று உண்டா என்றும் சொல்வார்கள். ஆகவே, எதிர்க்கட்சியினர் நம்மைப்பற்றி ஒரு நல்ல வார்த்தைக்கூடச் சொல்லமாட்டார்கள்.





நம்மைச் சரியான வழியிலே கொண்டுசெல்லும் நல்ல மாமியாராக இருக்கவேண்டும். ஒரு சில கொடுமைக்கார மாமியார்களைப்போல் இருக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஒன்றும் காணப்படவில்லை என்று எதிர்க்கட்சியிலே உள்ள திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினுர்கள். இந்த பட்ஜெட் சென்ற அக்டோபர்-டிசம்பரிலே தயார் செய்யப்பட்டது. அடுத்து ஜூன் மாத பட்ஜெட்டிலே இந்த மந்திரி சபையின் கொள்கைகள் இருக்கும், அதுதான் ஓரளவுக்கு இந்த மந்திரி சபையைக் கட்டுப்படுத்தும் என்பதையும் நான் எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த பட்ஜெட்டைத் தயாரித்த அதிகாரிகள், சிப்பந்திகள் எங்களது கொள்கைகளைப் புரிந்துகொண்டு, எங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப பட்ஜெட்டைத் தயார் செய்வார்கள். ஆனுல் இதுவரையில் அதிகாரிகள், சர்க்கார் ஊழியர்கள், போலீசார், ஆசிரியர்கள், இதர சிப்பந்திகள் எல்லாம் கதர்ச் சட்டை போட்டவர்களை, மண்டலங்களை, எம்.எல்.ஏ.க்களை எல்லாம் கண்டு நடுநடுங்கிக்கொண்டிருந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே காமராஜ் வளைவு ஒன்றைக் கட்டினுர்கள். நான் அதை எதிர்த்து வழக்கு நடத்தினேன். அதற்குச் சாட்சியாக மாவட்ட போலீஸ் அதிகாரி ஒருவரைப் போட்டேன். அவர் என்னிடம் வந்து, என்ன காரியம் செய்தீர்கள், நான் உண்மையாகச் சாட்சி சொன்னுல் என்னை "திப்ருகாருக்கு" மாற்றி விடுவார்களே இந்த ஆட்சியாளர்கள் என்று சொன்னுர். மாவட்ட அதிகாரிகளுக்கே இந்த நிலையென்ருல், இன்னும் சாதாரண ஊழியர்களுக்கு என்ன கஷ்டங்கள் இருந்திருக்கும், அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். திருச்சியிலே காங்கிரஸ் சேர்மன் தேர்தலில் முனிசிபல் ஊழியர்கள், சிப்பந்திகள் கதர் சட்டையைப் போட்டுக்கொண்டு தோளோடு தோள் நின்று வேலை செய்தார்கள். அவர்களுக்கு எதிராக இருந்தவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி பல அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. நல்லவேளையாக ஆட்சி மாறிவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ன தடை செய்யப்பட்ட கட்சியா? அவர்கள் இவ்வளவு வன்கொலைகளைச் செய்த நிலையிலே இருந்திருக்கிருர்கள். சிலபல மாதங்களுக்கு முன்னுலே போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தும், காக்கை குருவிகளைச் சுடுவதைப்போல் இந்த நாட்டு மக்களைச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். வரம்புமீறி மாணவர்களுடைய தாழிடப்பட்ட ஹாஸ்டல்களிலே நுழைந்து, போலீஸார் தடியடி, கண்ணீர்ப்புகை இவையெல்லாம் பிரயோகித்திருக்கிருர்கள். இந்த நாட்டில் தடியடிபடாத நபரே இல்லை. பார் அசோஷியேஷனில் ஹிந்தியை எதிர்த்துத் தீர்மானம் போட்டதினுலே பல வக்கீல்கள் தடியடிக்கு ஆளானுர்கள். சென்னையிலே நான் காமராஜ் வளைவு வழக்கைத் தாக்கல் செய்ய வந்தேன். பல வக்கீல்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடம், ஐயா, காமராஜரை எதிர்த்து வழக்கா, முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இன்னொரு

*1967 மார்ச் 21]*

**திரு. ஆர். நாகசுந்தரம்:** உர மோசடி செய்தார் என்பதற்காக அவரைப் பிடித்துக் கொடுத்தார் என்பதைத் தவிர அவர் செய்த தவறு என்ன? ஏதாவது லஞ்சம் வாங்கினரா? மதுரையில் போக்கு வரத்தைச் சரி செய்ய காரை நிறுத்திக் கடமையைச் செய்த போலீஸ்காரரை மாற்றி விட்டார்கள். இன்று அத்தகைய நிலை இல்லை. காலமெல்லாம் காத்திருந்து வாக்காளர்கள் அமைதியான புரட்சியை நடத்தி ஆட்சியை மாற்றியிருக்கிறார்கள். வருங் காலத்திலே எங்களுடைய கொள்கைகளுக்கேற்ப அதிகாரிகள் நல்ல முறையிலே நடந்து கொள்ளுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் இடைக்கால பட்ஜெட்டின் மீது பேச வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மன்மதன் எரிந்தானா, இல்லையா என்பதைப்பற்றி மாலை 6 மணி முதல் 8 மணி வரை வைத்துக்கொள்ளலாம், இங்கே தேவையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** இன்று நாட்டிலே பல இடங்களிலே பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் உர மூட்டைகள், நெல் மூட்டைகள் எல்லாம் வெளியே கொண்டுவரப்படுகின்றன. அதைப் பார்க்கும் போது உள்ளபடியே வருங்காலத்திலே மூன்று படி அரிசி போடு வதற்கான வழி எற்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனால் அதிகாரிகள் நம்மைப் புரிந்து கொள்ளாமல், இன்று திருச்சியில் புத்தூர் அக்கிரகாரத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று சொந்த உபயோகத்திற்கு வைத்திருந்த 5, 10, மூட்டைகளைக் கைப்பற்று வதாகச் செய்தி வருகிறது. அன்புகூர்ந்து ஆட்சியாளர் அது பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உரையை இந்த அளவிலே முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. சகாதேவ கண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, வணக்கம். 1967-68 பட்ஜெட்டிலே புதிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. பழைய கணக்குகளைப் புதிய எடுகளில் எழுதி யிருக்கிறார்கள். 'நிலவரியை ரத்து செய்வதை நாங்கள்தான் தீர்மானமாகக் கொண்டுவந்தோம்; அப்போது 'காங்கிரஸ் அங்கத் தினர்கள் எதிர்ப்புக் காட்டினார்கள்' என்று தி.மு.க. அங்கத் தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையே இப்போது நான் கேட்கிறேன். வருகிற ஜூலை 1967-ல் நிலவரியை ரத்து செய்யப் போவதாக எற்கனவே உள்ள அரசாங்கம் அறிவித்திருந்தது. இப்போது ஆளும் கட்சியிலுள்ள வர்கள் திட்டவட்டமாக 1967 ஜூலையில் நில வரி ரத்து செய்யப் படும் என்று உரையில் அறிவிக்கவில்லை. இதனால் ஏழை விவசாய மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

எப்போதும் கல்வி ஆண்டிலிருந்து பி.யு.சி. வகுப்புக்குக் கட்டணத்தை ரத்து செய்யப்போவதாக முன்பு அறிவிக்கப்

[திரு. கே. சகாதேவ கண்டர்] [1967 மார்ச் 21

பட்டது. இப்போது பட்ஜெட்டிலோ அல்லது கவர்னர் உரையிலோ அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன்னாலே வாய்ச் சொல் வீரர்கள் பல திட்டங்களை மக்கள் முன்னாலே சமர்ப்பித்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகும் மீண்டும் மீண்டும் சட்டசபையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அங்கத்தினர், ஜோதிடத்திலே நம்பிக்கை இல்லாதவர். ஜோதிடக்காரர் கூறிய எட்டு அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார். அதிலே எதையாவது ஒன்றை நிறைவேற்றுவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் தாங்கள் சொன்ன திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதாகவும், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்பதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் இந்த ஆண்டிலேயே ஏழை மக்கள் பசி தீரும் வகையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று கேட்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டிலே மெயின் வாய்க்கால் 16-3-1967 அன்று உடைந்து விட்டதாகத் தொகுதி மக்களிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது என்பதை விவசாய அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், மராமத்து அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். அந்த மெயின் வாய்க்கால் 1½ மைல் தூரம் வந்த பிறகு நிலங்களுக்குத் தண்ணீர் போக கிளைகளாகப் பிரியும் இடத்தில் கால்வாய் உடைந்து விட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்த அணையிலிருந்து 20,000 எக்கர்—10,000 ஏக்கர் நஞ்சையும், 10,000 எக்கர் புஞ்சையும் பயிராகி வருகிறது. இந்த நிலையில் தண்ணீர் இல்லையென்றால் அத்தனையும் சாவியாகப் போய்விடும். அந்தப் பயிர்கள் பாழாகாமல் காப்பாற்றத் தீவிர நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விவசாய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் அணையிலிருந்து 22,000 எக்கர் பாசன வசதி பெற முடியும். ஆனால் தற்போது 20,000 எக்கர்தான் பாசன வசதி பெறுகிறது. அதற்குக் காரணம் போதிய அளவுத் தண்ணீரை விடமுடியாமல், நடு நடுவே சிறு சிறு பாலங்கள் இருப்பதுதான். ஆகவே, அந்தப் பாலங்களை எல்லாம் உடைத்து விட்டு அதிக உயரத்தில் பாலங்களைக் கட்டி போதிய அளவுத் தண்ணீரை விட்டு அந்தப் பகுதியை உணவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. முனு. ஆதி:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். கடந்த நூற்றாண்டுக் காலமாக வரவு செலவுத் திட்டத்திலே இல்லாத ஒரு புதிய மறுமலர்ச்சி இந்த வரவு



1967 மார்ச் 21] [திரு. முனு. ஆதி]

செலவுத் திட்டத்திலே இருக்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், குறிப்பாக, நாட்டிலே உள்ள பெரும் பஞ்சம், விலைவாசி உயர்வு ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் உணவுப் பிரச்சினைக்கு முதலிடம் தந்துள்ள இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டு மக்கள் வரவேற்கத்தக்க அளவில் அமைந்திருக்கிறது. விவசாயிகள் உரம் இல்லாமலும், விவசாயத்திற்கு வேண்டிய மற்றப் பொருள்கள் இல்லாமலும் கடந்த பல ஆண்டுகளாக வேதனைக்குள்ளாகிக்கொண்டு வந்தார்கள். அதற்கெல்லாம் இனிமேல் விமோசனம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். இந்த நாட்டில் சாதாரணமாக சட்ட திட்டங்கள் வகுக்கப்படுவதைப் பற்றி மக்கள் அக்கறை கொள்வதில்லை. நடைமுறையில் அனுகூலம் கிடைக்கிறதா என்றுதான் பார்க்கிறார்கள் என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் பல பேர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

. . . .

ஊராட்சி மன்றங்களின் தலைவர்களும், அதை வைத்திருக்கிற ஒன்றியத் தலைவர்களும், வாக்குக் கேட்கச் செல்லும்போது சட்ட மன்ற உறுப்பினர்களின் வேலைகள் என்ன என்று தெரியாமல் எங்கள் ஊரில் விளக்குகள் இல்லை, நல்ல பாதைகள் இல்லை, தண்ணீர் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ஒன்றிப்பு மன்றங்களின் குறைகளை அரசு கவனித்து அக்குறைகளைப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வசதிகளைப் பொறுத்து அந்தந்த கிராமங்களின் பொறுப்புகளை அரசாங்கமே ஏற்று, வரவு செலவு மட்டுமல்ல, நிதி அனுமதிக்குமானால், அந்த மின்சாரச் செலவினங்களை அரசாங்கமே ஏற்று நடத்தலாம். இப்போது மாச்சிங் கிரான்ட் தருகிறார்கள். அந்த மாச்சிங் கிரான்டை நிறுத்திவிட்டு எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். அரசாங்கம் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். ஒன்றிப்பு யூனியன்களுக்குத் தரக்கூடிய சர்க்கார் மான்யம், கடன் இவை அதிகமாகப் போதவில்லை. ஆங்காங்கு லிங்க் ரோட்ஸ் போடுவதற்குக் கூட பணவசதி போதவில்லை. ஒரு கிராமத்திற்கு மற்ற கிராமங்களிலிருந்து கட்டை வண்டி போகக்கூட நல்ல போதிய பாதை வசதியில்லை. ஆக, 373 பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிய, சேர்மன் மாநாடு ஒன்று கூட்டி, பாதைகள் அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்கினால் நல்லது. விவசாயிகள் ஒன்று தவறுதலாக நினைக்கிறார்கள். பூச்சி வந்துவிட்டது என்றால் அதைப் போக்க மருந்து அடியுங்கள் என்றால், மருந்து அடித்தால் போகாது, கள்ளுக்கடை வைத்தால்தான் போகும் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது, மரங்களிலுள்ள கள்ளை இறக்காவிட்டால் அங்கிருந்து பூச்சி வந்து பாவி விடுமாம். அந்த நம்பிக்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மதுவிலக்குப்பற்றி எங்கள் தலைவர் சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆக அவர்களின் தவறான அபிப்பிராயத்தை, கள்ளு இறக்காவிட்டால் பூச்சிகள்

[திரு. முனு. ஆதி] [1967 மார்ச் 21

பயிரில் வந்து இறங்கி நாசப்படுத்துகிறது என்ற தவருன எண்ணத் தைப், போக்குவதற்கு ஒரு பிரசாரக் குழு இருந்தால் அல்லது அவ் வெண்ணத்தைப் போக்குவதற்கான வகையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினுல் நல்லது. ஆகவே, அது குறித்து அரசு தன் கவனத் தைச் செலுத்துவது நலமாக இருக்கும். இப்போது இருக்கிற வேகத்தைப் பார்க்கிறபோது, என்னுடைய மாவட்டத்தில் பதுக்கல் மூலம் ஆயிரக்கணக்கான மூட்டைகள் கிடைத்து விட்டன என்பதைப் பார்க்கிறபோது, நாட்டில் பல லட்சக்கணக்கான மூட்டைகள் பதுக்கல் இருக்கும் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்காங் குள்ள அமைப்புகளின் மூலமாக ஆட்சிக்கு வேண்டிய ஒத்துழைப்புத் தருவதற்கு வேண்டிய பணியில் இறங்கியிருக்கிறது. அதற்கும் அரசு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று தங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆங்காங்கு பட்டியல் தயாரித்து வருகிறோம். 300, 500, 1,000, 2,000 என்று பதுக்கி வைத்துள்ள பட்டியலை நாங்கள் சேகரித்து வரு கிறோம். முன்னமேயே அதற்கான நிலைமை உருவாக்கியதால் பதுக்கல் வைத்திருப்பவர்கள் இப்போது அதை வெளியே எடுத் தாலும் ஆபத்து என்ற நிலையில் இருக்கிறார்கள். எவ்வளவு வைத் திருக்கிறாய், ஏன் முன்னமேயே கொடுக்கவில்லை என்ற கேள்வி களுக்குப் பயந்து வெளியே கொண்டுவர முடியாமல் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றக் கூட்டம் முடிந்த பிறகு எல்லாவிடங்களிலும் கழகத் தோழர்கள் முனைந்து எங்கெங்கு பதுக்கல் இருக்கிறது என்று பார்த்து அவற்றை எடுக்கத் தயார். இதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது நாட்டில் பற்றாக்குறை இல்லை. பதுக்கல் பேர்வழிகள் காரணமாகத்தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருக் கிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கும், உணவு பிரச்னைக்கும் முதல் இடம் தந்திருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் முறையாக வகுத்துத் தந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை படித்தவர்களும், பொருளாதார நிபுணர்களும் பாராட்டக் கூடிய அளவிற்கு இருப்பதோடு, இருக்கிற சின்னஞ்சிறு குறைகளைப் படிப்படியாக நீக்க இந்த அரசு முனையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பதுக்கல்காரர்களை படிப்படியாக நாங்கள் பிடித்துக் கொடுக்கிறோம்; அதற்கு அரசு ஒத்துழைப்புத் தர வேண்டும். ஆக, இந்த வரவு செலவுத் திட்டம் வரவேற்கத் தக்க வகையில் இருப்பதைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பெல்லி கவுடர்: அவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தின் மக்கள் சார்பிலும், இம்மன்றத்தின் புதிய உறுப் பினன் என்ற முறையிலும், முதலில் என் நன்றி கலந்த வணக்கத் தைத் தெரிவித்து, மதிப்பிற்குரிய நமது அரசின் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து, எங்கள் நீலகிரி மாவட்டத்தின் ஒன்றிரண்டு குறைகளை இம்மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டம் நெல் விளையாத பகுதி



1967 மார்ச் 21] [திரு. பெல்லி கவுடர்]

யாகையால் கோவை மாவட்டத்திற்கும், நீலகிரிக்கும் இடையில் அரிசி கொண்டு போகத் தற்போதுள்ள தடையை நமது அரசாங்கம் விரைவில் நீக்கி, அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களையும், அரசாங்க ஊழியர்களையும், தோட்டத் தொழிலாளர்களையும், ஏழை எளியவர்களையும் ஆறுதல் அடையச் செய்யவேண்டுமென்று பணி வன்போடு வேண்டிக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அங்குள்ள மக்கள் தாங்கள் போட்டு வளர்த்த மரங்களைத் தங்கள் சொந்த உப யோகத்திற்காக ஒரு ஏக்கர் அல்லது அரை ஏக்கர் மரங்களை வெட்டி யெடுக்க தற்போதுள்ள தடையிலிருந்து விலக்களிக்க வேண்டு மென்று அரசினரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக, கோத்தகிரி குடிநீர் பிரச்னையைப்பற்றிப் பல ஆண்டு களாக அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் அங்குள்ள குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட தாகத் தெரியவில்லை. ஆகவே, மேற்கண்ட நீர், நெருப்பு, அரிசி ஆகிய குறைகளை நமது அரசாங்கம் தீர்த்து வைப்பதோடு, புதிய ஆட்சியை மலரச் செய்வதற்குத் துணை புரிந்த பொது மக்கள் நீலகிரி மலை உச்சியிலிருந்து சென்னை கோட்டையைப் பார்த்து நல்ல செய்தி வரும் என்று நம்பியிருக்கும் மக்களுக்கு நல்வாழ் வளிக்க வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு புதிய அரசை ஏற்றுக் கொண்ட அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நல் வாழ்த்தினை வழங்கி கடந்த பொதுத் தேர்தலில் ஒத்துழைப்பைத் தந்த தமிழக மக்களுக்கும், மாணவ மணிகளுக்கும், பத்திரிகை யாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. ஜெயராமன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிற நேரத்தில் நான் அடைகிற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்று சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களிடம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி அந்தக் கருத்துக்களை மக்கள் உணர்ந்து இன்றையதினம் இந்த ஆட்சி பீடத்தில் இந்த அமைச்சரவையை அமர்த்தியிருக்கிற மக்களுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. இந்த நாட்டு மக்கள் இன்னென்றையும் உலகத்திற்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதுபற்றிப் பெருமைப்படுகிறேன். என்ன செய்திருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலே ஒரு பணநாயகம் ஆண்டு கொண்டிருந்தது, பணத்தைக்கொண்டு வோட்டு வாங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலையை மாற்றி இந்த நாட்டில் நல்ல கருத்துக்களுக்குத்தான் இடம் உண்டு, நல்லவர்களுக்குத்தான் இடம் உண்டு, பணத்திற்கு இந்த நாட்டில் இடமில்லை என்று சொல்லி வாக்காளப் பெரு மக்கள் ஜனநாயகத்திற்கு வாக்களித்து நல்லதோர் ஆட்சியை அமைக்க வேண்டுமென்று நினைத்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம்

இருபது ஆண்டுகளாக ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட்டில் எதுவும் இல்லை என்று குறைபடுகிற அளவிற்குக் கூறுகிறார்கள். உள்ளபடியே கேட்கிறேன். இந்த இருபது ஆண்டுக் காலத்தில் நாட்டிலுள்ள ஏழை மக்கள்பற்றி, நாட்டிலுள்ள கொடுமைகள்பற்றி, நாட்டிலுள்ள அல்லல்கள்பற்றி எடுத்துக் கூறியவர்களைக் காங்கிரஸ் வரிசையில் பார்க்கவில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு இன்றையதினம் நாட்டு மக்கள் மீது கருணை பிறந்திருக்கிறது என்று சொன்னால் அதைப் பாராட்டுகிறேன். உள்ள நிலைமைகளை உணர்ந்து மக்களுடைய கொடுமைகளைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சியோடு இன்றைக்கு அமைந்திருக்கிற அமைச்சரவையை எண்ணிப் பார்க்கிற நிலையில் மகாத்மா காந்தி அவர்கள் நினைத்த எண்ணங்களை, அவருடைய கனவுகளை நினைவாக்குகிற அளவிற்கு மகாத்மா காந்தி அவர்களின் வாரிசாக இன்றைக்குத் தமிழகச் சட்டமன்றத்தில் அமைச்சரவை அமர்ந்திருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் சென்ற வழியைக் கடைப்பிடிக்கிற அளவிற்கு எங்கள் தலைவர், எங்கள் இதயங்களில் குடியேறியுள்ளவர் எங்களுக்குக் காட்டுகிற வழியைப் பின்பற்றிச் செல்வோம். எங்கள் அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவைக்குக் காங்கிரஸ்காரர்கள் ஆதரவு தந்து தமிழக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கிற அளவிற்கு, அமைச்சரவைக்கு எக்கேடும் விளைவிக்காத அளவிற்குப் பண்போடும், பாசத்தோடும் ஆதரவு தந்து ஒத்துழைத்தால் நாட்டிலுள்ள மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யலாம். அதை விட்டுவிட்டு நாம் குதர்க்கங்களைப் பேசிக்கொண்டிருந்தால் வீணாகக் காலத்தைக் கழித்துக்கொண்டு போவோம். நாங்கள் காங்கிரஸ்காரர்களை எங்கள் எதிரிகளாகக் கருதவில்லை. நான் என்னுடைய தொகுதியில் கூட அந்த முறையில்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர்களை நண்பர்களாகவே கருதி, அவர்களும் மக்களுக்கு நல்லவைகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த அளவோடு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த நிதி நிலை அறிக்கையிலே பேச எழும் சந்தர்ப்பத்திலே ஒரு புது அனுபவம், புது உணர்ச்சியும் கூட, என்னிடத்திலே தோன்றுகிறது. அது ஏன் என்று சட்ட மன்றத்திலே இருக்கிறவர்கள் அனைவருக்கும் தெரியும், பாக்கி இருக்கக் கூடிய பொது மக்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே இத்தகைய நிலைமையைப் பொது மக்கள் அளித்த வாய்ப்பினுக்கு எங்கள் கட்சியின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

சட்ட மன்றத்தில் இந்தப் பக்கம் இருக்கும் வாயிலாக, என் பக்கத்தில் இருக்கும்படியான திருவள்ளுவர் படத்தின் கீழே இருக்கும்படியான வாசகத்தை நான் படித்துப் பார்த்தேன். அந்த





வாசகப்படி, இந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி, அவர்களும் நிச்சயமாக அதைக் கடைப்பிடிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

“சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்”

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சொல்லிலே, ஏதாவது பேசுவதாக இருந்தால், அது பயனுடைய சொல்லாக இருக்கவேண்டும். “சொல்லற்க பயனிலாச் சொல்”—பயனில்லாத சொல்லைச் சொல்லக் கூடாது. சட்ட சபையிலே மட்டுமல்லாமல், வெளியிலே கூட, மக்களிடத்திலே இருக்கும் நிலையிலும் கூட அப்படிப்பட்ட பயனுள்ள சொல்லைத்தான் சொல்லவேண்டும். மக்களிடத்திலே எவ்வளவோ சொல்லியிருக்கலாம். தேர்தல் என்றால் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருப்போம், விஞ்ஞாபனத்தைக் கொடுத்திருப்போம். எவ்வளவோ சொல்லியிருந்தாலும், எது சாத்தியம், எது சாத்தியம் இல்லை என்று இப்போதாவது முறைப்படி உணர்ந்தால் நல்லது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இடைக்கால பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கும், முதலமைச்சரும் நிதி அமைச்சருமான அண்ணா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. முதல் பாராட்டு என்ன என்றால், எடுத்துக்காட்டாக சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். சம்பளத்தைக் குறைத்துக் கொண்ட நேரத்தில் இருக்கிற செலவினங்களையும் குறைத்துக் கொண்டால் இன்னும் பாராட்டுதலுக்கு ஆளாவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதுமட்டுமல்ல, இந்த இண்டரிம் பட்ஜெட் ஏற்கனவே இருந்து வந்த சர்க்காரின் தொடர்பே தவிர, அறுந்து போன சங்கிலி அல்ல. இந்தப் பெருமைகளிலெல்லாம் அந்தச் சர்க்காருக்குப் பங்கு உண்டு என்பதைச் சிலர் ஏற்றுக்கொள்ளலாம் சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம், குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் இது வரையில் நடந்த ஆட்சி நவருண ஆட்சி, அலங்கோல ஆட்சி, விஷவிருட்ச ஆட்சி என்று கூறினார்கள். அந்த அலங்கோல ஆட்சியின், விஷவிருட்ச ஆட்சியின் அனுபவங்களை, ஏற்பட்ட பெரிய பொருளாதார முன்னேற்றங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னாலே, தமிழகத்திலே வரும்படி என்ன என்றால், 62 கோடி ரூபாய். இப்போது அவர்கள் கையிலே 204 கோடி ரூபாய்களை ஒப்படைத்திருக்கிறோம். இதுதான் அலங்கோல ஆட்சியின் பயன், அராஜக ஆட்சியின் பயன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பணம் எது? மக்கள் கொடுத்ததுதானே?) ஆம். மக்கள் கொடுத்ததுதான். நாங்கள் சொன்ன திட்டங்களில் குறை இருக்கலாம். நாங்கள் செய்ததெல்லாம் சரியானது என்று சொல்லத் தயாராக இல்லை. இப்போது இருக்கும்படியான நிலையில் 62 கோடி ரூபாயாக இருந்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 21

தை மாற்றி இப்போது 204 கோடி ரூபாயாகக் கொடுத்திருக்கிறோம் என்றால் இதற்கு ஏற்கனவே இருந்த சர்க்கார் பொறுப்பு. அது மாத்திரமல்லாமல் சிறப்பான யந்திரத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். பாரத தேசத்திலேயே சென்னை மாநிலத்தில் உள்ள நிர்வாக யந்திரம் சிறப்பான யந்திரம், இங்கே உள்ள சர்க்கார் ஊழியர்கள் சிறந்தவர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் எதிர்க் கட்சியிலிருந்து சொல்லுகிறேன். ஆளும் கட்சியிலிருந்து அத்தாட்சி கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. சிக்கல்களை நீக்கிப் பயனுள்ள வகையில் முடிந்த வரையில் சிறந்து நடந்திருக்கிறது சென்னை சர்க்கார்தான் என்றால், இதை நாம் சொல்லவில்லை, மத்திய அரசாங்கத்தினர் சொல்லியிருக்கிறார்கள். உலகத்தில் இருக்கிற பேரறிஞர்களெல்லாம் சொல்லும்படியான அத்தாட்சியைச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு இண்டரிம் பட்ஜெட்டில் ஒன்றும் காணவில்லை என்று சொன்னபோது, பொறுத்திருங்கள் என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். நிச்சயமாகப் பொறுத்துக்கொண்டிருப்போம், காத்துக்கொண்டிருப்போம். எங்கள் கட்சியின் நோக்கம் என்னவென்றால், மக்களுக்குப் பணி புரிவதுதான். எங்கள் கட்சி ஆளும் கட்சியாக இருக்கவேண்டும் என்பது கிடையாது. எதிர்க் கட்சியாக இருக்கிற எங்களுக்கு ஏற்கனவே எதிர் நீச்சல் அடித்துப் பழக்கம் உள்ளது. சூரியன் மறையாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அகிம்சை, சத்தியம் ஆகிய ஆயுதங்களால் வெளியேற்றினோம். அத்தகைய சக்தி பெற்றவர்கள். எதிர்க் கட்சியின் இலக்கணத்தை தயவு செய்து எங்களிடம் கூற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதும்கூட மனம் இளைக்கவில்லை, உயர்வோடுதான் இருக்கிறோம். எங்களுடைய முழு ஆதரவையும் சர்க்காருக்கு அளிக்கிறோம். கனம் உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள், "20 வருஷங்களாக விஷ விருட்சம் பரவி விட்டது, அதைக் களைந்தெறிய வேண்டும்" என்று. நான் வருத்தப்படுகிறேன். விஷ விருட்சம் என்று சொன்னாலும் இந்த விருட்சம் உயர்வான கனியைக் கொடுக்குமே தவிர வேறு கொடுக்காது. விஷ விருட்சமானால், அந்த விஷ விருட்சத்தின் கனிகளை, அவற்றின் அன்பை, ஆதரவை, முதலமைச்சர் அவர்கள் நாடுகிறார்கள் என்றால், அவர்களின் பெருந்தன்மைக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நம்முடைய குறிக்கோள் என்ன? பொது மக்களுடைய வாழ்வு நல்வாழ்வாக இருக்கவேண்டும். அதற்கு எந்தக் கட்சியில் இருந்தாலும் ஆட்சேபனை இல்லை. சட்டசபையில் இருந்தாலும் பரவாயில்லை, சட்டசபையில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மகாத்மா காந்தியடிகள் எவ்வளவோ நிர்மாணத் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அந்தக் காரியங்களைச் செய்து மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற முடியும். எங்கள் குறிக்கோள் ஆட்சியில் இருக்கவேண்டும் என்பதல்ல. மக்களுடைய அன்பும் ஆதரவும் முக்கியமே தவிர, ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதல்ல. மகாத்மா காந்தியடிகள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு அதைப் பெற்றது மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காகத்தான். அந்த நோக்கத்திற்கு அரும்பாடுபட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்னும் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சில வாக்குறுதிகள் முன்னால் சட்ட சபையில் கொடுக்கப்பட்டன. இப்போது ஆளும் கட்சியாக உள்ளது இந்தப் பக்கத்தில் இருந்தது அப்போது. அவர்கள் சொன்னார்கள், நாங்கள்தான் கொண்டு வந்தோம், காங்கிரஸ்காரர்கள் ஏற்கவில்லை என்று சொன்னார்கள். அக்டோபர் மாதம் என்று நினைக்கிறேன். அந்தச் சமயத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்ட கொள்கை அடிப்படையில் நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்ற முறையில் செய்த அறிக்கையைப் படிக்க வேண்டும். நாங்கள்தான் செய்தோம் என்ற நிலையில் ஒரு தனியார் தீர்மானம் கொண்டு வந்தார்கள். சட்ட சபையில் தனியார் தீர்மானம் எந்த நிலையில் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்களும் தீர்மானங்கள் கொண்டுவரப் போகிறோம். அதில் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று பார்க்கலாம், அப்படி ஏற்றுக் கொள்வார்களானால் அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது பொது மக்கள் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள் என்றால், நடந்த தேர்தலில் அரிசியை வைத்து அரசியல் நடந்திருக்கிறது. திட்டவட்டமாகச் சொல்லுவேன் அரிசி அரசியலில் கலந்துவிட்டது. என்னென்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன என்பதில், நீங்கள் கொடுத்தீர்களா, நாங்கள் கொடுத்தோமா என்பது அல்ல. ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் முன் வைத்தீர்கள், நாங்களும் வைத்தோம் எங்கள் விஞ்ஞாபனத்தை. உங்கள் விஞ்ஞாபனத்தை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதில் நாங்கள் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மிக்க ஆதரவு கொடுத்து, மக்கள் சுபீட்சத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றால், நாங்கள் நல்ல எதிர்க் கட்சியாக இருந்துகொண்டு, 'ஹெல்த்தி கிரிடிஸிஸம், கன்ஸ்ட்ரக்டிவ் ப்ரொகிராம்' என்று சொல்வார்களே அந்த நிலைமையில் நாங்கள் பணியாற்ற முன்வந்திருக்கிறோம். இடைக்கால பட்ஜெட் பொது மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்ற நிலைதான் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் முன்னாலே சொல்லியிருக்கிறார்கள். 'நாங்கள் கடந்த காலத்தில் சர்க்கார் செய்த நல்ல காரியங்களை நிச்சயம் எடுத்து நடத்துவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் சர்க்காரை எடுத்தார்கள். நிலவரியை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். தனியார் தீர்மானம் கொண்டு

வந்தார்கள் அப்பொழுது இவர்கள். நிலவரி மட்டுமல்ல, பாக்கியிருக்கும்படியான ஏனைய வரிகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நிலவரியை மட்டும் ரத்து செய்யவேண்டும் என்பதற்கு அப்பொழுது இருந்த சர்க்கார் வேண்டாம் என்று சொல்லவில்லை. செஸ், தண்ணீர் தீர்வை போன்ற வரிகளை எடுக்க வேண்டும் என்பதற்குத்தான் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இன்றைக்கு இருக்கும்படியான நிலையிலே . .

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** 1965-ம் ஆண்டில் நிலவரி ஸர்சார்ஜ் 25 சதவிகிதம் உயர்த்தப்பட்டபொழுது, எதிர்க் கட்சியினர் அத்தனை பேர்களும் அன்று அதை எதிர்த்தோம். அது தனியார் தீர்மானம் அல்ல. எதிர்க்கட்சியினர் என்ற வகையில் அத்தனை பேர்களும் அதை எதிர்த்தபோதிலும், ஆளும் கட்சி அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அப்பொழுது அப்படி நடந்துகொண்டார்கள் என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பின்னால் அதை நாங்கள் எடுத்து விட்டோம். அப்பொழுது இருந்த நிலைமையில் அப்படிச் செய்தோம். நீங்களும் அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையெல்லாம் பற்றி இப்பொழுது பேசவேண்டியதில்லை. இப்பொழுது சட்டமன்றத்தில் சொல்லும்படியான நிலைக்குச் சொல்கிறேன். அதோடு மட்டுமல்ல. இன்னும் என்ன பெருத்த ஏமாற்றம்?

"The Report of the Special Officer appointed to consider the question of abolition of land revenue in all its aspects has just been received. It will take a little time for the Government to consider the Report of the Special Officer and take decisions thereon. The Finance Department has in these circumstances assumed normal collections under land revenue, leaving out only the proceeds of the surcharge on land revenue, which has been repealed."

என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது உரையில் கூறியிருக்கிறார். அதாவது இப்பொழுது எடுக்கப்பட்ட சர்சார்ஜை மட்டும் விட்டு விட்டு, பாக்கி இருக்கும்படியான நிலவரியை வசூல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதுதான் எனக்குத் தெரிந்த வரையில் இடைக்கால பட்ஜெட் உரையிலிருந்து நான் புரிந்து கொண்டது. அதை எடுக்க வேண்டும், பொது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதான் நிலை.

இன்னொன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 'அரிசியை வைத்து அரசியல்' என்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் மட்டுமல்ல; இந்த மன்றத்தில் 10 வருஷம் பணியாற்றியிருக்கிறேன். பாராளுமன்றத்தில் ஐந்து வருஷம் பணி செய்யும்படி மக்கள் என்னைப் பணித்தார்கள். விவசாயி என்ற முறையிலும் விவசாயத்தில் அனுபவமுள்ளவன் என்ற முறையிலும் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எந்த சர்க்கார் செய்த காரியமாக இருந்தாலும் கூட, அதை எதிர்த்தும்,



கண்டித்தும் கூடச் சொல்லும்படியான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலை என்ன? இப்பொழுது அரிசிப் பற்றாக்குறை. மக்களுக்குத் தேவையான அரிசி கொடுக்க வேண்டும். கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. சர்க்கார் கட்சியில் இருக்கும்படியான விவசாயம் தெரிந்தவர்களை, விவசாயம் தெரிந்த திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களை நான் கேட்பேன். உண்மையாக விவசாயம் செய்பவர்கள் சில காரியங்கள் சாத்தியமா, சாத்தியம் இல்லையா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். பத்து வருஷங்களுக்கு முன்பு ரூ. 62 கோடி வருமானம் என்று சொன்னார்கள் இப்பொழுது ரூ. 204 கோடி வருவாய். விவசாயி என்ற முறையில் 20 வருஷங்களுக்கு முன்னால் ஒரு எக்கர் நிலத்திற்கு உற்பத்திச் செலவு என்ன என்ற புள்ளிவிவரத்தையும், அதே போல் இப்பொழுது இருக்கும்படியான புள்ளி விவரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சர்க்கார் கொடுக்கும்படியான விலை முன்னால் எவ்வளவு? இப்பொழுது எவ்வளவு? எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, கொடுக்கப்படுகிற விலை நியாயமான விலையா? விவசாயிகளுக்குக் கட்டுபடியாகின்ற விலையா? விவசாயிகளுக்கு லாபகரமான விலையா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1939-ல் ஒரு எக்கரில் நெல் சாகுபடி செய்ய, எல்லாம் சேர்ந்து சாகுபடிச் செலவு ரூ. 35. இப்பொழுது ஒரு எக்கர் நிலத்தில் சாகுபடி செய்வதற்கு செலவு ரூ. 350 அல்லது ரூ. 400 ஆகிறது. பட்டணங்களில் இருக்கிற—லிவிங் இண்டெக்ஸ்—வாழ்க்கைத் தரத்தின் புள்ளிவிவரத்தை எடுத்துக்கொண்டு பேசுகிறோமே தவிர, விவசாயிகளின் குறைகளை நினைக்கிறோமா? விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு அதிகம் என்பதை சிந்தித்துப் பார்க்கிறோமா? என்றால், இல்லை என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்பொழுது உற்பத்திச் செலவு ரூ. 35, இப்பொழுது ரூ. 350 அல்லது ரூ. 400 ஆகிறது. 1939-ம் ஆண்டில் விவசாயிக்கு என்ன விலை கிடைத்ததோ அதற்குக் கூட [illegible] அந்த விலை இப்பொழுது அவனுக்குக் கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு வேண்டிய ஊக்கத்தை நாம் உண்டாக்கவில்லை. இதைத் தான் நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். இந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளெல்லாம் விவசாயிகளுக்கு ஊக்கமான நிலையிலே இல்லை. இப்பொழுது சர்க்கார் கட்சியில் இருக்கும் சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். 'நாங்கள் பதுக்கலை எடுத்துவிட்டோம், 12,000 மூட்டைகள் சிக்கிவிட்டன' என்று சொன்னார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பதுக்கலை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. பதுக்கலை எடுக்க பகுதிகளிலிருந்து என்னிடம் சில புகார்கள் வந்திருக்கின்றன. அந்தப் புகார்களையெல்லாம் ஆராய்ந்து எவை நல்ல புகார்கள், எவை கெட்ட புகார்கள் என்று தெரிந்து பிறகு சொல்ல ஆசைப்படுகிறேன். பதுக்கல் என்றால் என்ன? விவசாயி என்ன திருடனா? விவசாயியை எந்த சர்க்காராக இருந்தாலும் சரி, திருடனை நடத்து

வதுபோல், கொலைக்குற்றம் புரிந்தவனை நடத்துவதுபோல் நடத்தினால், அந்த ஆட்சி நன்றாக இருக்க முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயி திருடன் என்ற நிலை, அந்த மனப்பான்மை, போகவேண்டும். பதுக்கல் என்றால் என்ன? இருக்கும்படியான நெல்லை வாங்கி வியாபாரத்திற்கு என்று ஒரு இடத்தில் தனியாக வைத்துக்கொண்டிருந்தால், அதற்குத் தான் 'ஹோர்டிங்' என்று பெயர். ஆளும் கட்சியிலிருக்கிற விவசாயம் தெரிந்த அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வருஷம் பூராவுக்கும் விவசாயிக்கு பண்ணைச் செலவுக்கு, கூலிச் செலவுக்கு நெல் வேண்டும். அந்த நெல்லை வைத்துக்கொண்டிருக்கலாம். பெரிய பண்ணை என்றால் 30 ஆட்கள் இருப்பார்கள். ஒரு மாதத்திற்கு ஒரு குவிண்டால் நெல் என்றால், 30 பேர்களுக்கு 30 குவிண்டால்; வருஷம் ஒன்றுக்கு 400 குவிண்டால் நெல் இருப்பு அவர்கள் வைத்துக்கொண்டிருக்கலாம். விவசாயி நெல்லை வைத்துக்கொள்ளாமல், எல்லாவற்றிற்கும் பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்ய முடியாது. கொள்முதலில் தீவிர கவனம் செலுத்துங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை கொள்முதலை நான் எதிர்ப்பவனல்ல. கொள்முதல் வேண்டும். 1951-54-ல் கட்டாயக் கொள்முதலைப் பற்றி இந்த அவையிலே நான் சொல்லும்பொழுது அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஓரளவுக்குக் கொள்முதல் இருக்கவேண்டும். கொள்முதலைப்பற்றி சொல்லும்பொழுது, ஏழைகளை தாஜா பண்ண வேண்டும், பணக்காரர்களிடம் கண்டித்து வாங்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நடைமுறையில் எப்படி விஷயம் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நமது சென்னை மாகாணத்தில் 20 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். அவர்களில் 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், 20 லட்சம் பட்டாதார்களில் 18,50,000 பட்டாதார்கள் 5 ஏக்கருக்கு உள்ளே நிலம் வைத்திருப்பவர்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். ஐந்து ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களை விட்டுவிடலாம் என்று சொன்னால் கொள்முதல் நிச்சயம் நடக்காது. பாக்கி 10 சதவிகிதம் உள்ள பட்டாதார்களைப் பொறுத்தவரையிலும் எல்லா நெல்லையும் அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலையை வைத்துக்கொண்டாலும், பயன் இல்லை. அவர்களுடைய செலவுக்கு வேண்டிய நெல்லை விட்டுவிட்டுத்தான் எடுக்கவேண்டுமே தவிர, எல்லா நெல்லையும் எடுத்துக்கொள்வதற்கு சட்டம் இடம் கொடுக்காது. நான் கொள்முதல் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே நோக்கில் விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும்படியான திட்டங்கள் இருக்கவேண்டும். இருக்கும்படியான நிலையில், எந்த விவசாயியாக இருந்தாலும் சரி, தேசத்தினுடைய நலனைக் கருதி, இருக்கும்படியான சூழ்நிலையைக் கருதி, எல்லோரும் சிறிது தியாகம் செய்யுமாறு எங்களுடைய கட்சி சார்பாகக் கேட்டுக்கொண்டு, அந்த விஷயத்தில் எங்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். கட்டாயக் கொள்முதல் மூலம்





எந்த சர்க்காருக்கும் கெட்ட பெயர் தான் வரும். கிராமத்தில் கணக்குப் பிள்ளை, மணியக்காரர் தான் 'அவைலபிள் சர்ப்ளஸ்' எவ்வளவு என்று தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இஷ்டத்திற்கு விடும்படியான நிலைமை தான் இருக்கிறது. ஒருவருக்கு ஒரு இடத்தில் 10 ஏக்கர் இருந்தால் 'அவைலபிள் சர்ப்ளஸ்' 10 மூட்டை என்று சொல்வார். இன்னொரு இடத்தில் அவருக்கு வேண்டாதவராக இருந்தால், அதே 10 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர் 100 மூட்டை கொடுக்கவேண்டும் என்று சொல்வார். 'அவைலபிள் சர்ப்ளஸ்' எவ்வளவு என்பதை நிர்ணயிப்பதில் தான் இந்த சிரமங்கள் எல்லாம் வருகின்றன. குத்து மதிப்பாக, லெவி சிஸ்டம் என்ற முறையில், ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்பவர்கள் குறைந்தது ஒரு மூட்டை சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்கள் 2 மூட்டைகள் வீதம் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்கள் 3 மூட்டைகள் வீதம் கொடுத்தாக வேண்டும், 10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 10 மூட்டைகள் வீதம் கொடுக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி, பாக்கியிருக்கும்படியான நெல்லை அவர்கள் இஷ்டத்திற்கு வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு விட்டு விட்டால்தான், இந்தப் பிரச்னை ஓரளவுக்கு தீரும் என்பதே என்னுடைய ஆலோசனை என்று இந்த சர்க்காருக்கு சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். கட்டாயக் கொள்முதலை எந்த நிலையில் எடுத்துக்கொண்டாலும், அது சரியாக நடக்காது. ஒரு டார்ஜெட் வைத்து, டார்ஜெட்டை நிறைவேற்றும் வகையில் காரியங்கள். . .

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** காங்கிரஸ் திட்டமா இந்தக் கொள்முதல் திட்டம்? அதைத்தான் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதையும்விட நீங்கள் அதிகமாகச் செய்யவேண்டும்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடையூறு செய்யவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆகவே, இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவரிடமும் ஒரு ஏகரா பூமிக்கு ஓரளவுக்கு பெறவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான விலை எப்பேற்பட்ட விலை? ஒரு ஏக்கருக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறது? பட்டணம் படி ஒரு படி அரிசி உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உற்பத்திச் செலவு ஆகிறது? என்று சர்க்கார் கட்சியில் இருக்கும் விவசாயம் தெரிந்தவர்களைக் கேட்கிறேன். ஒரு பட்டணம் படி அரிசி உற்பத்தி செய்ய விவசாயிக்கு ஒரு ரூபாய் செலவு ஆகிறது என்று புள்ளிவிவரம் கணக்கிடப்பட்டிருக்கிறது. தொண்ணூறு பைசா அல்லது ஒரு ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும்படியாக இருந்தால் விவசாயிக்கு லாபகரமான விலை, கட்டுபடியாகும்படியான விலை என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால் விவசாயிகளை வாழச் செய்யுங்கள் என்று கேட்கவில்லை; வாழவிடுங்கள் என்றுதான் கேட்கிறேன். விவசாயிகள் வாழ்ந்தால்தான், நாட்டில் உற்பத்தி

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 21

பெருகும்; நாட்டில் உற்பத்தி பெருகினால்தான் சுபிட்சம் ஏற்படும் என்ற நிலையைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அண்டை ராஜ்யமான கேரளாவில் பற்றாக்குறை இருக்கிறது. அது ஒரு பற்றாக்குறையான மாநிலம். ஆளும் கட்சிக்காரர்கள் சொன்னார்கள், காங்கிரஸ்காரன் கடனை வைத்து விட்டுப் போய் விட்டான், அதனால்தான் நாங்கள் இப்பொழுது 18,000 டன் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று. தயவு செய்து அப்படி எதையும் சொல்ல வேண்டாம். நாங்கள் எந்தக் கடனையும் வைக்கவில்லை. ஆனாலும், முதல் அமைச்சர் கொடுக்க முன் வந்ததைப் பாராட்டுகிறேன். அந்த ராஜ்யம், இந்த ராஜ்யம் என்ற பாகுபாடு ஒன்றும் இல்லை. பாரத தேசம் பூராவும் ஒன்று; அதில் எந்த ராஜ்ய மக்களாக இருந்தாலும் உதவி செய்ய வேண்டியது தான். ஆனால், அதே சந்தர்ப்பத்தில் நான் முதல் அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரளா விலிருந்து நமக்கு வரவேண்டியது அதிகமாக இருக்கிறது. மேற்கு நோக்கிப் போகும் தண்ணீரெல்லாம் வீண் விரயமாகப் போகிறது. அரபிக் கடலிலே போய் விழுகிறது. யாருக்கும் உபயோகமில்லை. அப்படிப் போகும் தண்ணீரை நம் மாநிலத்திற்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டு, சில விஷயங்களில் அக்ரிமென்டு ஆகியிருக்கிறது. அதிகமாக வீணாகிப் போகும் தண்ணீரை நம் மாநிலத்திற்கு அவர்கள் கொடுத்தால், 18,000 டன் என்ன, 1,88,000 டன் கூட விளைவித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும். பிரதிபலனைக் கூடக் கேட்கவில்லை. அவர்களுக்கு உபயோக மில்லாமல் வீணாகிப் போகும் தண்ணீரை நம் பகுதிக்குத் திருப்பி விட்டால் நம் மாநிலத்தில் சில பகுதிகள் பெரும் செழிப்பும் அடைந்து தமிழ் நாடு அண்டை மாநிலங்களுக்கு உதவக்கூடிய சூழ்நிலை உண்டாகும். அப்படிப்பட்ட முயற்சி எடுப்பதில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அந்த விஷயத்தில் நம் அரசாங்கம் கண்டிப்பாக இருந்து, அவர்களிட மிருந்து தண்ணீரைப் பெற ஆவன செய்ய வேண்டும். பரம்பிக் குளம்—ஆளியாறு பிராஜெக்டில் கூட கொடுக்கப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை. ஆளியாறு பக்கத்தில் அவர்கள் வேலை கள் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த விஷயத்தில் கண்டிப்பாக இருந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த வகையில் அவர்கள் நம் மாநிலத்தின் நன்மையைக் கருதி செயல்பட்டால், 18,000 டன் அரிசி மட்டுமல்லா மல், இன்னும் அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் உற்பத்தி செய்து கொடுக்க நம் மாநில விவசாயிகள் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கேரளாவிற்கு மட்டு மின்றி, வேறு எங்கே, எந்தப் பகுதியில் பற்றாக்குறை இருந்தாலும் நாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அந்தப் பகுதி தண்ணீரை நமக்குப் பயன்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.



1967 மார்ச் 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அது மட்டுமல்லாமல், இப்பொழுது இருக்கும் பிரச்சினைகளில் உணவுப் பிரச்சினைதான் முக்கியமானது. விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த் தால், நம் மாநிலம்தான் அதிகமான முன்னேற்றம் அடைந்திருக் கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மொத்தம் வினியோ கிக்கப்பட்டிருக்கும் ஐந்து லட்சம் மின்சார பம்பு செட்டுகளில், தமிழகத்தில் மட்டும் இரண்டு லட்சத்திற்கும் மேலான பம்பு செட்டு கள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் பற்றாக் குறை இருக்கிறது. இன்னும் திட்டங்களைத் தீவிரமாக எடுத்து நடத்த வேண்டும். சிறிய பாசனத் திட்டங்களையும், இன்னும் பெரிய பாசனத் திட்டங்களையும், எதுவானாலும் சரி, அவற்றையெல்லாம் தீவிரமாக நடத்தவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலையில் சிறிய பாசனத் திட்டமானாலும், பெரும் பெரும் திட்டங்களானாலும் சரி, அவற்றை எடுத்து நடத்தி, அவற்றை நிறைவேற்றுவதன் மூலம், விவசாய உற்பத்தியைப் பெருக்க ஆக்க மும் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

அதிகமாகப் பேச வேண்டியவை இருக்கின்றன. ஆனாலும், முதல் அமைச்சரும் பேச வேண்டியிருக்கிறது. மேலும் தொடர்ந்து பேச சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் இண்டெரிம் பட்ஜெட்டில் அதிகமாக ஒன்றும் இல்லை என்று நினைத்தாலும், தொடர்ந்து ஏற்கனவே பணிபுரிந்த நிர்வாகஸ்தர்கள் இருக்கிறார்கள், அவர்களும் ஒத்துழைத்து நல்ல பட்ஜெட்டாக செய்ததற்காகப் பாராட்டுகிறேன். புகார்களை எதிர்ப்பாகச் சொல்லவில்லை; ஆனால், நல்ல காரியங்களைச் செய்யும் போது குறைகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்று சொல்லு கிறேன். பதுக்கல், பதுக்கல் என்று சொல்லும்போது—எனக்கும் புகார்கள் வந்திருக்கின்றன—பதுக்கல் செய்பவர்களெல்லாம் விவசாயிகள் என்றும், காங்கிரஸ்காரர் வீடுகளாகப் பார்த்துச் செய்வதாகவும் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர் களிடம் பதுக்கல் இல்லையா? அல்லது அவர்களில் விவசாயிகளே இல்லையோ என்னவோ, தயவுசெய்து முதல் அமைச்சர் அதைக் கவனிக்க வேண்டும். 5,000 மூட்டை பதுக்கலை போலீசார் எடுத் திருக்கிறார்கள். இதை நான் ஏன் எடுத்துச் சொல்லுகிறேன் என்றால், விவசாயிகள் செய்யும் தொழிலையே இது பாதிக்கும் என்கிற அச்சத்தோடு சொல்லுகிறேன். அரிசி விலை இன்றைக்கு ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் உற்பத்திச் செலவு என்ன வாகிறது? ஒரு ஏக்கருக்கு ஆதாயம் என்ன கிடைக்கும்? 100, 200 கூடக் கிடைப்பது இல்லை. ஆனால், அதே நிலத்தில் கரும்பு போட் டால் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. பருத்தி போட் டால் 700 ரூபாய் கிடைக்கிறது. வேறு எந்தப் பயிரைச் செய் தாலும் அதிக ஆதாயம் வருகிறது, தொல்லையும் இல்லை. அந்த நிலையில் விவசாயி நெல் சாகுபடி செய்வானா? வேறு பயிரைச் சாகுபடி செய்வானா? என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்வளவு தொந்தரவுகளும், கஷ்டங்களும் இருக்கும் நிலையில்,

விவசாயி ஊக்கத்தோடு வேறு பணப்பயிர் செய்தால் நிலைமை என்ன ஆகும்? இன்னும் அதிகமான பற்றுக்குறை ஏற்படும் நிலைதான் உருவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிக்கு லாபகரமான பயிரைத்தான் அவன் செய்வான். இதைப்பற்றி நான் பாராளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். நியாய விலை கொடுத்து உற்பத்தி செய்யச் சொல்லுகிறீர்களா? அல்லது விலையை குறைத்து, அளந்து கொடுத்துச் செய்யச் சொல்லுகிறீர்களா? உங்களுக்கு எது வேண்டும்? என்பதை நீங்கள் கொள்கை அடிப்படையில் தீர்மானம் செய்ய வேண்டும். எத்தனை படி என்பதல்ல பிரச்சினை. எத்தனை படி வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். மூன்று படி என்ன? நாலு படி வேண்டுமானாலும் போடுங்கள். வரவேற்கிறேன்; நானும் வாங்கிப் பொங்கிச் சாப்பிடுகிறேன். நான் விவசாயி என்கிற நிலையில் கூறுகிறேன். ஒரு விவசாயிக்கு வேண்டிய அத்தனை பொருள்களையும் நீங்கள் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். ஒரு படியா, மூன்று படியா என்பதல்ல பிரச்சினை. உற்பத்தியாளருக்குக் கட்டுபடியாகும் விலையைக் கொடுக்க வேண்டும். அன்றைக்கு, பருத்திக்கொட்டை 2 ரூபாய் ஆக இருந்தது, இன்றைக்கு ரூபாய் 35. அதே போல பிண்ணாக்கு 1½ ரூபாய் ஆக இருந்தது, இன்றைக்கு ரூபாய் 35. ஒரு ஜோடி மாடு அன்றைக்கு ரூபாய் 200 ஆக இருந்தது, இன்றைக்கு 2,500 ரூபாய் ஆக இருக்கிறது. இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து போடப்பட்ட திட்டங்கள் இருக்கின்றனவா? இதைப்பற்றியெல்லாம் யாராவது பேசுகிறார்களா? விவசாயி எப்படி இருக்கிறான் என்றால், அன்றைக்கு ஒரு சோல்ஜரைப்பற்றி unwept unhonoured and unsung என்று சொல்லப்பட்டது போல, இன்றைக்கு விவசாயியைப்பற்றி பேச ஒருவரும் கிடையாது. அதிகமாகக் கொடுங்கள், கொடுங்கள் என்றுதான் கேட்கிறோமே தவிர, என்ன வேண்டும் என்று யாரும் கேட்பதில்லை. தேசத்திலேயே ஒரு மெத்தனமான போக்குப் பரவி வருகிறது. எதற்கும் உரிமை இருக்கிறது. ஆனால், கடமைபற்றி யாரும் பேசுவதில்லை. அப்படி ஒரு மெத்தனமான போக்குப் பரவி வருகிறது. அந்தப் போக்கு தேசத்திற்கு நல்லதல்ல; அது நல்ல போக்கு அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கல்லூரி மாணவன் என்ன நினைக்கிறான்? படிக்காமலே பாஸ் செய்ய வேண்டும் என்று நினைக்கிறான். உபாத்தியாயர் என்ன நினைக்கிறார்? சொல்லிக் கொடுக்காமலேயே சம்பளம் வேண்டும் என்று நினைக்கிறார். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வேலை செய்யாமலேயே டி.ஏ. கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். விவசாயியும் இந்த நிலைக்கு விலக்கல்ல. உழைக்காமலே ஒரு மூட்டைக்கு ரூபாய் 200 கிடைக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இத்தகைய மனப்பான்மை நல்லதல்ல. எதுவும் சுலபமாகக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்ற மனப்பான்மை இருந்தால் இந்த தேசம் என்றைக்கும் சுபிட்சத்தை நாடிப் போகப் போவதில்லை. எல்லோரும் உழைக்க வேண்டும், கடமையைச் செய்ய வேண்டும், பிறகு உரிமையைக் கேட்கவேண்டும். அப்பொழுது தான் தேசம் நல்ல நிலைக்கு உயர முடியும்.





"எல்லோரும் எல்லாப் பெரும் செல்வம் எய்தலாலே,
இல்லாரும் இல்லை, உடையாரும் இல்லை"

என்கின்ற சுபிட்சத்தை நோக்கிப் போகவேண்டும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் சொந்த முறைமை விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களை நான் அனுமதிக்கிறேன். அவர்கள்தான் பேசும்போது எந்த புதிய கருத்தையும் புகுத்தக் கூடாது என்றும், அவர்கள் பேசுவதை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, அனுமதிக்கிறேன்.

***திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் விஷ விருட்சம் என்றதைக் குறிப்பிட்டார்கள். நான் விஷ விருட்சம் என்று குறிப்பிட்டது காங்கிரஸ் கட்சியையோ அல்லது வேறு கட்சியையோ அல்ல. கடந்த இருபது ஆண்டு காலத்தில், வளர்ந்திருக்கிற வறுமையையும், இல்லாமையையும், போதாமையையும், ஊழல்களையும், லஞ்சத்தையும், குறிப்பிட்டேனே அல்லாது எந்தக் கட்சியையும் குறிப்பிடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, விஷ விருட்ச ஆட்சி என்று அவர்கள் குறிப்பிட்டார்கள் என்பதால் சொன்னேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இப்பொழுது பெரு மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இறுதி உரை ஆற்றுவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் பேரில் பேசிய உறுப்பினர்கள் அவ்வளவு பேரும், அவர்கள் வேறு வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும், என் கவனத்தில் வைக்க வேண்டும் என்று பல பல கருத்துக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரே வகையான கருத்தைச் சொல்லி இருந்தால், என்னுடைய வேலை எளிதாகியிருக்கும். ஆனால், பல் வேறு உறுப்பினர்களும் பல் வேறு விதமான கருத்துக்களைக் கொடுத்தது மட்டுமல்லாமல், ஒரு உறுப்பினர் தான் சார்ந்திருக்கும் கொள்கையின்படி நின்று கொடுத்த கருத்திற்கும், மற்றொரு உறுப்பினர் கொடுத்த கருத்திற்கும் ஏற்பட்டிருக்கிற முரண்பாட்டிற்கு இடையே சிக்கிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால், சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான், உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அந்தக் கருத்துக்களுக்குச் சமநிலை கண்டு ஆராய்ந்து அவைகளைச் செயல் முறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறேன்.

முதலிலே நான், எதிர்க்கட்சித் தலைவராக உள்ள என்னுடைய மதிப்புமிக்க நண்பர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். நான் அவர்

களிடமிருந்து இந்த விதமான ஒத்துழைப்பான பேச்சைத்தான் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவில் அவர்கள் கனிவோடும், ஒத்துழைப்பு மனப்பான்மையோடும் இன்றையதினம் பேசியிருக்கிறார்கள். ஒரு முதிர்ந்த அரசியல்வாதி இந்த வகையிலேதான் பண்பாக இருப்பார்கள் என்பதனை என்னுடைய பக்கத்திலே உள்ளவர்கள் மட்டுமல்லாமல், அவர்களுடைய பக்கத்திலே உள்ளவர்களும் அறிந்து, அதன்படிச் செயல்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது தேவை என்று கருதுகிறேன். இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள், விவசாயத்தைப் பற்றியும், விவசாயச் செலவைப் பற்றியும், அது கட்டுப்படியாகக்கூடிய அளவுக்கு விலை கிடைக்காவிட்டால் விவசாயிகள் வேறு தொழிலுக்குச் சென்றுவிடுவார்கள், வேறு பயிர்களுக்குப் போய் விடுவார்கள் என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்வது எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலே அல்ல. அவர் எப்போதும், விவசாயத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், இதே கருத்தைத்தான் வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். ஏனென்றால், அந்தக் கருத்திலே அவர்களுக்கு அப்பழுக்கற்ற நம்பிக்கை இருக்கிறது. நானும் அவருமாகச் சேர்ந்து 1957 முதற்கொண்டு இந்தச் சட்ட மன்றத்தில் இருந்த நேரத்தில், அவர்கள் இதே விதமான பேச்சைத்தான் பேசினார்கள். அப்பொழுது இங்கே அமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்களும் நானும் வேடிக்கையாகக் கூடப் பேசிக் கொள்ளுவோம். "இப்பொழுது நாம் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளலாம்" என்று பேசிக்கொள்ளுவது வாடிக்கை. ஏனென்றால், நாங்கள் நாட்டிலுள்ள விவசாயிகளுக்குள்ள குறைபாடுகளை அறிந்துகொள்ள வேண்டுமானால், கஷ்டங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால், நண்பர் திரு. கருத்திருமன் அவர்களைத் தான் அளவுகோலாக வைத்துக்கொள்ளுவது வாடிக்கை. அவர் நல்ல விவசாயி; விவசாயத் துறையிலே அதிக அனுபவம் பெற்றவர். ஒரே ஒரு குறை. நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொல்லிய முறைப்படி, விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற அனைவரும் நடந்துகொள்ள வேண்டும். எல்லோரும் தியாக மனப்பான்மையோடு நடக்கவேண்டும் என்று அவர்கள் குறிப்பிடுவதை எல்லா விவசாயிகளும் கையாளுவார்களானால், இந்த நாட்டுப் பிரச்சினை இவ்வளவு சிக்கலுள்ளதாக இருக்காது. இதைத் தொடர்ந்து நான் கொள்முதலைப் (ப்ரொக்யூர்மெண்ட்) பற்றிக்கூடப் பேச விரும்புகிறேன்.

கொள்முதலை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் இதிலே ஏற்பட்டுவிட்ட சங்கடம் என்னவென்றால், கொள்முதலைப் புகுத்திய நேரத்தில், எதிர்க்கட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் அதை ஆதரித்திருக்கிறது. இப்படி நாட்டிலே உள்ள இரண்டு பெரிய கட்சிகள் ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், கம்யூனிஸ்டுக் கட்சியும் கொள்முதலை ஆதரித்திருக்கிறது. 'கொள்முதல் வேண்டாம்'





என்று சொல்லுவதற்குப் பல கட்சிகள் இருந்தாலும், இந்த 3 கட்சிகள் சேர்ந்து கொள்முதலை ஒரு நடைமுறைக்குக் கொண்டு வந்தபோதிலும், அப்பொழுதிருந்த காங்கிரஸ் அரசாங்கம், 'கொள்முதல் என்பது ஒரு சமூகக் கடமை' என்பதைப் பொது மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவதில் தவறு செய்து விட்டார்கள். அதே தவறை நாங்களும் செய்தோம். கொள்முதல் தேவைதான் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்ல நாங்களும் தவறிவிட்டோம். அதை இன்றையதினம் சொல்லுவதற்குக் காரணம், அதே தவறான வரலாற்றில் புதிய அத்தியாயத்தை இரண்டு பேரும் எழுதிக்கொண்டிருக்கவேண்டாம் என்பதற்காகத் தான். கொள்முதல் நியாயந்தான் என்பதை ஒத்துக்கொள்ளுகிற கட்சிகள் சமூகத்திலே அணுகி, கொள்முதல் என்பது ஒரு இடைக் கால ஏற்பாடே தவிர, நிரந்தரமான ஏற்பாடு அல்ல என்பதையும், சர்க்கார் உணவுப் பிரச்சினை விஷயத்தில் தலையிடுவதைத் தங்களுடைய கொள்கையாகக் கொள்ளவில்லை என்பதையும், அப்படித் தலையிடுவதற்கு வேண்டிய அவசியத்தைப் பல்வேறு வகுப்புகள் —வகுப்புகள் என்று குறிப்பிடும்போது ஜாதிகளை நான் குறிப்பிட வில்லை, இந்தச் சமூகத்திலே உள்ள பல்வேறு தொழில் பிரிவினரைக் குறிப்பிடுகிறேன்—உண்டாக்கிவிட்ட காரணத்தினாலேதான் சர்க் கார் இதிலே குறுக்கிட வேண்டியிருக்கிறது என்பதையும், இந்த ஏற்பாட்டிற்குச் சமூகம் முழுவதும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, ஒரு கட்சி அல்லது ஒரு கட்சியினால் நடத்தப் படுகிற அரசாங்கம் மட்டும்தான் பொறுப்பாளி என்று கருதக் கூடாது என்பதையும் நாம் எடுத்துச் சொல்வோமானால், நல்லதை ஆதரித்துப் பழக்கப்பட்ட நம்முடைய மக்கள் இதற்கும் தங்களுடைய பேராதரவை நிச்சயமாகத் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கள்ளக் கடத்தல் காரர்கள் அல்லது பதுக்கல்காரர்கள் இவர்களிடத்திலே எடுக்கப் படுகிற நடவடிக்கைகளைப்பற்றித் தாக்கல் செய்திருக்கிற புகார்களை ஆராய்ந்து என்னிடத்திலே சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் அப்படி ஆராய்ந்து, ஏதாகிலும் நடவடிக்கை தவறான நடவடிக்கை என்று என்னிடத்தில் மெய்ப்பித்துக் காட்டுவார் களானால் நிச்சயமாக அப்படிப்பட்ட தவறான நடவடிக்கை ஏற்பட வொட்டாமல் நான் பார்த்துக்கொள்வேன். ஆனால், பதுக்கல்காரர் களின் சுபாவத்தையும் அவர்கள் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்ளவேண்டும். பதுக்கல்காரர்களும் பிடிபடுகிறபோதுதான் புதுப் புதுக் கட்சிகளைத் தேடுவார்கள். இதுவரையில் காங்கிரஸ் கட்சியிலே இல்லாதவர்கள் கூட, அவர்கள் பதுக்கல்காரர்களாக இருந்து பிடிபட்டவுடனே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரை அணுகி, 'நான் நீண்ட நாளாகக் காங்கிரஸ், ஆனால் வெளியிலே தான் தெரியாது. நான் காங்கிரஸ் என்று பார்த்துத்தான் பிடிக்கிறார்கள்' என்று சொல்லலாம். ஆகையால், அந்த நேரத்தில் அவர்கள் போட்டுக்கொண்டு வருகிற கதர்ச் சட்டை சலவை

செய்ததா? புதிதா? என்பதை மட்டுமாவது பார்த்துக்கொண்டு, அந்தப் புகார்களை என்னிடத்தில் கொண்டுவரவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கை விஷயத்தில் இவ்வளவு விரிவான விவாதம் நடக்கும் என்று நான் உள்ளபடியே எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், படிக்கிறபோது எனக்கே மிகவும் சங்கடமாக இருந்தது. 'வெறும் வரவு செலவுக் கணக்கைப் படிக்கிறோம்; பற்றாக்குறையைச் சொல்லுகிறோம்; துண்டு விழும் பட்ஜெட்டைப்பற்றிச் சொல்லுகிறோம்; நாம் முதன் முதலில் மன்றத்தில் பேசுகிறபோதே இதைத்தானே பேசவேண்டி வருகிறது' என்று கூட வருத்தப்பட்டேன்; கவலைப்பட்டேன். ஆனால், என்னுடைய நண்பர்கள், பாராளுமன்றப் பயிற்சி பெற்ற நம்முடைய நண்பர்கள், இந்தக் கணக்கு வழக்குத் தகவலைக்கூட மிகவும் சுவையுள்ளதாக்கியிருக்கிறார்கள். அதைப் பார்த்த பிறகுதான், கணக்கு வழக்கில்கூட இவ்வளவு சுவை இருக்கிறதே என்று மகிழ்ச்சி அடைந்தேன். ஏனென்றால், பள்ளிக்கூடத்தில் கணக்கு விஷயத்தில் நான் அவ்வளவாகக் கவனம் செலுத்தியதில்லை. ஆனால், கடைசி வரையில் அப்படியிருந்தேன் என்பது அர்த்தம் அல்ல; இறுதி வகுப்பில் நூற்றுக்கு 85 மார்க் வாங்கினேன். கணக்கு விஷயத்தில் நான் அக்கறை கொள்ளவில்லை என்று சொன்னவுடனேயே எதிர்த் தரப்பில் உள்ளவர்கள், "ஆகா! அதனால்தான் இந்தக் கணக்கிலே இவ்வளவு தவறு" என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டாம். (சிரிப்பு). முதலிலே அவ்வளவு பயிற்சி பெறாமல் இருந்தேன். ஆனால், தேவைப்பட்டபோது, நான் அதிலே பயிற்சி பெற முடிந்தது. அப்படிப்பட்ட பயிற்சியை இங்கே இருப்பதன் மூலமாக மட்டுமல்ல, எனக்கு எதிரிலே வீற்றிருக்கிற எல்லா நண்பர்கள் மூலமாகவும் பெற விரும்புகிறேன். நான் காங்கிரஸ் கட்சியிலே உள்ள தலைவர்களையும் வேறு கட்சியிலே உள்ள தலைவர்களையும் நேரடியாகச் சந்தித்துப் பேசியது வெறும் உபசாரத்திற்காக அல்ல. அல்லது, அப்படி நான் அவர்களைப் பார்ப்பதன் மூலம் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை விட்டுவிடுவார்கள், அல்லது என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நப்பாசையினால் அல்ல. ஒரு சிறந்த பாராளுமன்ற மரபு முறை ஆதரிக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. உங்களுடைய சிறந்த ஒத்துழைப்பை நான் பெற விரும்புகிறேன். எங்களிடத்தில் நீங்கள் சென்ற தடவை—நாங்களும் எதிர்க்கட்சியினராக இருந்தபோது—ஒத்துழைப்பைக் கேட்டீர்கள். நாங்கள் இந்தத் தடவை உங்களுடைய ஒத்துழைப்பைக் கேட்கிறபோது, எங்களுக்கு அப்பொழுது இல்லாத ஒரு சாதகம் உங்களுக்கு இப்பொழுது இருக்கிறது. நாங்கள் எதிர்க் கட்சியாக முன்னால் இருந்தபோது, நிர்வாகத்திலே அனுபவம் இல்லாத எதிர்க்கட்சியாக இருந்தோம். இப்பொழுது எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிற நீங்கள் நிர்வாகத்திலே அனுபவம் பெற்ற எதிர்க்கட்சியினர். ஆகையால், நீங்கள் ஒத்துழைப்பது என்றால், உங்களுக்கு நிர்வாகத்திலே கிடைத்த அனுபவம், அதிலே ஏற்பட்ட சிக்கல்கள், அந்தச் சிக்கல்களை நீக்கு



வதற்கான வழிமுறைகள், இவைகளையெல்லாம் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அதை நீங்கள் எனக்குத் தரவேண்டும் என்ற முறையிலேதான் நான் உங்களிடத்திலே ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். நான் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை பெறத்தக்க விதத்தில் பெரும்பாலான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஓரிரு பேச்சுக்களில் கொஞ்சம் வேகம் இருந்திருக்கலாம். எங்கள் பக்கத்தில், வெற்றி பெற்று விட்டோம் என்ற மகிழ்ச்சி இன்னும் அடங்காத நிலை. உங்கள் பக்கத்தில் சிலபேரிடத்தில், இருந்தது போய்விட்டதே என்ற ஏக்கத்தை நீக்கிக்கொள்ளாத நிலைமை. ஒருவர் இருவர் நீக்கிக் கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில், நான் இது கிடைத்துவிட்டதே என்ற ஏக்கத்திலே இருக்கிறவனே தவிர, மகிழ்ச்சியிலே இருக்கிறவன் அல்ல என்பதை என்னை முழுக்க முழுக்க உணர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள். எங்கள் பக்கத்திலே, வெற்றிபெற்று விட்டோம் என்ற கொஞ்சம் மகிழ்ச்சியிலே உள்ளவர்கள், "எங்களை 25 வருஷங்களுக்கு அசைக்க முடியாது" என்று பேசினார்கள், உங்கள் பக்கத்தில் ஏக்கமுள்ளவர்கள், "விட்டேனா பார்" என்றார்கள். ஆனால், இரண்டுமே தேவையற்ற நாதங்கள்; இது வரவே வராது என்று எதிர்பார்க்க முடியாது. இவ்வளவு பெரிய பொதுத் தேர்தலுக்குப் பிறகு இவ்வளவு சீக்கிரத்திலே ஜுரம் இறங்கி விட்டதே, அதுதான் ஆச்சரியமே தவிர, இங்குமாங்குமாகச் சிலவிடத்தில் கொஞ்சம் காய்ச்சல் காணப்படுவது, என்னைப் பொறுத்த வரையில், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால், நாளாவட்டத்தில் சரிப்பட்டு விடவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது நீங்கள் நினைக்கலாம், 'இந்த இடைக்கால பட்ஜெட் (பிற்பகல் 1-00) துண்டு விழுகிற பட்ஜெட்; துண்டு விழுகின்ற பட்ஜெட்டைக் கொடுக்கலாமா'? என்று யாரும் அதிக அளவு ஆத்திரப்பட மாட்டார்கள். நேற்றைய செய்தித்தாளில் 7 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிற நமது மாநில பட்ஜெட் பற்றிய செய்தி வெளியாகியிருக்கும்போது, அதன் மறு பக்கத்திலேயே மத்திய சர்க்கார் நிதி மந்திரி 350 கோடி ரூபாய்க்குத் துண்டு விழும் பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கும் செய்தியும் வந்திருக்கிறது. சகல துறைகளிலும் அனுபவம் பெற்ற திரு. மொரார்ஜி தேசாயே 350 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டைத் தந்திருக்கிறபோது, எல்லா அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள வந்திருக்கிற நாங்கள் ரொம்பக் குறைவான துண்டு விழுகிற பட்ஜெட்டைத்தானே கொடுத்திருக்கிறோம் என்பதற்குப் பாராட்ட வேண்டும். 'துண்டா? விழுந்து விட்டதா? என்று சொல்வதற்கில்லை. நாட்டின் நிர்வாகத்தில் இடைக்காலத்தில் விழும் துண்டும் நிரந்தரமான துண்டு என்று கருதிவிட முடியாது. விழுகின்ற துண்டைச் [illegible]ட்ட இடைக்காலத்தில் வேறு வரிவிதிப்பு வரக்கூடும் என்ற

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 21

அச்சம் ஏற்படாமலும், கடுமையான வகையில் விழுகின்ற துண்டை எந்த வகையில் சரிக்கட்டலாம் என்பதில்தான் என் கவனம் முழுமையும் சென்றிருக்கிறது. இந்த 7 கோடி ரூபாய்த் துண்டைச் சரிகட்ட என்னென்ன வகையில் வரிகள் போடலாம் என்பதாக என் மனம் அலையவில்லையென்பதை உணர்ந்து நீங்கள் ஆறுதல் பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தத் துண்டு விழுகிற நிலைமைக்கு, என்னுடைய எதிர்க்கட்சி நண்பர் சொன்ன மாதிரி, 'இந்த இடைக்கால பட்ஜெட்டில் துண்டு விழுகிற நிலைமைக்கு என்னென்ன காரணங்கள் என்பதை மறைக்காதீர்கள்' என்றபடி நான் நிச்சயம் மறைக்க மாட்டேன். ஆகையால் இந்தத் துண்டுக்கும் இன்றைக்கு எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய நீங்கள் தான் காரணம். அதையும் மறந்துவிடக் கூடாது. இந்தத் துண்டு விழுவது பெருமையா, சிறுமையா என்ற குறுநிசயத்தைப்பற்றி நான் குறிக்கப் போவதில்லை. இந்தத் துண்டு விழுவதற்குக் காரணம் என்ன என்கிற விஷயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால் தான் அதற்குள் புகவேண்டி நேரிட்டது. இல்லையென்றால் வான வெளியைச் சுற்றி மற்றவற்றைச் சிந்திக்கலாம்.

எப்போதும் ஒரு நாட்டின் நிர்வாகத்தில் ஒரு சர்க்கார் மாறி இன்னொரு சர்க்கார் வருவது என்பது, ஒரு புத்தகத்தில் 66-வது பக்கம் படித்து முடித்த பிறகு 67-வது பக்கத்திற்குப் போவதைப் போன்றதே தவிர, ஒரு புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, இன்னொரு புதிய புத்தகத்தை எடுத்துக் கொள்வது என்று அர்த்தமல்ல. இந்த அரசாங்கத்தினுடைய புது பட்ஜெட்டில் ஒரு புதிய புத்தகத்தைப் பார்க்கலாம். கனம் பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட்டைப்பற்றிப் பேசும்போது 'Old wine in a new bottle' என்பதாக, பாட்டில்தான் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, உள்ளேயிருப்பது பழைய ஒயின்தான் என்றார்கள். அந்த ஒயின் அவர்கள் தயாரித்ததுதான். சமயத்தில் பாட்டிலுக்கு மூளி ஏற்படும்போது வேறு பாட்டிலில் மாற்ற வேண்டிய நிலையும் ஏற்படுவதைப்போல இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பாட்டிலைப்பற்றி அவர்கள் கவலைப்பட வேண்டாம். நான் தயாரிக்கக்கூடிய பட்ஜெட் வருகிற ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் உங்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்படும். நிச்சயம் அது போதை தரக்கூடியதாக இராது. கொஞ்சம் மருந்தாக இருக்கலாம்; சிறிது உணவாகவும் இருக்கலாம். அதற்கு அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த இடைக்கால பட்ஜெட்டில் துண்டு விழுந்தது எதிர்க்கட்சியில் உள்ளவர்களால்தான் என்றாலும், அது அவர்களுடைய நிர்வாகக் கோளாறினால் ஏற்பட்டதல்ல. ஒரு சர்க்காருடைய பட்ஜெட்டில் துண்டு நிர்வாக ஊழலினால் விழும். ஆகாத செலவுகளினால் துண்டு விழும். அநாவசியத் திட்டங்களினால் துண்டு விழும். இங்கே விழுந்திருக்கிற துண்டு அப்படிப்பட்ட வகையில் விழுந்த துண்டாக இருந்தால் நான் சபாநாயகரின் அனுமதியைப்பெற்று இன்னும் கொஞ்சம் அரைமணி நேரத்தைக்



1967 மார்ச் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

கூட்டி காரசாரமாகப் பேசலாம். விழுந்திருக்கிற துண்டு இயற்கையாகவே ஏற்பட்டுத் தீரவேண்டிய நிலையில் ஏற்பட்டதாகும். நமது சர்க்கார் அலுவலகத்தில் பணியாற்றி வருபவர்களுடைய திறமையைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். அவர் ஆளும் கட்சியில் இருந்த பொழுது இப்படிச் சொன்னார்களோ, என்னமோ, நான் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் சொல்லி வந்திருக்கிறேன். இன்றைய தினம் ஆளும் கட்சிக்கு வந்தபிறகும் நமது சர்க்கார் அலுவலகத்தில் பணியாற்றுகிறவர்கள் நமது முழுப் பாராட்டுதலுக்கும் உரியவர்கள் என்று சொல்லுகிறேன். அவர்கள் அரசாங்கத்தினிடம் ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தினால் அவர்கள் பாதிக்கப்படுகிறபோது, அவர்களுக்கு நாம் ஊதிய உயர்வு, பஞ்சப்படி ஆகியவற்றைக் கூட்டிக் கொடுப்பதுதான் நியாயமாகும். நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும். பாராளுமன்றத்தில் இந்தப் பஞ்சப்படி என்ற வார்த்தையையே மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இப்போது மாற்றப்படும். இது பஞ்சப்படி அல்ல. கெஞ்சிக் குனிந்து கேட்கும் பிச்சையல்ல; அவர்கள் அரசாங்கத்திடம் வேலை செய்து கூலி பெறுகிறார்கள். அரசாங்க நிர்வாகத்தின் விளைவாக விலைவாசிகள் தாறுமாறாக ஏறுகிறபொழுது, அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மற்ற மற்றப் பண்டங்களின் விலை உயர்வுக்குத் தக்க அளவு எங்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்பது நியாயம். நாம் அவர்களுக்குக் கொடுப்பது நியாயப்படி. அவர்கள் கேட்கின்ற நியாயத்திற்கேற்ப, நிதிநிலைமை மட்டும் வசதியாக இருந்திருந்தால் என்னைவிட தாராள மனப்பான்மை உடையவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆகையால் அவர்களுக்குத் தரப்பட்ட ஊதிய உயர்வு அல்லது நியாயப்படி காரணமாக ஏற்பட்ட ஒரு நிலைமையினால்தான் நமக்கு விழுந்துள்ள 7 கோடி ரூபாய் துண்டில் மிக முக்கியமான அளவு 6.68 என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு முறை அவர்களுக்கு நியாயப்படியை உயர்த்திக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையில் செய்யப்பட்டிருக்கிற காரியத்தின் விளைவாக விழுந்திருக்கிற துண்டு நியாயம் மட்டும் அல்ல. இந்தத் தடவை கேரளத்திலே அமைந்திருக்கிற அரசு சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டிலும் துண்டு விழுந்திருக்கிறது. கேரளத்தில் 6.68 கோடி அளவுக்குத் துண்டு விழுகின்ற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். மேற்கு வங்காள சர்க்கார் 6.40 கோடி அளவுக்குத் துண்டு விழுகின்ற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். பீகாரில் 3.06 கோடி என்ற அளவுக்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். குஜராத்தில் 1.30 கோடி அளவுக்குத் துண்டு விழுகிற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஹாண்டே ஒரிஸாவைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் துண்டு விழுகின்ற பட்ஜெட்டைச் சரிகட்டி கொடுத்திருப்பார்களானால், அவர்கள் எவ்வாறு சரிக்கட்டினார்கள் என்கிற அந்த

வித்தையைக் கற்றுக்கொள்ள ஒரு முறை ஒரிஸாவுக்குச் சென்று வர வேண்டுமென்று நானும் விரும்புகிறேன். இன்று நமது பட்ஜெட்டில் துண்டு விழுந்திருப்பது வருந்தத்தக்கது அல்ல.

ஆனால், இதிலே முக்கியமான ஒரு பிரச்சினையைப்பற்றி அடுத்த முறையாகிலும் நமது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்குத் தேவைப்படுகின்ற திட்டங்கள், நம்மால் ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள், அல்லது அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையான திட்டங்கள், இவற்றை எடுத்துச் செயல்படுத்துகிறபோது நிதிநிலை பற்றாக்குறை ஏற்படுமானால், நமக்கு வேறு ஏதாவது இடையூறுகள் ஏற்படுமானால், அந்த இடையூறுகளை—பற்றாக்குறையை—நீக்குவது மத்திய சர்க்காரின் இன்றியமையாத கடமை என்பதைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் நாம் வலியுறுத்த வேண்டும். நம்முடைய டாக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'அடிக்கடி மத்திய சர்க்காரிடம் பணத்திற்குப் போகாதீர்கள்' என்பதாக. நீண்ட காலமாக அரசியல் வட்டாரத்தில் ஒரு தவறான கருத்து உலவுகிறது. மத்திய சர்க்கார் என்கிறபோது, மத்திய சர்க்கார் பணம் என்று தனியான கணக்கில் பணம் எதுவும் இல்லை. நாட்டினுடைய பணம்தான் ஒரு வகையில் மத்திய சர்க்காரிடத்தில் போகிறது. இன்னொரு வகையில் மாநில சர்க்கார்களுக்குப் போகிறது. மத்திய சர்க்காரின் பணம் என்று தனியாக எதுவும் இல்லை. ஆகையால் இன்றைக்கு யாரும் மத்திய சர்க்கார் தங்களுடைய சொந்தக் கணக்கிலிருந்து பணம் கொடுப்பதாகக் கருதத் தேவையில்லை. நம்முடைய நாட்டின் பணத்தில் ஒரு பகுதியை அவர்கள் முடக்கியிருக்கிறார்கள். அப்படி முடக்கி வைத்திருக்கிற பணத்தில்தான் ஒவ்வொரு மாநில அரசும் பணம் கொடுங்கள் என்று கேட்கின்றன. அப்படி மாநில அரசுகள் கேட்கின்ற நேரத்தில் அந்தத் தொகைக்குக் கணக்குப் பார்ப்பதை விட முன்னாலே வாங்கியதைக் கொடுத்தார்களா? முன்னாலே வாங்கியதற்கு வட்டி கட்டினார்களா? குறிப்பிட்ட தவணைத் தொகையைக் கட்டினார்களா? என்று பார்ப்பதைவிட—"Not only from the Accountant's point of view or the Banker's point of view"—'நாட் ஒன்லி' என்றுதான் குறிப்பிட்டேன்—'நாட் அட் ஆல்' என்று குறிப்பிடவில்லை. காரணம், கணக்கே பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அதை ஒன்றை மட்டுமே கருத்தில்கொண்டு பார்க்காமல் முன்னேற்றகரமான திட்டங்களை எந்த அரசு நடத்திக்கொண்டு வருகிறதோ, அந்த அரசுக்குச் சற்று சலுகைகளையும், வசதிகளையும் கூட்டித் தருவதை மத்திய சர்க்கார் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கொள்கையைக் கொண்டிருப்பார்களே யானால், நமக்கு இத்தகைய இக்கட்டான நிலைமை இவ்வளவு வேகமாக வந்திருக்காது. ஆகையால் இதுபற்றி மத்திய சர்க்காரிடத்தில் நாம் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைக்கிற நேரத்தில் இந்தச் சபை முழுவதன் பிரதிநிதியாக நான் பேசு





வதற்கு நீங்கள் அனுமதித்து எனக்கு ஆதரவு தர வேண்டுமென்று உங்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இதை ஒரு கட்சியின் கோரிக்கை என்று எடுத்துக்கொண்டு போவதை விட, இந்தச் சட்டமன்றத்தின் கோரிக்கை என்று எடுத்துக் கொண்டுபோயாதால் நிச்சயமாக அதற்கு நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை வைத்திருக்கிறேன். இந்தகைய துண்டு விழுகின்ற நிலைமையை, பற்றாக்குறை ஏற்படுவதை, நீக்குவதற்கான முயற்சிகளில் நீங்கள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த இடைக்கால பட்ஜெட் விவாதத்திலே கலந்துகொண்ட எல்லா உறுப்பினர்களும் சொன்ன கருத்துக்களை நான் வெகு கவனமாகக் குறித்து வைத்திருக்கிறேன். குறித்து வைத்துக் கொண்டதன் நோக்கம் இன்றைக்கே ஒவ்வொன்றுக்கும் உடனடியாகப் பதில் சொல்ல வேண்டும் என்பது அல்ல. உண்மையிலே நான் ஏராளமான பல புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை பேசும்போது மிக எளிதில் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட கருத்துக்களையெல்லாம் நான் ஒழுங்குப்படுத்திப் பார்ப்பேன். உறுப்பினர்கள் பேச்சிலேயேகூட முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்து ஏதாவது இருந்தால் அதைத் தனியாக அவர்களிடத்தில் எடுத்துச் சொல்வேன். என்னுடைய பேச்சில் இன்றையதினம் உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்ன விஷயத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவைகளையெல்லாம் நான் என் மனதில் குறித்து வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து எந்தெந்த முறையில், நல்ல கருத்துக்களை யார் சொல்லியிருந்தாலும் அவற்றைச் செயலாக்குவதற்கு நான் தயங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது இடைக்கால பட்ஜெட்டிலே 7.70 கோடிக்கு எப்படித் துண்டு விழுந்திருக்கிறது என்ற விவரத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் ஊழியர்களுக்கு இரண்டாவது முறையாக ஊதியத்தைக் கூட்டிக் கொடுத்திருப்பதன் காரணமாக 5.9 கோடி ரூபாய் நாம் அதிகம் செலவழிக்க வேண்டி வந்தது. நம்மிடமிருந்து மத்திய சர்க்காரிடம் போய்ச் சேருகின்ற வருமான வரியில் நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு குறைந்திருப்பது 0.4 கோடி ரூபாய். அதாவது 4 லட்சம் ரூபாய். அதைப்போலவே மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து குறைத்துவிட்டிருப்பது 2·2 கோடி ரூபாய். இந்தவகையில்தான் இந்தத் துண்டு விழுந்திருக்கிறதே தவிர ஏதாவது நிர்வாகத்தில் உள்ள கோளாறினால் ஏற்பட்டிருக்குமானால், நண்பர் சொன்னமாதிரி அந்த இலாகாவையே எடுத்துவிடலாமா? இந்த இலாகாவையே எடுத்துவிடலாமா? என்பதில்தான் என் மனம் சென்றிருக்கும். ஆயினும் அதைப்பற்றியே நான் கவனம் செலுத்தப் போவதில்லையென்று நினைத்துவிட வேண்டாம், அதைப்பற்றியும் கொஞ்சம் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் விரிவான முறையில் சொல்ல வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பேசும்போது, "நாங்கள் எங்களுடைய கட்சியிடத்திலும் சொன்னோம். பல காலமாகச் சொல்லி வருகிறோம். எங்கள் கட்சி அரசாங்கந்தான் நடைபெற்று வந்திருக்கிறது என்றாலும், இதுவரை நாங்கள் சொன்ன காரியம் நடக்கவில்லை. உங்கள் ஆட்சியிலாவது எங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நீங்கள்தான் நிறைவேற்றிக் கொடுப்பீர்கள் என்று மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். யாரோ ஒருவர் சாத்தனூர் திட்டத்தைப்பற்றிச் சொன்னார். புதுக்கோட்டை இளைய அரசர் கூட 'நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்சினை இது, நீங்கள் இதை விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும்' என்று குறிப்பிட்டார். அவர்களுடைய கோரிக்கையில் குறிப்பிட்ட இரண்டு வார்த்தைகள் எப்படிப் பொருந்தும் என்பது எனக்குப் புலப்படவில்லை. நெடுங்காலமாக இருந்து வருகிற பிரச்சினை என்கிறார்கள். விரைவாக முடித்துக் கொடுங்கள் என்கிறார்கள். கொஞ்சம் நல்லெண்ணத்தோடு சொல்வதாக இருந்தால் தனித்தனியாக என்னிடம் வந்து அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லி விவாதித்து அதை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை நீக்குவதற்கு எனக்கு உதவியாக இருக்கலாம். எல்லோரையும் சொல்லவில்லை. அந்தப் பட்டியலில் எனது நண்பர் கருத்திருமனைச் சேர்க்கவில்லை. புதிதாக வந்தவர்கள், தட்டிக்கொடுக்கலாம், ஓடினால் விரட்டும் என்று கருதிச் சொன்னார்களோ என்னமோ, என்னுடைய இயற்கையான சுபாவமே பல காரியங்களைச் செய்யாது விடுவேனே தவிர, செய்கிற காரியம் நல்லதாக அமையும். செய்கிற காரியம் தவறான காரியமாக இருக்கக் கூடாது என்பதில் நான் பயிற்சி பெற்றவன். விரைவாகச் செய்யுங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதை நான் எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்றால், அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நிர்வாகத் திறமை பெற்ற அவர்களால் எவ்வளவு காலம் ஆகக் கூடுமோ அதைவிட விரைவாகச் செய்யுங்கள் என்று குறிப்பிடுகிறார்கள் என்றே எடுத்துக்கொள்கிறேன். நாளையோ, அதற்கு அடுத்த நாளோ அந்தக் காரியங்களைச் செய்துவிடுவேன் என்பதாக ஒன்றும் நான் வாக்களிப்பதற்கு இல்லை.

அடுத்து, எதிர்க்கட்சியினர் பேசும்போது மக்கள் எங்களிடம் ஏதோ ஏமாற்றம் அடைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மக்கள் எங்களிடம் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்களா? அல்லது மக்களிடம் நீங்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறீர்களா?—மக்கள் எங்களிடம் ஏமாற்றம் அடைந்திருப்பதாகப் பேசுவது நாட்டுக்கு நல்லது அல்ல. 'என்னிடத்தில் அவர்களுக்கு ஏமாற்றம் இல்லை; உங்களிடத்தில்தான் அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்' என்று நான் சொல்ல முடியும். இப்படி நாம் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால், 'ஏதடா, நம்மை ஏமாற்றாத ஆட்களே கிடையாதுபோல் இருக்கிறது' என்கிற தவறான



எண்ணம் மக்களிடத்தில் பரவிவிடும். நேற்றையதினம் பேசும்போதுகூட, எதிர்க்கட்சியிலிருந்த நாங்கள் எங்களது குரல் வளத்தாலும், பேச்சுத் திறமையாலும் மக்களைக் கவர்ந்துவிட்டோம் என்று ஒருவர் குறிப்பிட்டார். இந்த இரண்டும் எங்களுக்கு மட்டும் ஆண்டவன் கொடுத்த வரப்பிரசாதம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் என்ன குரல் வளத்தில் குறைந்தவரா? நாளையோ மறுநாளோ நீங்கள் நண்பர் விநாயகம் அவர்களுடைய பேச்சைக் கேட்கப் போகிறீர்கள். அவர் என்ன குரல் வளத்தில் சளைத்தவரா? அவரது குரல் சாதாரணக் குரலா? குரல் வளத்தாலும், வசீகரமான பேச்சாலும் நாங்கள் மக்களைக் கவர்ந்து விட்டோம் என்று நீங்கள் சொல்வது தவறான கணக்கு. இத்தனை காலமாக வளர்ந்து வளர்ந்து அதைத்தான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். நாங்கள் வளர வளர, எங்களுடைய வளர்ச்சிக்கான உண்மைக் காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல் 'அடுக்கு மொழியால் வளருகிறார்கள், தமிழால் வளருகிறார்கள், சுவையான பேச்சால் வளருகிறார்கள், அழகான பேச்சால் வளருகிறார்கள்' என்று சொல்லி வந்தீர்கள். அதே தவறை இப்போதும் செய்யாதீர்கள் என்று நான் உங்களுக்கு நண்பன் என்ற முறையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'அரிசியால் வளர்ந்தோம்' என்று சொன்னார்கள். மக்கள் ஏமார்ந்து விட்டார்கள் என்றார்கள். கேரளத்தில் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்கள் ரூபாய்க்கு 3 படி அரிசி தருகிறேன் என்று சொன்னார்கள்? ஒரிஸாவில் ரூபாய்க்கு 3 படி அரிசி என்று சொன்னார்கள்? மேற்கு வங்காளத்தில் ரூபாய்க்கு 6 படி அரிசி என்று சொன்னார்கள்? அங்கெல்லாம் எப்படி காங்கிரஸ் ஆட்சி வீழ்ச்சியுற்றது? அடித்திருப்பது புயல் என்று சொன்னார்கள். அது புயல் அல்ல என்றாலும், ஒரு கட்சி சர்க்காரை, இன்னொரு கட்சி சர்க்காரோடு ஒப்பிட்டு பார்த்துக்கொள்கிற சந்தர்ப்பத்தை மக்கள் விரும்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டதே தவிர உங்களுடைய தகுதியைப் பார்த்து, உங்கள் திறமையைப் பார்த்து நீங்கள் தகுதியற்றவர்கள் என்று உங்களைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பதாக, நான் என்ன— உங்கள் பகைவனும்கூடச் சொல்லமாட்டான். எப்போதாவது, ஏதாவது கூட்டத்தில் நீங்கள் பகிரங்கமாக எங்களைத் தாக்கிப் பேசினால் அதற்கு வேறுவகையில் எங்கள் தரப்பிலிருந்து பேசுபவர்கள் வாதத்திற்காக வேண்டுமானால் கூறலாம். இன்றையதினம் உண்மையைச் சொல்லப்போனால், மக்கள் எங்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதைவிடப் பன்மடங்கு உங்களிடத்தில் அதிகமாக எதிர்பார்த்தார்கள். எங்களிடத்தில் சோறு கிடைக்காதா என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உங்களிடத்திலோ தேனும் பாலும் ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். உங்களது ஆட்சியிலே தேனும் பாலும் ஓடும், குடம் ஒன்றுதான் பாக்கி— எடுத்துக்கொண்டு வரலாம் என்று பார்த்தார்கள். இப்படி நாங்கள் உங்களையும், நீங்கள் எங்களையும் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு பேசலாம். ஆனால் பயன் இராது. நீங்கள் 20 வருடம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள். நாங்கள் ஒரு ஐந்து வருடம்தான் வேலை செய்யட்டுமே என்பதாக நீங்கள் உங்களது அனுபவத்தை,

நிர்வாகத் திறனை எங்களுக்கு எடுத்துச்சொல்லி நாம் இருவரும் இணைந்து நாட்டு நலனுக்குப் பணியாற்ற உதவ வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய நண்பர், எதிர்க்கட்சித் தலைவரை நண்பர் என்றே அழைத்துவிடுகிறேன், சில சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லவும் மறந்துவிடுகிறேன், அதற்காக அவர் வருத்தப்படமாட்டார் என்று நம்புகிறேன். எனது நண்பர் தம்முடைய உரையை முடிக்கும் போது ஒரு வாசகம் சொன்னார்கள். 'இது அவ்வளவும் அரிசியும் அரசியலும் கலந்ததுதான்' என்று சொன்னார்கள். ஒரு நாட்டினுடைய மக்கள் அடிப்படையாகக் கேட்பது சோறு. யாரோ ஒரு சைவர் சொன்னதாக நினைவு. அந்தச் சைவரிடம் 'சொக்கப்பர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டதற்கு, 'சோற்றில் இருக்கிறார்' என்று சொன்னாராம். சோற்றிலே சிவலிங்கமே இருக்கும்போது அரசியல்வாதிகள் இருப்பதில் ஒரு தவறும் இல்லை. ஆகையால் சோற்றுப் பிரச்சினையைத் தீர்ப்பதை இந்த அரசு தன்னுடைய முக்கியமான கருத்தாகக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நிலவரி நீக்கப் பிரச்சினையைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டது. "நாங்கள் நிலவரியை நீக்கிவிடுவது என்று அறிவித்துவிட்டோம். நீங்கள் அந்தக் கொள்கையை ஆதரிக்கின்றவர்களாயிற்றே. அப்படியிருக்க, உங்களுடைய இடைக்கால பட்ஜெட்டிலே அதைப்பற்றி என் ஒன்றும் காணோம்?" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்பொழுது என்னுடைய பக்கத்திலே உள்ளவர்கள் 'நாங்கள் சொன்னபொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்று கேட்டார்கள். வேறு யாராகவாவது இருந்தால் நாங்கள் அப்படிச் சொல்லவில்லையென்று சொல்லுவார்கள். ஆனால் என்னுடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள், 'ஆமாம்; அப்படித்தான் அப்பொழுது சொன்னோம்; இப்பொழுது இப்படிச் சொல்கிறோம்' என்று சொன்னார்கள். அது சுருக்கமான அரசியல். காங்கிரஸ்காரர்கள் சர்க்காரைப் போடும்போது நாங்கள் வேண்டாமென்று சொன்னோம்—கேட்கவில்லை, அதை நீக்கவில்லை. அப்பொழுதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் என்பதெல்லாம் என்னிடத்திலே இருக்கிறது. ஆனால் கடிகாரம் என் எதிரிலே இருந்து நேரத்தை நினைவுபடுத்துகின்ற காரணத்தாலே நான் எல்லாவற்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இங்கே உள்ள அனைவரும் அவற்றைப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 'நிலவரியை எடுத்துவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடும் என்று கருதுகிறார்கள், அது தவறு' என்று சொல்லியிருக்கிறார். வேறு பல சூழ்நிலைகளின் காரணமாக சர்க்காரை எடுத்தபிறகு என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியினரிடம் சர்க்காரை எடுத்துவிட்டால் மட்டும் போதாது. நிலவரி முழுவதையும் எடுத்துவிட வேண்டும் என்று வாதாடியிருப்பார்கள். 1966-ம் வருடம், நவம்பர் இரண்டாம் தேதியன்று திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்கு காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பட்டவர்கள். அதிலே, 'நான் நிலவரியை எடுத்து



விடுகிறேன், ஆனால்'. . என்று தொடர்ந்து சிலவற்றைக் குறிப்பிடுகிறார். நம்முடைய நண்பர்கள் இந்த 'ஆனால்' என்ற வார்த்தைக்குப் பிறகு உள்ளதை விட்டுவிடுகிறார்கள். 'அதிலே ஏற்பட்டுள்ள துண்டுக்காக அரிசி வியாபாரம், நெல் வியாபாரம் அத்தனையையும் சர்க்கார் மேற்கொள்ளும். அப்படி சர்க்கார் மேற்கொண்டால் அதிலே கிடைக்கிற வருமானத்தை வைத்துக்கொண்டு இந்த 13 கோடியைச் சரிக்கட்டலாம்.' ஸ்டேட் ட்ரேடிங் ஆப் ஃபுட் கிரெய்ன்ஸ், லேண்ட் ரெவின்யூ என்ற இந்த இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. இது முன்பிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய கருத்து மட்டும் அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தும் அதுதான்.

'The Tamilnad Congress Committee, after a consideration of these two important problems in their various aspects, has recommended to Government to examine ways and means of abolishing land revenue coupled with State Trading in agricultural produce.'

நிலவரியை அடியோடு எடுத்து விடுங்கள் என்பதைக் கவனப்படுத்தி, 'எங்கள் சர்க்கார் சொன்னது' என்று சொந்தம் கொண்டாடுகிறவர்கள் இரண்டுக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இரண்டுக்கும் கட்டுப்பட்டவர்கள் நீங்கள் என்பதை உணரவேண்டும். நிலவரியை எடுத்துவிட வேண்டும் என்பதில் காங்கிரஸ் சர்க்கார் எந்த அளவுக்கு வேகமாக இருந்தது என்பதைத் திரு. பக்தவத்சலம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

'We should also bear in mind the need to provide for the continued maintenance of the existing framework of land records and registration which is of gerat value to the Government for purposes of economic planning and is of even greater value to the ryot as a record of his rights and title to land.'

ஆக, முன்னாலே இருந்த உங்களுடைய சர்க்கார் நிலவரியை எடுத்து விடுகிறோம் என்று வாக்குறுதி அளிக்கவில்லை. ஏனென்றால் பட்டா மாறுதல்கள், பட்டா குளறுபடிகள் இவற்றை எப்படித் தீர்க்கமுடியும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடைசியாக நம்முடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள், 'எனக்கு இதிலே இருந்து தெரிவது என்னவென்றால் இந்தத் தடவை நிலவரி வாங்கப்போகிறீர்கள்' என்றார்கள். உண்மை. என்னைவிடப் பெரியவரும், முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலமும் அந்த மாதிரித்தான் சொல்கிறார்கள். உயர்தர அதிகாரிகளை அமைத்து இதைப் பரிசீலித்துப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுது, 'நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து ஜூலை மாதத்தில் ரிப்போர்ட் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.